
வி. மைக்கல்கொலின்
பரசுராம பூமி
மகுடம் வெளியீடு

முழுக்க முழுக்க
தொன்மங்களையும்
மறை நூல்களையும்
மறுவாசிப்புக்குட்படுத்தும்
ஈழத்தின்
முதல் சிறுகதைத் தொகுப்பு

# பரதுராம பூமி

**வி. மைக்கல் கொலின்**

**மகுடம்**
இல.90, பார்வீதி,
மட்டக்களப்பு 30000
இலங்கை.

ISBN : 978 - 955 - 4041 - 08 - 0

**மகுடம் பதிப்பக வெளியீடு - 15**

● நூல் - பரசுராம பூமி - சிறுகதைத் தொகுதி ● ஆசிரியர் - வி.மைக்கல்கொலின் ● உரிமை - ஆசிரியருக்கு ● முதல் பதிப்பு - மே-2018 ● பக்கம்-112 ● வெளியீடு - மகுடம் பதிப்பகம் 90, பார்வீதி, மட்டக்களப்பு. 30000 ● தொ.பே. இல. 0774338878 ● உள் ஓவியங்கள் - இரா.குணசீலன் (கனடா) ● வடிவமைப்பு - அச்சு - வணசிங்கா அச்சகம், மட்டக்களப்பு. ● விலை - 300/=

● Book - Parasurama Boomi (short stories) ● Author -W.Michael Collin ● © Author ● First Edition - May 2018 ● Size - 1/8 ● Pages-112 ● Published by - Magudam Publication. 90, Bar Road, Batticaloa. ● Ph.No. 0774338878 ● Art by: R.Gunaseelan (Canada) ● email - magudammichael@gmail.com ● Printing - Wanasinghe Printers, Batticaloa ● Price - 300/=



திருகோணமலை

மண் தந்த மகாகவியும்

'நவீன தமிழ் இலக்கியத்தின் மாமேதை'

எனவும்

போற்றப்படும்

'பிரமிள்' என்கின்ற

தருமு சிவராமுவுக்கு....

# csNs

உரைகள்


| | |
|---|---|
| கவிஞர். அ.ச. பாய்வா | 07 |
| பேராசிரியர் சி. மௌனகுரு | 10 |
| பேராசிரியர் செ.யோகராசா | 26 |
| ஜிஃப்ரி ஹாஸன் | 30 |
| வி.மைக்கல் கொலின் | 38 |


சிறுகதைகள்


| | |
|---|---|
| வரம் | 43 |
| குருஷேத்திரம் | 49 |
| புதிய ஏற்பாட்டின் எழுதப்படாத பக்கங்கள் | 55 |
| ராவணாபுரி | 61 |
| யாருமிங்கே தீர்ப்பிடலாம் | 73 |
| பரசுராம பூமி | 77 |
| ஓர்மம் | 81 |
| ஞானம் | 87 |
| எல்லாம் நிறைவேறிற்று | 97 |


பார்வைகள் - பதிவுகள்


| | |
|---|---|
| ச.மணிசேகரன் | 105 |
| கந்தையா தவராஜா | 105 |
| வாசுகி குணரத்தினம் | 108 |

# பதிப்புரை

## ஒன்றைச் சொல்லிப் பிறிதொன்றாய் மொழியும் சர்ரியலிசப் பாணிக் கதைகள்.

---

**tp.**மைக்கல் கொலின்

ஈழத்து இலக்கியப் பரப்பில் தவிர்க்கவியலாத பெயர். திருகோணமலையைப் பிறப்பிடமாகவும், சமகாலத்தில் மட்டக்களப் பினை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் திருகோணமலை, மட்டக்களப்பு என்ற இரு மாவட்டங்களின் கலை இலக்கிய வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் ஆற்றிவரும் காத்திரமான பணிகள் காலம் அறிந்தது.

கவிஞர்,
எழுத்தாளர்,
குறும்பட இயக்குனர்,
சஞ்சிகையாளர்,
பத்திரிகையாளர்,

வெளியீட்டாளர் என பல்பரிமாணத் தளங்களில் இயங்கி வருபவர். இயங்குதல் என்பதற்கப்பால் மேற்குறித்த துறைகளில் தனது ஆளுமையை பதித்து வருபவர்.

1992களில் வெளிவந்த இவரது ‘என் பிரிய ராஜகுமாரிக்கு’ என்ற புதுக்கவிதைத் தொகுதியே திருகோணமலை மண்ணில் அச்சில் வெளிவந்த முதல் புதுக்கவிதைத் தொகுப்பாகும்.

கிழக்கு மண்ணில் இருந்து முதன்முதலாக தொலைக்காட்சி நாடக நெறியாள்கையில் “டிப்ளோமா” முடித்தவரும் இவரே. இதன் நீட்சியாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடாத்திய தொலைக் காட்சி நாடக பிரதியாக்கல் போட்டியில் அகில இலங்கை ரீதியாக பரிசு பெற்ற “மரபை மீறும் மானுடம்” என்ற தனது நாடக பிரதியினை 1993ல் குறும்படமாக நெறியாள்கை செய்தார். இதுவே திருகோணமலை யின் முதல் குறும்படம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

திருகோணமலையில் 1985 - 1995 வரை இவர் வெளியிட்ட “தாகம்” கலை இலக்கிய புரட்சிகர முற்போக்கு இதழே திருமலையில் தொடர்ந்து பத்து வருடங்களாக வெளிவந்த ஒரே இலக்கிய

இதழாகவும் ஒரு இளம் எழுத்தாள குழாமை உருவாக்கிய பெருமையும் கொண்டது.

மட்டக்களப்பில் இருந்து 1998இல் வெளியான “தினக்கதிர்” வாரமலர் 2000 இல் வெளிவந்த “தினக்கதிர்” நாளிதழ் ஆகியவற்றின் உருவாக்கத்தில் முக்கிய பங்காற்றி முறையே அதன் பிரதம ஆசிரியர், இணை ஆசிரியர் ஆகிய பதவிகளை வகித்தவர்.

2012 தொடக்கம் மட்டக்களப்பில் இருந்து “மகுடம்” என்ற கலை இலக்கிய சமூக பண்பாட்டுக் காலாண்டிதழை வெளியிட்டுவரும் மைக்கல் கொலின் வெளியீட்டாளராக தாகத்தின் மூலம் ஆறு நூல்களையும் மகுடத்தின் மூலம் பதினான்கு நூல்களையும் இதுவரை வெளியிட்டுள்ளார்.

மகுடத்தின் பதினைந்தாவது வெளியீடாக அவரது “பரசுராமபூமி” என்ற இச்சிறுகதைத் தொகுதியை வெளியிடுவதில் பெருமை கொள்கிறோம்.

இந்த நூற்றாண்டுச் சூழலில் வாழ்வு அபத்தமாகிவிட்டது. மனிதனை ஓட ஓட விரட்டுகிறது. அவசர அவசரமாய் சாப்பிட்டு, அவசர அவசரமாய் வெளியேற்றி, கிடைத்த பொழுதை அவசரமாக அனுபவிக்க வழிதேடுவதே அன்றாட வாழ்வாகிப் போனது. நாற்புறமும் சுவர் எல்லாமே இடிக்கிறது. கிழக்கிலும் நகர முடியவில்லை. மேற்கிலும் நகரமுடியவில்லை மேலே கூரை இடிக்கிறது. அவனை ஆற்றுப்படுத்துவது யாது? எது? இலக்கியமா இல்லை இலக்கிய மென்கிற “எஸ்கேப்பிஸமா”!

மன முதிர்ச்சியும் கனிவும் கொண்டவர் தாம் சிந்தனை உலகிலும் செயல்திறனிலும் முன்னின்று வருகிறார்கள்.வரமுடிகிறது. சரி, இப்படிச் சொல்லி வைத்த உண்மைகளை நம்மை மாதிரி எல்லோருமே கடைப்பிடித்து ஏன் உய்வு பெறக்கூடாது? இதில் தான் ஆதிமனது குறுக்கிடுகிறது. இங்குதான் பிரபஞ்ச ஒழுங்கின்மையைக் கண்டு கலகம் புரிய வந்தவன், காரியமாற்ற வந்தவன், இலக்கியம் புரிய வந்தவன் அந்தப் பிரபஞ்ச ஒழுங்கின்மைக்கே பலியாகி விடுகிறான்.

பிரபஞ்ச ஒழுங்கைக் காட்டிலும், பிரபஞ்ச ஒழுங்கின்மைதான் அதிக செல்வாக்குடையது. பரந்து விரிந்த தளம் கொண்டது. அவை காட்டுக் குதிரைகள் போல சுயேச்சையானவை. கட்டுக்கடங்காதவை. திமிறி அலைபவை. அதற்கு பலியாகாதிருக்க ஒரு கொடுப்பினை வேண்டும். மைக்கல் கொலினின் இத்தொகுப்பும் இத்தகையதே.

ஒவ்வொரு காலத்திலும் யாரோ ஒரு புத்திசாலி ஒரு விடயத்தைப்

புதிதாகவோ, பூடகமாகவோ சொல்லி வைக்கிறான். அவ்வாறானதொரு புராண இதிகாசங்கள் மீதான மீள்வாசிப்பாக இத்தொகுப்பைக் கருதலாம்.

நம்காலத்து வாழ்வு, நம் காலத்துச் சிக்கல், நம் காலத்து அவஸ்த்தை, நம் காலத்துத் தத்தளிப்பு இவையே இந்த மறுவாசிப்புக் கதைகளின் கருப்பொருள்.

இவ்வளவு காலமாகச் சொல்லப்பட்டவற்றிலிருந்து கடந்து வந்து புதிதாக இதிகாச புராணங்களைக் கண்டு கொள்ளும் முறை.

முப்பது நாற்பதாண்டு காலம் எழுதிவரும் ஒருவனால் கூட எழுதத் தொடங்கிய நாளிலிருந்த மொழியில் எழுதிக் கொண்டிருக்க முடியாது.

புதியவற்றுக்கு இணையாகத் தன் மொழியையும் மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தமும் நேர்கிறது அவனுக்கு. துர்க்கை மகிஷாசுரனைக் கொல்லும் ஒவ்வொரு தடவையும் அவன் தன்னை உயிர்ப்பித்துக் கொள்கிறான். வேறு வழியில்லாமல் கடைசியில் துர்க்கை மகிஷாசுரனை மணந்து கொள்கிறாள் என்பதும் தன்னைக் கற்பழித்தவனையே சீதை மணந்து கொள்கிறாள் என்பதும் நாராயணனும் இரணியனும், மனுவும் மாக்ஸூம் ஒன்றெனப்பதும் இலக்கியத்துக்கு எல்லையில்லை என்பதை உணர்த்துபவை. இந்த எல்லை கடந்த இலக்கி யத்தில் நிதானமும் தேடலும் மைக்கல் கொலினின் வாழ்க்கைப் பார்வை எனலாம். வாழ்க்கை ஒரு நீண்ட பயணம். அதற்கு எல்லையில்லை. நின்று நிதானித்துச் செல்லும் அவர் வழியில் கடவுளும் தென்படுகிறார். ஆனால் எங்கும் தங்கிவிடக் கூடாதென்பதற்காகக் கடவுளையும் கடந்து செல்கிறார்.

ஒன்றைச் சொல்லிப் பிறிதொன்றாய் மொழியும் “சர்ரியலிஸ”ப் பாணியையும் இத்தொகுப்பில் தரிசிக்கலாம்.

ஈழத்தில் மனிதனின் ஆதார உணர்வுகளை மறுவாசிப்புக்குள்ளாக்கும் முதற் சிறுகதைத் தொகுதி இது என்பதும் கணிப்புக்குரியது,

**கவிஞர். அ.ச.பாய்வா**
(செயலாளர் – மகுடம் கலை இலக்கிய வட்டம்)

அடக்கப்படும் ஓரினத்தின் கொதிநிலை எழுத்தாக

# மைக்கல் கொலினின் பரசுராம பூமி

“ எழுத்தாளன் இறந்து விட்டான். அவன் எழுத்துக்கள்தான் எஞ்சியுள்ளன, அந்த எழுத்துக்களுக்கு வாசகர்தரும் வியாக்கியானங் களால் அந்த எழுத்துக்கள் வாழுகின்றன,” என்னும் கருத்து நவீன விமர்சகர்களால் முன் வைக்கப்படுகிறது. இக்கூற்றில் பெரும் உண்மையுண்டாயினும் எழுத்தாளன் அவ்வளவு லேசில் இறந்து விடமாட்டான், அவனை யாரும் லேசில் சாகடித்து விடவும் முடியாது. எழுத்தாளன் தன் எழுத்துக்களுக்கூடாக வாழ்வான், அவன் சிந்தனைகள் அவனது அவதானம், அவனது உலக நோக்கு என்பன அவன் உருவாக்கும் படைப்புக்களுக்கூடாக பாத்திரங்களுக்கூடாக வாழ்ந்து அவனை என்றும் வாழ்வித்துக்கொண்டே இருக்கின்றன.

ஆகவே எழுத்தாளன் இறப்பதில்லை

இங்கு நான் பரசுராமபூமி என்ற இப்புனைவை எழுதிய எழுத்தாளனான மைக்கல் கொலின் பற்றியும், அவ்வெழுத்தாளனின் உலக நோக்கு சிந்தனைகள் அவதானம் பற்றியும், பரசுராமபூமி என்கின்ற அவனது படைப்பு பற்றியும் என் கருத்துக்களை உங்களோடு பகிர விரும்புகிறேன்

**மைக்கல் கொலின்**

மைக்கல் கொலின் எனக்கு பல்கலைக்கழக மாணவனாக 1992 இல் அறிமுகமாகின்றான். நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் அமர்ந்திருந்த பெரிய வகுப்பு அது.

பாடம் நுண்கலை

நானே பாடம் எடுக்கிறேன். அப்போது கிழக்குப்பல்கலைக்கழக கலை வர்த்தக பீடங்கள் மட்டக்களப்பில் 50 நியூ றோட்டில் அமைந் திருந்தன, சிங்கள மகாவித்தியாலயத்தின் ஒரு பெரிய ஹாலில்தான் விரிவுரைகள். விரிவுரையின் ஆரம்பத்தில் மாணவர்களிடம் வாசிப்பின்

அவசியத்தை வலியுறுத்தி பல்கலைக்கழக மாணவர்கள் நிறைய வாசிக்கவேண்டும் பல்துறைகளிலும் அறிவு பெற வேண்டும் என்று கூறி ''உங்களில் ராகுல்ய சங்கிருத்யாயனின் வால்காவிலிருந்து கங்கை வரை எனும் நூலை வாசித்தவர் யாராவது இருக்கிறீர்களா? '' எனக் கேட்கிறேன்

அந்த நூல் மிகப்பிரசித்தமான நூல் இந்தி மொழியில் எழுதப் பட்ட இந்நூல் பல்வேறுமொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட நூல். தமிழிலும் இது 1960களில் மொழி பெயர்க்கப்பட்டுவிட்டது. இந்நூல் கி.மு.6000 ஆண்டிலிருந்து கி.பி 1942 வரை ஏறத்தாள 8000 வருட இந்தோ ஐரோப்பிய சமூகத்தின் வரலாற்றையும் பொருளாதார சிந்தனை வளர்ச்சியையும், ஆட்சிமுறைகளின் நிறை குறைகளையும் வரிசையாக எடுத்துக்கூறும் புனைகதைபோல தோற்றமளிக்கும் நிஜக்கதைகள் அடங்கிய ஓர் நூலாகும் 20 கதைகளில் இவ்விடயங்கள் எடுத்துக் கூறப்படுகின்றன. ஒருவகையில் இந்திய வரலாற்று நூலாகும். மாணவர் மத்தியிலிருந்து பதில் இல்லை. நிசப்தம் நிலவுகிறது மீண்டும் அதே வினாவை வினவுகிறேன்

ஒரே ஒரு மாணவனின் கை உயர்கிறது. அந்தக் கைக்குச் சொந்தக்காரன்தான் இந்த மைக்கல் கொலின் பின்னர்தான் அறிந்தேன் மைக்கல் கொலின் கலைப்பீட மாணவன் அல்ல வர்த்தக முகாமைத்துவ பீட மாணவன் என்று. முகாமைத்துவம் கற்கும் மாணவன் ஒருவன் அறிதல் ஆர்வம் காரணமாக நுண்கலை வகுப்புக்கு வந்துள்ளான். தான் கற்கும் துறைக்கும் அப்பால் சென்று மேலும் அறிய விரும்புகிற மாணவன் என்ற பிம்பம் கொலினைப்பற்றி என் மனதுள் அன்று வேரூன்றியது.

மாணவப் பருவத்தில் அப்பையனை அவதானிக்கலாயினேன். பல்கலைக்கழக தமிழ்ச்சங்க சஞ்சிகையின் ஆசிரியனாக, இலக்கிய கூட்டங்களில் பங்கு கொண்டு தன் கருத்துக்களை முன் வைப்பவனாக, 'தினக்கதிர்' பத்திரிகையின் பிரதம ஆசிரியனாக என அம்மாணவனின் எழுத்துத்துறை பல திசைகளில் வளர்ந்தது. அந்த வளர்ச்சியின் எல்லைகள் அகன்றன.

அந்த அகற்சியின் ஒரு கட்டமே 'மகுடம்' சஞ்சிகை. அச்சஞ்சிகை யிலும் வேறுபல பத்திரிகைகளிலும் அம்மாணவன் இப்போது சிறு கதைகள் எழுதுகிறான்.. இனி அவனை நாம் 'அவர்' என்றழைக்கலாம்.

மாணவப்பருவத்தில் பெற்ற எழுத்துப் பயிற்சி அம்மாணவருக்கு இப்போது நன்கு உதவி புரிகிறது.

சித்திரமும் கைப்பழக்கம் அல்லவா? நல்ல எழுத்தும் எழுத்துப் பயிற்சி மூலமாக வருவதே. எழுத எழுத எழுத்தில் ஓர் நளினம் வரும். ஓர் அழகும் கவர்ச்சியும் தோன்றும் மொழி கைக்கட்டி நின்று சேவகம் புரியும்.

எழுத்துப்பயிற்சி மாத்திரம் ஓர் இலக்கியப்படைப்புக்குப் போதுமா? இல்லை அனுபவம், கூரிய அவதானம், பல்துறை அறிவுப்பயிற்சி, நல்ல படைப்புகளுடனான பரிட்சயம், எழுதியதை மீண்டும் மீண்டும் செம்மை செய்தல் அதாவது அழித்து அழித்து மீண்டும் எழுதல். தேடல் நோக்கு அத்தோடு இடைவிடாத கடுமையான உழைப்பு என்பனவும் நல்ல படைப்புக்கு அவசியம்.

இவையெல்லாம் மைக்கல் கொலின் என்ற அந்த மாணவரிடம் மெல்ல மெல்ல வளர்ந்து வந்ததை அருகிலிருந்து பார்த்தவன் நான், அதன் இன்னொரு வளர்ச்சியை அண்மைக்காலமாகக் காண்கிறேன். அதுவே அவரது மகுடம் சஞ்சிகை.

அதில் வரும் கதைகள், கட்டுரைகள், விவாதங்கள் என்பன இன்று பலராலும் அவதானிக்கப்படுகின்றன. முக்கியமாக அவர் இலக்கிய உலகில் வித்தியாசமானவர்களுக்கு சிறப்பிதழ் வெளியிடுகிறார். தனிநாயகம் அடிகள் சிறப்பிதழ், தருமு அரூப் சிவராம் சிறப்பிதழ், எஸ். பொன்னுத்துரை சிறப்பிதழ், என்பன குறிப்பிடத்தக்கன

கடல் கடந்தும் அச்சஞ்சிகை தனக்கென வாசகர்களை கொண்டுள் ளது. இம்மலர் தயாரிப்பின் மூலமும் நாம் அவரோடு நடத்தும் உரையாடல்கள், அவரது செயற்பாடுகள், அவரது எழுத்துக்கள் மூலமும் மைக்கல் கொலினின் சிந்தனைபோக்குகளையும் அவரது உலகநோக்கையும் நாம் அறிகின்றோம்.

**மைக்கல் கொலினின் சிந்தனைபோக்கு**

இவர் அடிப்படையில் தமிழ்த் தேசியத்தின்மீது நம்பிக்கை கொண்டவர். தமிழ்ச்சமூகம் ஏற்றத்தாழ்வுகள் இல்லாத, ஒருவரை ஒருவர் அடக்காத சமூகமாக வாழவேண்டும் என்று கனவு காண்பவர், அப்படிக் கனவு காணும் முற்போக்குச் சிந்தனையினர், புதிதாக வந்த நவீன, அதி நவீன இலக்கியக்கோட்பாடுகளை விமர்சனத்தோடு ஏற்றுக்கொள்பவர்

அவர் கற்கும் காலங்களில் தீவிர தமிழ்த்தேசிய ஆதரவாளராக இருந்தார். அவரது பரந்த வாசிப்பு அவரைப் பல்வேறுவிதமான சிந்தனைப்போக்குகளுக்கும் பரிட்சயமாக்கியது. பைபிளை மாத்திரம் ஆரம்பத்தில் வாசித்த அவர் ஏனைய மத மூல நூல்களையும் வாசிக்கத் தொடங்கினார். மத நூல்களை வாசித்த நல்ல கத்தோலிக்கரான அவர் மதம் சாரா நூல்களையும் வாசிக்கத் தொடங்கினார் பண்பாட்டுப்படிப்பு அவருக்கு உவப்பான துறையாயிற்று. மார்க்ஸிஸம், தலித்தியம், பெண்ணியம், பின் காலனித்துவச் சிந்தனைகள் யாவும் அவர் சிந்தனைப் போக்கில் ஒரு விசை வேகத்தை ஏற்படுத்தின. இதன் கூட்டு மொத்த விளைவே இந்த 'பரசுராம பூமி' என்ற சிறுகதைத் தொகுப்பு.

**பரசுராம பூமி**

வேதங்களில் ஈடுபாடுமிக்க பாரதி கூறிய பொன்னான கூற்றுக் களில் ஒன்று ''வேதம் புதுமை செய் என்பதாகும்''. புனித மறை நூலாக தொழப்பட்ட வேதத்தினைகூட புதுமை செய் எனக்கூறிய பாரதி வியாசரின் மகாபாரதத்திலிருந்து பாஞ்சாலி துகிலுரி பகுதியினை எடுத்து புதிய அர்த்தங்கள் தோன்ற ஓர் புதிய நவீன சிறு காப்பியமாகத் தந்துள்ளார்.

பழைய தொன்மம் ஒன்றினுக்கு பாரதியார் தன் பாணியில் அளித்த விளக்கம் அது.

தொன்மங்களுக்கு விளக்கமளித்தல் உலக கலை இலக்கிய மரபுகளுக்குப் புதினமான ஒன்றல்ல தமிழ் கலை, இலக்கிய மரபிலும் இவை நடந்தேறியுள்ளன. தமிழின் உன்னதங்களாகக் கருதப்படும் சிலப்பதிகாரமும், கம்பராமாயணமும் இவ்வழி வருவனவே. தமிழ் நாட்டில் பண்டு நிலவிய சில தொன்மங்களை வைத்தே இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் யாத்தார். வால்மீகியின் இராமாயணத்தையும், மக்கள் மத்தியில் நிலவிய இராமன் இராவணன் சீதை பற்றிய தொன்மக் கதைகளையும் வைத்தே கம்பர் கம்பராமாயணம் யாத்தார், தமிழ் இலக்கிய வரலாற்றில் இதற்கு இன்னும் உதாரணங்கள் உண்டு.

தமிழில் நவீன இலக்கியங்கள் உருவாக ஆரம்பித்தபின் தொன்மங்களை வைத்து நவீன வியாக்கியானங்கள் கொடுக்கும் பல சிறந்த கதை, கவிதை நாவல்களும் வெளிவந்துள்ளன. அவற்றை நான் இங்கு பட்டியலிட விரும்பவில்லை, அது எனது நோக்கமும் அன்று.

**தொன்மத்தை வியாக்கினித்த தமிழ் நவீன எழுத்தாளர்களிலிருந்து மைக்கல் கொலின் என்ன என்ன இடங்களில் மாறுபடுகிறார், இவரின் தனித்துவம் என்ன? என்ற ஆராய்வை பலகலைக்கழக மாணவர்கள் மேற்கொள்வது பயன்தரு முயற்சியாகும்.**

**பரசுராம பூமிக் கதைகள்**

பரசுராம பூமியில் மைக்கல்கொலினின் ஒன்பது கதைகள் இடம் பெறுகின்றன, அவை முறையே வரம், குருசேத்திரபுரம், புதிய ஏற்பாட்டின் எழுதப்படாத பக்கங்கள், இராவணாபுரி, யாருமிங்கே தீர்ப்பிடலாம், பரசுராம பூமி, ஞானம், ஓர்மம், எல்லாம் நிறைவேறிற்று ஆகும்.

இவற்றுள் வரம், இராவணாபுரி, ஓர்மம் என்பன இராமாயணத் தொன்மம் சார்ந்தவை. குருசேத்திரபுரம், பரசுராம பூமி என்பன மஹாபாரத தொன்மம் சார்ந்தவை ஞானம் ஜாதகக் கதைகளின் தொன்மம் சார்ந்தது. புதிய ஏற்பாட்டின் எழுதப்படாத பக்கங்கள், யாருமிங்கே தீர்ப்பிடலாம், எல்லாம் நிறைவேறிற்று என்னும் கதைகள் விவிலியத் தொன்மம் சார்ந்தவை. இவ்வகையில் மூன்று பிரதான மதங்களின் தொன்மங்களைத் தனது சிறு கதைகளுக்கு ஆதாரசுருதியாகக் கொள்கிறார், கொலின்ஸ். இது அவர் தனது மதம் தவிர்ந்த ஏனைய மத நூல்களையும் வாசித்ததனால் வந்த விளைவாகும். இத் தொன்மங்களுக்குள் புராண பாத்திரங்களைத் தேடாமல் அல்லது, புராணம் கட்டமைத்த கறுப்பு வெள்ளையில் படைக்கப்பட்ட ஸ்டீரியோ பாத்திரங்களைத் தேடாமல் மானிட உணர்வுள்ள நிஜ பாதிரங்களைப் படைக்க முயற்சித்துள்ளார் மைக்கல் கொலின்.

தொன்மம் பழமை சார்ந்தது, நம்மமுடியாதது ஆனால் மானுட மனதோடு ஒன்றிப்போனது. சில வேளைகளில் நம்மை அறியாமலேயே நம்மை இயக்குவது. இயங்கு நிலையில் இருப்பதனால் அது இன்றும் எம்முடன் இணைந்திருப்பது, இந்தப்பழமையை, இந்தப்புராதனத்தை நிகழ்காலத்துடன் இணைக்கும் ரசவாத வித்தை செய்கிறார் கொலின், ரசவாதம் என்பது ஒன்றை இன்னொன்றாக மாற்றுதல் ஆகும். இரும்பைத் தங்கமாக்கல் ரசவாத வித்தையின் பாற்படும். இதனைச் சித்தர்கள் செய்தார்கள் என்றும் ஒரு தொன்ம நம்பிக்கையுண்டு. இதனால் தொன்மம் புதுமை பெறுவதுடன் தொன்மம் புது அர்த்தத்தையும் பெறுகிறது. இன்னொரு வகையில் பழைய தொன்மம் வாழும் தொன்மம் ஆகின்றது இங்குதான் ஒரு படைப்பாளியின் கற்பனைத் திறனைக் காண்கிறோம்.

வரம் எனும் கதையில்கல்லாகிக் கிடந்து மீண்டும் பெண்ணான அகலிகையை முன்னர் கல்லாக்கிய கணவன் கௌதம மாமுனிவன் காண்கிறான், அவன் ஓர் ஆண் மகன், அகலிகையை இவன் கல்லாக்கக் காரணமாக இருந்தவன் இந்திரன். அவனும் ஓர் ஆண் மகன். இரு ஆண்களுக்கு மத்தியில்தான் அவளது சாபம் உருக்கொண்டது, பின்னர் சாபவிமோசனம் பெறுகிறாள் அகலிகைக்குச் சாபவிமோசனம் அளித்ததும் ஓர் ஆண் மகன்தான்.

பெண்ணாக மாறிய அகலிகையிடம்

”வரம் ஒன்று கேள் தருகிறேன்'' என்கிறான் கௌதமன்.

இன்னும் அந்த ஆண் திமிர் மாறவில்லையோ?

தன்னைக் கல்லாகச் சபித்த தன் கணவன் கௌதம முனிவனிடம் அகலிகையான அந்தப் பெண் வேண்டும் வரம் என்ன?அதுதான் இங்கு முக்கியம்

‘‘**நாதா நீங்கள் ஒருமுறை இந்திர வேடம் கொண்டு என்னை வந்து சுகித்திருக்க வேண்டும்**''

நமக்கு முகத்தில் அறைந்தது போல இருக்கிறது அவள் கேட்ட வரம். தனது உடலோடு இந்திரன் உடலும் இணைய சுகித்த பொழுதுகள் அவள் மனதின் அடியாழத்தில் உறைந்துள்ளனவா? ஆனால் அன்று அவள் சுகித்த உருவம் கௌதம உருவம்.

இன்று அவள் வேண்டுவது இந்திர உருவம் தனக்கேயுரிய சுகத்தை தானே தேடிக்கொள்ளும் நவீன பெண் குரலாக நாம் இதனைக் கருதலாமா? அதுவும் ஓர் மரபுக்குள் கட்டுப்பட்டுத்தான்.

புராணத்தையே புரட்டிப்பார்க்கும் பார்வை இது, இதற்காக கொலின் சனாதனிகளிடமிருந்து சரமாரியான ஏச்சுகளையும் பெறக்கூடும். ஏச்சு வாங்குபவன்தான் கலைஞன் ஏன் எனில் மற்றவர்களின் காட்சி,கருத்து புலன்களுக்கும் கருத்து நிலைகளுக்கும் தெரியாத சில விடயங்கள் கலைஞ னது காட்சிப் புலன்களுக்குத் தெரிவதுடன் கருத்து நிலைகளுக்குள்ளும் வருகின்றது. அதனை வெளிப்படுத்துகையில் கிடைப்பது ஏச்சுத்தான்.

குருசேத்திரபுரத்தில் மஹாபாரத குருசேத்திர யுத்த களத்தையும் வன்னி யுத்த களத்தையும் இணைக்கிறார் அர்ச்சுனன் ஏவிய பாசுபதாஸ்திரம் வன்னிமண்ணில் வீழ்ந்து வெடிக்கிறது. பாசுபதாஸ்திரம் ஏவினால் அது உலகை அழிக்கும் என்பதனால் அதனை ஒருபோதும் ஏவக்கூடாது என்பது அற யுத்த விதிமுறைகளுள் ஒன்று.

இங்கே எல்லாம் தலைகீழ். தலைகீழாக்கியவர்கள் கடவுள் ஸ்தானம் பெற்றவர்கள், சாதாரண மக்கள் கூட்டம் இனம் காணாத சூத்திரதாரிகள். ஆனால் அந்தச் சூத்திரதாரிகளையும் புத்திக்கூர்மையுள்ள மனிதர் இனம் கண்டு கொள்வர். மக்களிடம் அந்த மக்களிடம் மகா பயங்கரமான பாசுபதாஸ்திரம் எனும் ஆயுதம் இல்லைதான். ஆனால் அவர்களும் தமக்குத் தெரிந்த ஆயுதம் தாங்குவர் என்பதை கதையின் இறுதி வரிகளில் கொலின்ஸ் உணர்த்துகிறார் என நாம் கொள்ளலாமா? வியாக்கியானிக்க கதாசிரியனுக்கு மாத்திரமா உரிமையுண்டு வாசகனுக்கும் உண்டுதானே.

**இதோ அந்த இறுதி வரிகள்**

**"ஆக்கியதும் நானே அழித்ததும் நானே என்ற புன்னகையுடன் தனது விஸ்வரூபம் காட்டி நின்ற கண்ணன் மீது எங்கிருந்தோ பறந்து வந்த கல் ஒன்று தாக்கி அவனது நெற்றிப்பொட்டில் இருந்து குருதி வழிந்து கொண்டிருந்தது."**

சிறு பையன் ஒருவன் வீசிய கல்லினால் காயம் பட்டு நெற்றியிலிருந்து இரத்தம் வழிய நிற்கும் கண்ணனைக் கற்பனை செய்து பாருங்கள். புதிய ஏற்பாட்டின் எழுதப்படாத பக்கங்கள் எனும் சிறுகதை நம்மை இன்னொரு விதமாகச் சிந்திக்க வைக்கிறது. விவிலியத் தொன்மத்தை அடிப்படையாகக் கொண்ட கதை இது. அதன் பெயரே புதிய ஏற்பாட்டின் எழுதப்படாத பக்கங்கள், புதிய ஏற்பாட்டின் எழுதப்பட்ட பக்கங்கள் என்ன? யூதாஸ் முப்பது வெள்ளிக்காசுக்காக இயேசுக் கிறிஸ்துவை காட்டிக்கொடுத்தான் என்பது.

இச் சிறு கதையில் காட்டிக்கொடுப்பை யேசு பிரானும் யூதாசும் அறிந்திருந்தார்கள். முப்பது வெள்ளிக்காசுகளுடன் வந்த யூதாஸ் தான் காட்டிக்கொடுக்கபோவதாக யேசுவிடம் கூறுகிறான், காட்டிக்கொடுப்பது நல்லது என யேசு தன் கருத்தைக் கூறுகிறார். அவர் அதற்கு உரைக்கும் ஞாயங்கள் மக்கள் நலன் சார்ந்ததாக இருக்கின்றன.

**"நான் தப்பிச் சென்றால் என்னைத் தேடுவதை ஒரு காரணமாக வைத்தே மீண்டும் மீண்டும் என் மக்களையும் எனது கொள்கைகளை ஏற்றுக் கொண்டவர்களையும் துன்புறுத்துவார்கள் எனவே எனது உடலைஅவர்கள் கையில் ஒப்புவித்தால் அதனை அவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்யட்டும், பழி தீர்க்கட்டும். ஆனால் இதன்மூலம் அவர்களது கோபாவேசம் அடங்கி இதுவே எனது மக்களுக்கான ஒரு**

**விமோசனமும் ஆகிவிடலாம் அல்லவா?"** எனக்கூறும் யேசுநாதரின் வாக்கியங்களுக்கு வாசகர் பல வியாக்கியானங்கள் அளிக்கலாம், அது அவரவர் அரசியல் சார்ந்தது, யூதாசும் யேசுநாதரும் இப்படியும் கதைத்திருப்பர் என்பதும் ஒரு தலைவனின் நோக்கு மக்களைக் காப்பாற்றுதலே என்பதும் இக்கதைமூலம் கூறப்படுகிறது. அத்தோடு இக்கதையில் வரும் காட்சிகள் வாக்கியங்கள் சித்திரிக்கப்படும் சூழல் என்பன வாசகரின் வியாக்கியானிப்புக்கு பரந்து விரிந்து இடம் தருகின்றன. இந்த வாசக வெளியை ஏற்படுத்துவதும் சிறந்த படைப்பின் ஓர் அம்சமாகும்

இராவணாபுரியில் கொலின் இராவணனின் இன்னொரு பக்கத்தைக் காட்டுகிறார். சீதை இராவணனின் மகள் என்பதும் ஓர் தொன்மக்கதையாகும், அந்தக்கருவை மையமாகக்கொண்டு சீதையின் கணவன் உயிரை கவர எண்ணாத சீதையின் தந்தையாக ராமனின் மாமனாக இங்கு உருவாக்கப் படுகின்றான் இராவணன்.

"போரிட்டு மடிவேன் அல்லது அவர்களை அழிப்பேன்" என்று சொல்லாது "போரிட்டு மடிவேன் அல்லது அவர்களை லங்காபுரியைவிட்டே துரத்துவேன்" என்று கூறிப்போர்க்களம் புகுகின்றான் இராவணன், அழிப்பு இங்கு முதலிடம் பெறவில்லை.

ராம ராவண யுத்தத்தின் இறுதிக்கணங்கள் முக்கியமானவை. பலமுறை இராமனை அழித்துவிடுவதற்கான சந்தர்ப்பங்கள் இருந்தாலும் ராவணன் அதனைத் தவிர்த்தே வருகிறான்.

ராமனுக்கும் வீரன் என்ற முறையில் அது புரிந்தே இருந்தாலும் ராவணனின் அந்தப்போர்முறைக்கான அர்த்தம் புரியவில்லை. ஒவ்வொரு ஆயுதத்தினையும் பிரயோகிக்கும் போதும் "ராமன் எனது மருமகன், சீதை எனது மகள்" என்ற நினைப்பு வந்து அஸ்திரங்களின் பிரயோகத்தில் ஒரு வித தளர்வு நிலையை ஏற்படுத்தியது இதனை ராமன் தனக்குச் சாதகமாக்கிக்கொண்டான் என்பது கொலினின் வியாக்கியானம்.

ராமாயணம் புதுமை செய்யப்படுகிறது.

'யாருமிங்கே தீர்ப்பிடலாம்' கதை விவிலிய தொன்மக் கதையை ஆதாரமாகக் கொணடது, விபச்சாரம் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட பெண் ஒருத்திக்கு மோயிசன் சட்டப்படி கல்லெறிந்து கொல்ல மக்கள் திரள் முடிவெடுத்தபோது "பாவம் செய்யாதவர் அவள் மீது முதல் கல்லை வீசலாம்" என்ற யேசுநாதர் சொல் கேட்டு யாரும் கல்லெறியாது திரும்பினர் என்பதே விவிலிய தொன்மம்.. ஆனால் இங்கு யேசு கூறும்

வார்த்தைகள் முக்கியமானவை. விபசாரத்தில் ஆணும் பெண்ணும் ஈடுபடுவதால் தண்டனை இருவருக்குமேயுண்டு. ஆணாதிக்கச் சமூகம் ஆணை விட்டு பெண்ணையே குற்றத்திற்குள்ளாக்கியது யேசுவோ பின் வருமாறு கூறுகிறார்

**"உங்களில் பாவம் செய்யாதவன் இவள்மேல் முதல் கல்லை எறிந்து தீர்ப்பிடட்டும் அதே வேளை இவளுடன் விபச்சாரத்திலீடுபட்ட வனையும் கையும் களவுமாகப்பிடித்த நீங்கள் அவனையும் அழைத்து வாருங்கள், இருவருக்கும் தண்டனைகள் சமமாக இருக்கட்டும்" என்று கூறுகிறார்.**

ஆனால் கல் வீசப்படுகிறது ஒரு கல் அந்த விபச்சாரியை நோக்கி வீசப்படுகிறது மறுகல் யேசுநாதருக்கு வீசப்படுகிறது, அவரது கபாலம் பிளந்து இரத்தம் வழிகின்றது, வீசப்பட்டது ஒரு கல் அல்ல பல கற்கள், வீசியவர்கள் "கல்தோன்றி மண்தோன்றாக்காலத்தே முன்தோன்றிய மூத்த குடிகளிற் சிலர்" கல்வீசுவதையே தொழிலாகக் கொண்டவர்கள் இவர்கள். அறம், ஞாயம் பற்றி எந்த வித எண்ணமும் இல்லாதவர்கள், எதற்கும் எப்போது கல் வீசும் தகமையினர் என்று எங்கோ தொடங்கி எங்கோ முடிக்கிறார் கொலின். மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சிப் போடுவது போலத் தோன்றினாலும் அந்த முடிச்சிக்குள்ளால் அவர் பண்டைய விவிலியத்தையும் இன்றைய நமது சிலரின் போக்குகளையும் இணைத்து விடுகிறார். இதுவே கலைஞன் செய்யும் ரசவாதம். குருசேத்திரபுரத்தில் கண்ணபிரானின் மீது கல் வீசப் படுகிறது. இந்தக்கதையிலோ யேசுபிரான்மீது கல்வீசப்படுகிறது, கடவுளர்களின் மீது கல் வீச்சு ஆனால் எறியப்படுவதற்கான காரணங்கள் வேறு வேறு.

பரசுராமபூமி பரசுராமரின் தொன்மக்கதையையும் முள்ளிவாய்க்கால் யுத்தத்தையும் இணைக்கும் கதையாகும். நூற்றுக்கு மேற்பட்ட பொது மக்கள் சவங்களாய்ச் சரிய ஆயிரக்கணக்கான மக்களின் செந்நீர் மண்ணோடு மண்ணாகக் கலந்து முள்ளிவாய்க்கால் மண் சிவந்த மண்ணாகிக்கொண்டிருந்தபோது அங்கெழுந்த மனித அவல ஓலங்கள் கேட்டுக் கண்விழிக்கிறார் புராணகாலத்து மாபெரும் வீரரான பரசுராமர். பிராமணரான அவரின் ஆயுதம் மழு. அதாவது கோடரி, அந்தக்கோடரி கொண்டுதான் கேரள நாட்டை உருவாக்கினார் என்ற ஐதீகக் கதையும் உண்டு, மாபெரும் வீரர் அவர், தந்தைக்கு இழைக்கப்பட்ட அநீதியினால் சத்திரிய குலத்தை வேரோடு அழிக்கச் சபதம் செய்தவர். 21 சத்திரிய

தலைமுறைகளை அழித் தொழித்தவர்.

நீண்ட துயில் கொண்டிருந்த அவர் கண் விழிக்கிறார். அந்த ஓலங்கள் ஒப்பாரிகளாக அல்லாமல் ஏதோ ஒரு செய்தியை அவருக்கு உணர்த்துகின்றன அந்த ஓலம் நவீன விஞ்ஞான சாதனங்களால் அழிக்கப்பட்ட ஹிரோசிமா-நாகசாகி மக்கள் இட்ட ஓலம் போன்றதோர் ஓலம் ஏதோ ஒன்றின் நீட்சியாக அது அவருக்குத் தோன்றுகிறது. மனித அவலம் தீர்க்க தம் பரசுடன் அவர் வன்னிக்கு வருகிறார். ஓலங்கள் கேட்ட நிலம் நோக்கி அவர் வெண் புரவி பறக்கிறது.

ஆனால் இந்த யுத்த களத்தில் யுத்த விதி முறைகள் மீறப்பட்டிருக் கின்றன. தனது தேசமே தான் உருவாக்கியவர்கள் மீது போர் தொடுப்பதா? தான் கர்ணனுக்குச் செய்ததை இச்செயலோடு ஒப்பிட்டுப் பார்க்கிறார் இருபத்தியொரு சத்திரிய குலவம்சத்தை நான் வேரறுத்தேன். இருபத்திரண்டாவது தலைமுறை சத்திரியரை என்தேசம் வேரறுக்கின்றதா? அவருக்கு கோபம் வருகிறது கூடவே வெட்கமும் வருகிறது, கையாலாகாத் தனம், தனது ஒப்பற்ற மழு ஆயுதத்தை எடுத்து காறித்துப்பிவிட்டு தூ ரத்தே எறிந்தார் அது நந்திக்கடலின் பெரு வெளியில் சங்கமமாகியது அவரது வெள்ளைக்குதிரை வெள்ளைக்கொடி போர்த்திய உடலங்களின் நடுவே பாய்ந்தோடி வன்னிக்காட்டுக்குள் காணாமல் போனது.

பரசுராமர் தொன்மம் அநீதியை அழிக்கும் தொன்மம், மாவீரர் தொன்மம். இங்கோ அவரே வெட்கப்படும் நிலை அவராலும் ஒன்று செய்யமுடியாமல் ஓடும் நிலை. யாராலும் ஒன்றும் செய்ய முடியாத நிலை அவரது குதிரை வன்னிக்காட்டுக்குள் காணாமல் போனது என்று கூறுவதின் அர்த்தத்தை வாசகர் தம் அறிவுக்கும் அனுபவதிற்கும் ஏற்பக் கட்டுடைத்துக் காண்பர்.

ஓர்மம் சிறுகதையின் மூலத்தொன்மம் ராமாயணக்கதை, "பதினான்கு வருடம் காடு செல்ல வேண்டும் இராமன்" எனக் கைகேயி தசரதனிடம் வரம் வாங்கியதால் ராமன் காடேகின்றான், கூடவே மனைவி சீதையையும் அழைத்துக்கொண்டு போகின்றான் அண்ணனுக்கும் அண்ணிக்கும் துணையாக தம்பி லக்குமணனும் செல்கின்றான். லக்குமணன் மனைவி ஊர்மிளா, ராமன் சீதையைக்கரம் பிடித்து அயோத்தி வந்தபோது. லக்குமணனைக்கரம்பிடித்து அயோத்தி வந்தவள் இவள். இவளை லக்குமணன் கானகம் அழைத்துச் செல்லவில்லை.

பதினான்கு வருடம் அவள் தன் காமத்தை அடக்கி பெரும்

தவம் புரிகிறாள். பதினான்கு வருடம் முடிய அயோத்தி வந்த லக்குமணன் மனைவி ஊர்மிளையிடம் ஓடி வருகிறான் அவன் உடலெல்லாம் காதலும் காமமும் இவள் உடலெல்லாம் தவமும் அமைதியும்...

பதினான்கு வருடப்போதையுடன் வந்த லக்குமணன் ஒரு தபசியைக் கண்டு திகைத்துப்போகின்றான். “அன்பே இந்தப்பதினான்கு ஆண்டுகளும் இரவும் பகலும் உங்கள் நினைப்பில் வாழ்ந்த நான் உங்களை நினைத்துத் தவம் இயற்றத் தொடங்கி விட்டேன்.

இன்று நான் எதுவித ஆசாபாசங்களும் அற்ற பெண், தவமே எனது வரம் நாம் இனிமேல் இல்லற இன்பத்தில் சேர்ந்திருப்பது முடியாத காரியம்.” இதற்கு கொலின் கொடுத்திருக்கும் தலைப்பு ‘ஓர்மம்,’ ஓர்மம் என்பது பிடிவாதம் மன, உறுதி என்ற அர்த்தங்களைத் தரும் தன்னையும் கானகம் கூட்டிச் செல்லாமல் தனயனுக்காக தன்னைத்தனியே விட்டுச் சென்ற அன்றே ஊர்மிளைக்குத் தன்னைவிட தன் கணவன் அண்ணன் மீதுதான் அன்பு கொண்டுள்ளான் என்பது புரிந்து விட்டது. சென்றாலும் பரவாயில்லை ‘என்னுடன் வருகிறாயா?’ என்று ஒரு வார்த்தைகூடக் கேட்காமல் அவன் சென்றது லக்குமணன் மீது எத்தனை வெறுப்பை, சலிப்பை அவளுக்குள் ஏற்படுத்தியிருக்கும், அவள் ஒரு பெண். லக்குமணன் மீது பெரும் அன்பு செலுத்திய மனைவி. இந்தப் பதிலை அவள் 14 வருடங்கள் சேர்த்து வைத்த வெறுப்பின் குரல் எனக் கொள்ளலாமா?

இப்பதிலால் லக்குமணன் முகம் போன போக்கைப் பார்க்க அவள் ஓர் குரூர ஆவல் பட்டாள் எனக்கொள்ளலாமா? இப்பாத்திரம் ராமாயணம் கூறும் தட்டையான அல்லது ஸ்டீறியோ ரைப் பாத்திரமல்ல. உணர்ச்சியும் ஆசாபாசங்களும் கோபமும் குரோதமும் கொண்ட நிஜப்பாத்திரமாகும்.

ஞானம் கதையின் ஊற்றுக்கண் புத்தஜாதகக்கதை. அது புத்தரைபற்றிய தொன்மம். நோய், பிணி, மரணம் என்ற மூன்று உற்பாதங் களால் தாக்கப்பட்ட சித்தார்த்தன் எனும் இளம் அரசகுமாரன் வாழ்வின் ரகசியங்களை அறிய எல்லாவற்றையும் இழந்து அரண்மனை விட்டுப்புறப் படுகிறான் ஆனால் வாழ்வு பற்றிய சித்தார்த்தனது ஐயங்களுக்கும் கேள்விகளுக்கும் வாழ்ந்து வாழ்வை அனுபவித்துக்கொண்டிருக்கும் இரண்டுகால்களும் ஊனமான தன் மனைவியைச் சுமந்து தன்னோடு கொண்டு திரிபவனும், மூட்டை சுமந்து சம்பாதித்து தானும்வாழ்ந்து

அவளையும் பராமரிக்கும் ஒரு ஏழையிடமிருந்து விடை கிடைக்கின்றது ஞானம் தேடி தன் மனைவியை விட்டு விட்டு வந்த சித்தார்த்தனுக்கு தன்மனைவியை அதிலும் முட மனைவியைக் கைவிடாது சுமந்து திரியும் ஒருவனிடமிருந்து தேடலுக்கான விடை கிடைக்கிறது.

சாதாரணமான அந்த மனிதனின் போதனை இவ்வாறு அமைகிறது "சாமி இவ்வளவுதான் வாழ்க்கையா என்ற உங்கள் கேள்விக்கு உங்களிடமே பதில் உள்ளது, இவ்வளவுதான் வாழ்க்கையா என்பதை இதுதான் வாழ்க்கை என உணரத் தலைப்படுங்கள் எல்லாம் சரியாகிவிடும். வாழ்வின் ரகசியம் புரிய ஆரம்பித்துவிடும், நான் நோயை அதன் தீவிரத்தை உணர்ந்தவன் மரணத்தை எனது மகனின் பிரிவில் அனுபவித் தவன், முதுமை இன்னும் சிலகாலத்தில் எனக்கும் என் மனைவிக்கும் ஏற்படும் ஆனாலும் இந்த ஒவ்வொரு கணத்தையும் வாழ்ந்தே கழிக்கிறேன், இன்பத்தோடும் துன்பத்தோடும் இரண்டையும் அனுபவித்தே கடக்கிறேன்.... உங்கள் குடும்பத்தில், குடும்ப வாழ்க்கையில் அடைய முடியாத ஞானத்தை வேறு எங்குமே அடையவே முடியாது".

வாழ்தலே ஞானம் என்பது அவன் போதனை ஞானம் பெற்ற சித்தார்த்தன் தன் அரண்மனை நோக்கிச் செல்வதாகக் கதை முடிகிறது..

இக்கதையை ஒரு தத்துவ விசாரமாக்கியுள்ளார் ஆசிரியர். இங்கு இருப்பியல் வாதமும் சூனியவாதமும் உரையாடிக்கொள்கின்றன. அசப்பில் இரண்டும் ஒன்றே போல் தோற்றம் காட்டும். இரண்டின் சாரமும் ஒன்றுமேயில்லை என்பதுதான், இருப்பியல்வாதம் ஒன்றுமில்லாமல் தெரியும் ஒன்றை வாழ்ந்து கட என்கிறது.

சூனியவாதம் வாழாமல் விட்டுச்செல் உனக்குள் உன்னைத் தேடு என்கிறது. இதன் வெளிப்பாடு ஒன்றில் வாழ்வாக இருக்கிறது மற்றது துறவாக இருக்கிறது.

காலம் காலமாக மோதிவரும் இக்கருத்துக்களைப் புத்தமகான், சாதாரண மகன் ஆகிய இருவரின் உரையாடல் மூலம் கொணர்கிறார் கொலின். ஜாதகக் கதையையே புரட்டிப்போடும் இவரது இக்கதை மத அடிப்படைவாதிகளை அசைக்கும், கோபம் கூடக் கொள்ளவைக்கும். அத்தோடு இத்தொகுதியில் ஒரு சிறந்த கதையாகவும் அமைந்து விடுகிறது.

இறுதிக்கதையாக வருவது எல்லாம் நிறைவேறிற்று என்ற கதை. தங்களின் இருப்புக்குச் சவாலான யேசுவை ஒழித்துவிட நினைக்கிறார்கள் எதிரிகள் ஆனால் அவர்களுக்கு யேசு யார் என்பது

தெரியாது. யேசுவின் 12 சீடர்களைக்கொண்டே அவரைக் கண்டுபிடிக்கத் திட்டமிடுகிறார்கள் யேசு இதனை அறிந்தேயிருந்தார்.

தன்னால் தன் சீடர்கள் துன்பத்திற்குள்ளாகக்கூடாது என்ற உயரிய எண்ணம் அவரிடம் இருந்தது. தலைவனால் அவன் வழி தொடர்வோர் துன்பமுறக்கூடாது என்ற உயரிய தலைவன் அறம் அது, தான் வலிமையாக இருக்கும் போது தன்னை மதித்து தன்பின்னால் வந்த அதே மக்கள் தான் வலிமை குறைந்த காலத்தில் தன்னைத் தூற்றுவதையும் அவர் கண்ணாரக்கண்டார்

"ஒரு மனிதன் பலத்தோடு நிற்கும்போது அவனோடு நின்று அவனைப் புகழ்வதும், அவன் பலம் குன்றும்போது அவனைக் கேலி செய்து அவனை விட்டு ஒதுங்கிக்கொள்வதும் மனித இயல்பு என்பது அவருக்கு புரிந்து இருந்ததால் அவர் அதனையிட்டுக் கவலைப்படவில்லை" இதனையே யேசு பற்றி வரும் எழுதப்படாத பக்கங்கள் எனும் சிறு கதையிலும் கூற வருகிறார் கொலின், தன்னால் தன்னைப் பின் பற்றுவோர் துயருறக்கூடாது என்ற உயரிய நோக்கம் கொண்ட தலைவனாக கொலின்ஸின் கதைகளில் யேசு நாதர் சித்தரிக்கப்படுகிறார்.

இந்தக்கதைகளுாடாக கொலின்சின் சிந்தனை வீச்சு, அரசியல், உலகநோக்கு என்பன எமக்குப் புரிகின்றன. முள்ளிவாய்க்கால் போரும் அதன் அவலமும் அவரை அசைத்துள்ளன.அடக்கப்படும் ஓரினத்தின் அவலம் அவரது எழுத்துகளுக்கு ஊக்கசக்தியாக இருந்துள்ளது. குருசேத்திரபுரம், பரசுராம பூமி. என்ற கதைகளில் அவர் நேரடியாகவே புராண பாத்திரங்களை வன்னி மண்ணுக்குக் கொண்டு வந்துவிடுகிறார். கண்ணன் மீது மக்களின் கல் எறியும், பரசுராமர் வெட்கப்பட்டு வெண் புரவியில் ஏறிக்கொண்டு ஓடுவதும் அவரது தமிழ்த் தேசிய கருத்து நிலையின் பாற்பட்டதாகும், அக்கருத்து நிலை இக்கதைகளில் ஒரு கொதி நிலையோடு வெளி வருகிறது., அத்தோடு யேசுபிரான் பற்றிகூறும் 'புதிய ஏற்பாட்டின் எழுதப்படாத பக்கங்கள்' 'எல்லாம் நிறைவேறிற்று' ஆகிய இரு கதைகளிலும் வரும் தலைவன் குணாதிசயத்தினையும் முள்ளி வாய்க்காலோடும் வன்னியோடும் இணைத்து பார்க்கவும் வைக்கிறது

வரம் சிறுகதையில் வரும் அகலிகையும், ஓர்மம் சிறுகதையில் வரும் ஊர்மிளையும் வஞ்சிக்கப்பட்ட இன்றைய பெண் குரல்கள். அக்குரல்கள் ஆண் ஆதிக்க முகத்தில் அறைகின்றன. இன்றைய பெண்ணியக்கருத்துக்களின் செல்வாக்கு மைக்கல் கொலினில்

இருப்பதற்கு அவை சான்று.

மாக்ஸிஸ, தலித்திய தத்துவங்கள் அவர் மீது செல்வாக்கு செலுத்தியிருந்தமையை அவரது ஞானம், குருசேத்திரபுரம் ஆகிய கதைகளில் காணமுடிகிறது, ஞானத்தில் ஒரு அரசகுமாரனுக்கு சாதாரண பாட்டாளியின் வாயிலிருந்து வரும் ஞானோபதேசமும் குருசேத்திரபுரத்தின் மிகச் சாதாரண மனிதர்கள் பெரிய கண்ண பரமாத்மாவை நோக்கி எறியும் கல்லும் இதற்கு உதாரணங்கள் ஆகும்.

கடைசிக்கதையான எல்லாம் நிறைவேறிற்று எனும் கதையைப் பகவத் கீதையின் மஹா வாக்கியத்துடன் மைக்கல் கொலின் ஆரம்பிக்கின்றார்.

**"ஏலோயி ஏலோயி லமா சபக்தானி"** (என் இறைவா என் இறைவா ஏன் என்னைக் கைவிட்டீர்) என்ற பைபிள் வாக்கியத்துடன் முடிக்கின்றார். 'ஏன் என்னைக் கைவிட்டீர்?' என யேசு இறைவனிடம் கேட்கும் கேள்விக்கு கீதாசிரியன் ரூபத்தில் அந்த இறைவன் பதில் சொல்வதாக நினைத்துப் பார்க்கையில் கீதையின் அர்த்தம் மேலும் புரிகிறது. யேசுவின் இறைவனும் விஸ்வரூபம் காட்டிய இந்த இறைவனும் ஒன்றே என்று கொலின் சொல்ல வருகிறாரா?

'இறைவா ஏன் எனைக் கைவிட்டாய்?' என்று யேசு கேட்ட வினாவுக்கு விஸ்வரூப பரப்பிரம்மம் விடை கூறுகிறது

**எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது**
**எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது**
**உன்னுடையது எதை நீ இழந்தாய்**
**எதற்காக நீ அழுகின்றாய்**
**எதை நீ கொண்டுவந்தாய்? அதை நீ இழப்பதற்கு**

என உலக நீதியைக்கூறுகிறது பகவத் கீதை. இவை மைக்கல் கொலினின் பரந்த வாசிப்பிற்கும் அகன்ற மனதிற்குமான உதாரணங்கள். ஓர் ஆசிரியனின் பரந்த வாசிப்பும் அகன்ற மனமும் அவனது படைப்பை ஆழப்படுத்த உதவுவன.

இவையெல்லாம் பார்க்கையில் நமக்கு ஓர் கலகக்கார எழுத்தாளன் தென்படுகின்றான் அவன் கண்ணனை, பரசுராமனை (இவரும் கண்ணனின் இன்னொரு அவதாரம் என்பது ஓர் தொன்மம்), கௌதம புத்தபிரானை விமர்சனதிற்குள்ளாக்குகின்றான். ஆனால் யேசு பிரான் விமர்சனதிற்குள்ளாகவில்லை, அவர் கேட்ட கேள்விக்குப்பதில் கீதை மூலம் கூறப்படுகிறது என்று நாம் சமாதானம் கூறினும் யேசு

பிரான் கேள்வி கேட்கப்படாமை ஆசிரியன் இன்னும் சில கட்டுகளில் இருந்து மீளவில்லையோ என்ற ஐயத்தை நமக்குள் ஏற்படுத்துகின்றது.

"மானுடன் தன்னைக் கட்டிய தளையெலாம் அறுக" என்று கூறினான் பாரதி. சகல தளைகளினின்றும் தன்னை நீக்கிக்கொள்ளும் கலைஞர்களின் படைப்பு மிக உயர்ந்த தரத்தில் இருக்கும்.

மைக்கல் கொலினின் எடுத்துரைப்பு முறை, மொழிக்கையாளுகை பற்றியும் சிறிது கூறுவது நன்மை பயப்பதாகும். ஆற்றொழுக்கான ஒரு மொழி நடையை அவர் கையாண்டுள்ளார். சிறிய வசனங்கள். வசனங்களுக்கூடாகப் பின் புலத்தை அழகாகக் காட்சிப்படுத்தல் மனக்கண்முன் கொண்டுவரல் என்பன இங்கு நடந்துள்ளன.

சிறிய வசன நடை ஆறுமுக நாவலர் ஆரம்பித்து வைத்த வசன நடை, மக்களுக்கான நடை இச் சிறிய வசன நடை. அவரது முதற்கதை வரம் இப்படி ஆரம்பிக்கிறது. அக்கானகத்தின் ஒற்றையடிப் பாதையின் நடுவே ஒரு கல். அது மனதின் சறுக்கல், வாழ்க்கைதந்த வழுக்கல், மாமுனியின் கோபக்கிறுக்கல், அதுவே சாபக்கருங்கல் தூரத்தே தெரியும் ஒரு பர்ணசாலை, முனிவர்கள்தங்கும் பர்ணசாலைபோல அழகாக வேயப்பட்டிருந்தாலும் இன்றைய அதன் தோற்றம் மோசமாகவே இருந்தது

இந்த மொழி நடை எளிமையானது.சிறு சிறு வாக்கியங்கள் அடங்கியது.காட்சியையும் கருத்தையும் கண்முன் கொணர்வது.இந்த மொழி நடையை கதைகள் அனைத்திலும் காண்கிறோம்.

'புதிய ஏற்பாட்டின் எழுதப்படாத பக்கங்கள்' எனும் கதையில் அவர் கதை சொல்லக் கையாண்ட உத்தி வித்தியாசமாக இருகிறது. விவிலிய வேத நூல் முறையில் அதனை அதிகாரமாகப்பிரித்து 1,2,3,4 என்ற வரிசையில் கூறுகிறார்.

ஈழத்தில் தமிழ் இலக்கியத்தில் தொன்மங்களை நவீன கோட் பாடுகளின் பின்னணியில் அணுகி அவற்றிற்குப் புது வியாக்கியானமளித்து வரும் முதல் சிறு கதைத்தொகுதி இதுவென்றே நான் நினைக்கிறேன், இப்படிச் சொல்கையில் எனக்கு ஐராவது கார்வேயின் யுகாந்தா என்ற சிறு கதைத் தொகுதி ஞாபகம் வருகிறது, மஹாபாரதக் கதையின் முக்கிய சில பாத்திரங்களின் குணாம்சங்களை எடுத்துரைக்கும் தொகுதி அது.

ஆனால் இந்த ஒன்பது கதைகளும் ஒன்றுபோல் ஒன்றில்லை மைக்கல் கொலினை அப்போதிருந்தே அறிந்தவன் என்ற வகையில் அவர் எழுத்தின் வளர்ச்சி அவரின் படைப்பின் பரிணாமம் எனக்கு விளங்குகின்றது.

ஆனால் இதுவல்ல அவரது எல்லை அவர் செல்ல வேண்டிய திசைகள் இன்னுமுண்டு, பாயவேண்டிய பாய்ச்சல்கள் இன்னுமுண்டு. அதற்கு அவர் தன்னை இன்னும் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும், இன்னும் வாசிக்கவேண்டும். தன்னைக்கட்டிய தளைகளை இனம் கண்டு அவற்றினின்று தளை நீக்கம் பெறவேண்டும், இன்னும் இன்னும் உழைக்க வேண்டும்., இன்னும் இன்னும் உயர உயரப் பறக்க வேண்டும், அது அவரால் முடியும் அவரது அடுத்த வீச்சான தொகுதியையும் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். மைக்கல் கொலினிற்கு என் மனம் நிறைந்த ஆசிகளும் வாழ்த்துகளும்...

**- பேராசிரியர் சி. மௌனகுரு**

பரசுராம பூமி தொன்மங்கள் சார்ந்த

# ஈழத்தின் முதற் சிறுகதைத் தொகுப்பு

சிறுகதைக்கான ஊற்றுக்களும் உத்திகளும் சமகாலத்திலிருந்து மட்டுமன்றி, முற்பட்ட கால வரலாற்றுச் சம்பவங்களிலிருந்தும் தொன்மங்களிலிருந்தும் பிறப்பெடுப்பதுண்டு. ஈழத்தின் ஆரம்பகால முன்னோடி எழுத்தாளர்களான இலங்கையர்கோன், சி.வைத்தியலிங்கம் ஆகியோருக்கு ஈழத்து வரலாற்றுச் சம்பவங்கள் பெருமளவு கைகொடுத்திருந்தன. அவ்வாறான சிறுகதைகள் வெளிவந்தளவிற்கு தொன்மங்களை சார்ந்த தனித் தொகுப்புகள் ஈழத்தில் வெளிவரவில்லை. அவ்விதத்திலே இத்தொகுப்பே ஈழத்தில் வெளிவருகின்ற முதற்தொகுப்பு என்று துணிந்து குறிப்பிடலாம்.

உதிரியாக அவ்வப்போது எழுதப்பட ஈழத்துச் சிறுகதைகளில் தொன்மங்கள் பின்வரும் விதங்களிலே பயன்படுத்தப்பட்டன.

1. இளந்தலைமுறையினருக்கு அவற்றை எடுத்துரைப்பது. முன்னோடி சிறுகதை எழுத்தாளரான சம்பந்தன் (பிற்காலத்திலே) வெளியிட்ட ‘தர்மவதிகள்’ என்ற தொகுப்பு அத்தகையது. பாடநூல்களாகக்கூட அத்தகைய தொகுப்புகள் பல இருந்துள்ளன.
2. தொன்மங்களை மீள் வாசிப்புச் செய்வது. இது இருவிதங்களில் நிகழ்ந்துள்ளது:

அ) இன்றைய இலக்கியக் கோட்பாடுகளினடிப்படையில் அணுகுவது. உதாரணமாக, ஏகலைவன் பற்றி என்.கே. ரகுநாதன் எழுதிய ‘ஏகலைவன்’ சிறுகதை வர்க்க அடிப்படையிலும் அகல்யை பற்றி மு.தளையசிங்கம் எழுதிய “உள்ளும் புறமும்” உளவியல் நோக்கிலும் எழுந்தவை.

ஆ)சமகால, சமூக, அரசியல் பிரச்சினைகளில் நின்று வெளிப் படையாக அவைபற்றிப்பேசுவது. உ+ம், என்.கே.ரகுநாதனின்

குறு நாடகமான கந்தன்கருணை, யாழ்ப்பாணச் சாதியம் பற்றி வெளிப்படையாகப் பேசுவது எவ்வாறாயினும் ஈழத்தில் இவ்வாறு சிலரே எழுதிவந்துள்ளனர் என்பதே கவனத்திற்குரியது.

3) தொன்மங்களூடாக பூடகமாக சமகால பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவது உதாரணமாக, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை முப்பது களிலே எழுதிய "நவபாரதம்", கல்வி நிறுவனமொன்றில் நடந்த சம்பவங்கள் பற்றி எழுந்தது. பின்னர் இவ்வகையான சிறுகதைகள் எவையும் ஈழத்தில் வெளிவந்ததாக நினைவுகூரமுடியாதுள்ளது.

மேற்கூறிய பின்புலத்தில் இத்தொகுப்பிலுள்ள சிறுகதைகளை நோக்கும்போது வரம், ஓர்மம், ராவணாபுரி, ஞானம் ஆகிய சிறுகதைகள் 2 (ஆ) அடிப்படையிலே தொன்மங்களை மீள் வாசிப்புச் செய்பவையாகவுள்ளன.

முதற் சிறுகதையான "வரம்" அகல்யைபற்றிய மீள்வாசிப்பு, தமிழில் கவிதைகளுட்பட இருபது ஆக்கங்கள் அகல்யை பற்றி வெளிவந்துள்ளன. (விரிவானவிளக்கத்திற்கு எனது ஆய்வான இன்றைய சில இலக்கியங்களில் இதிகாசப்பெண் பாத்திரங்கள்" (2003, குறிஞ்சி நிலாபதிப்பகம், மட்டுநகர்) என்ற நூலினைப் பார்க்கவும்) அவை எவையுமே இச்சிறுகதையில் வரும் அகல்யை கௌதமன் போன்று உருவானதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. வரம்பற்றி மேற்குறிப்பிட்ட நூலில் நான் எழுதியிருப்பதனை இவ்விடத்தில் எடுத்துக்காட்டுவது அவசியமானது. அது பின்வருமாறு.

மிக அண்மையில் ஈழத்தில் வெளியான வி.மைக்கல்கொலின் எழுதிய 'வரம்' என்ற சிறுகதையும் எமது கவனத்தை ஈர்த்துள்ளது. அகல்யை இராமனது கால்கள் பட்டு சாபவிமோசனம் எய்துகின்றாள். கௌதமன் தான் அகல்யைக்கு தண்டனையளித்தமை காரணமாகத் தன் மீது கழிவிரக்கப்படுபவனாகவும் இன்னமும் இந்திரன் மீது கொண்ட கோபம் தணியாதவனாகவும் காணப்படுகின்றான். அகலியைக்கு வரமளிக்க விழைகின்றான். பழைய ஞாபகங்கள் மீண்டுவந்த நிலையில் அகல்யை கேட்கின்ற வரமும் அதன் விளைவும் பின்வருமாறமைந்து அதிர்ச்சியளிக்கின்றன.

**"நாதா...... நீங்கள் ஒருமுறை இந்திரன் வேடம் கொண்டு என்னோடு வந்து சுகித்திருக்க வேண்டும்..." அந்த கானகத்தின் ஒற்றையடிப் பாதையின் நடுவே இப்போது இரண்டு கற்கள் கிடந்தன.**

மேற்கூறியவாறான வித்தியாசமான முடிவு அதிர்ச்சியளிப்பது மட்டுமன்றி எமது ஆழ்ந்த சிந்தனைக்கும் வழிவகுத்துள்ளது என்பதில் ஐயமில்லை. எவ்வாறாயினும் ஈழத்திலே அண்மைக்காலத்தில் வெளிவந்த மேற்கூறிய படைப்பு விதந்துரைக்கப்படவேண்டியது.

தமிழ்ப்படைப்பாளர்கள் பெரும்பாலும் கண்டு கொள்ளாத சில பாத்திரங்கள் (உதாரணமாக, பரவையார், புனிதவதியார், ஆண்டாள், இன்னமுமுள்ளனர். இவ்விதத்தில் ஊர்மிளை பற்றியெழுந்த "ஓர்மம்" சிறுகதையும் குறிப்பிடத்தக்கதொன்றாகிறது

ராவணன் சீதைபற்றியெழுந்த "ராவணாபுரி"யும் தமிழிற்குப் புதியதுதான். இராவணன் - சீதை பற்றி அம்பை எழுதிய 'காட்டில் ஒரு மானும்' வித்தியாசமானது.

சித்தார்த்தன் பற்றி எழுந்த 'ஞானம்' சிறுகதையும் இத்தொகுதிலுள்ள சிறந்த சிறுகதைகளுளொன்றே. சித்தார்த்தனும் எமது படைப்பாளர்களால் கவனிக்கப்பட்டது குறைவே. சீரிய வாசகருக்கு, ஜேர்மன் எழுத்தாளர் ஹெர்மன் ஹெஸ்லே எழுதிய நோபல்பரிசு பெற்ற 'சித்தார்த்தன்' என்ற நாவலும் நினைவுக்கு வரல் கூடும் அதிலே தோணிக்கரையில் தோணியோட்டியூடாக புத்த நிலை அடைகின்றான் சித்தார்த்தன். 'ஞானம்' சித்தார்த்தன் மறுபடி இல்லறம் நாடுகின்றன்!

மேற்கூறிய சிறுதைகளின் சிறப்பும் முக்கியத்துவமும் ஒரு புறமாக, ஒட்டுமொத்தமான தமிழ்ச் சிறுகதை வரலாற்றிற்குச் சிறப்புச் செய்யும் வகையினவாக, 3ம் பிரிவாக இத்தொகுதியில் தொன்மம் சார்ந்த குருசேத்திரபுரம், பரசுராமபூமி, புதிய ஏற்பாட்டின் எழுதப்படாத பக்கங்கள் ஆகிய சிறுகதைகளுள்ளன. இவை பூடக முறையிலே சமகால போர்க்கால அவலங்கள்பற்றி சித்திரிக்கின்ற படைப்புகளாக அமைந்துள்ளன. இவற்றை விளங்கிக் கொள்வதற்கு நிதானமான வாசிப்பு அவசியமானது குருசேத்திரபுரம், சிறுகதையின் உயிர் அத்தலைப்பிலுள்ளது. 'பரசுராமபூமி'க்கும் 'எல்லாம் நிறைவேறிற்று'வுக்கும் அவை வெளிவந்த காலம் முக்கியமானது. புதிய ஏற்பாட்டின் எழுதப்படாத பக்கங்கள் பற்றி விளங்கிக் கொள்ள 'பைபிள்'பற்றிய பூரண அறிவு வேண்டப்படுகின்றது.

'யாருமிங்கு தீர்ப்பிடலாம்' என்ற சிறுகதை முற்பட்ட காலம் பற்றியதாயினும் சமகாலத்திற்கும் பொருந்தக் கூடியது என்பதனை

நுண்மையாக வாசிக்கும்போதுதான் உணரமுடிகின்றது.

தொன்மங்களை ஈழத்தின் சமகால அரசியலுடன் இணைத்துப் பார்த்த நாவல் தேவகாந்தனின் “கதாகாலம்” என்று கருதுகின்றேன். பேராசிரியர் சி. மௌனகுருவின் (இறுதியாகத் தயாரித்த இராவணேசன்) கூத்தும், ‘சார்வாகன்’ குறுநாவலும், ‘வனவாசத்தின் பின்’ நாடகமும் அவ்வகையினதாம் அவ்வழியில் சென்ற சிறுகதைத் தொகுப்பு தமிழுலகிலே இது ஒன்று மட்டுமே என்பது ஈழத்து எழுத்தாளருக்கு பெருமை தரும் விடயம் என்பதில் ஐயமேயில்லை.

பாராட்டுக்களுடன்,

- பேராசிரியர் **செ. யோகராசா**

# மைக்கல்கொலினின் சிறுகதைகள்:

## மரபுக்கும் புதுமைக்குமிடையிலான கதைவெளி

i kக்கல் கொலினின் **பரசுராம பூமி** ஈழச் சிறுகதைவெளியில் அவ்வப்போது நிகழ்த்தப்படும் புதிய விலகல்களையும், மாற்றங்களையும் மேவி எழும் ஒரு கதைத் தொகுதி. தமிழின் பழம்பெரும் பௌராணிக காவிய மரபிலிருந்து தனக்கான கதை வடிவத்தை அவர் கண்டடைகிறார். அவரது இந்த அடைவு கதைமொழியிலும் கதை வடிவத்திலும் சிறப்பாக வெளிப்படுகிறது.

இத்தொகுதிக் கதைகளில் தமிழ்ப் புராண, இதிகாசக் கதாபாத் திரங்களுடன் நவீன வாழ்வியல் கதாபாத்திரங்களையும் ஊடாடவிடுவதன் மூலம் ஒருவித மரபும்-நவீனமும் கலந்த கதாபாத்திரங்களை உருவாக் குகிறார் மைக்கல் கொலின். தமிழ் வாழ்வை, தமிழ் யதார்த்தத்தை, ஈழ மக்களின் விடுதலைப் போராட்டத்தை, அது ஏற்படுத்திய வடுக்களை, சிதைந்து போன அவர்களது கூட்டுக் கனவை இந்து புராண காவியக் கதாபாத்திரங்களின் வழியேயும், கிறிஸ்தவ மதக் கதாபாத்திரங்கள் வழியேயும் இத் தொகுதிக்குள் உள்ள கதைகளில் மைக்கல்கொலின் பேசிச் செல்கிறார். இந்த காவிய மற்றும் கிறிஸ்தவ பண்பாட்டு மரபிலிருந்து அவர் தேர்ந்தெடுக்கும் கதாபாத்திரங்களும், கதை மொழியும், சம்பவங்களும் ஈழத் தமிழர் வாழ்வுடனும், போராட்டத்துடனும் எல்லாவகையிலும் இணைந்ததாகவே இருக்கிறது.

அவரது இத்தொகுதிக் கதைகள் ஈழச்சிறுகதைவெளியில் ஒரு முதன்மையான, தனித்துவமான முயற்சி என்று மிகுந்த நம்பிக்கையுடன் அறிவிக்கிறார் மைக்கல்கொலின். அவரது இந்த அறிவிப்பு ஈழச்சிறுகதை இலக்கிய வரலாற்றை நோக்கி நம்மை மீளத் திருப்புகிறது. அவர் சொல்வது ஒரு வகையில் வாஸ்த்தவமாக இருக்கிறது. தமிழகத்தில் தமிழ்க் காவியங்களை மறுபடைப்புச் செய்யும் முயற்சிகள் அவ்வப்போது சில தமிழ் எழுத்தாளர்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்தவகையில் எஸ்.ராமகிருஷ்ணனின்

**உபபாண்டவம்,** மகாபாரதத்தை மறு படைப்பாக்கம் செய்து வெளிவரும் ஜெயமோகனின் **வெண்முரசு** நாவல்கள் இந்தவகை முயற்சிகளுக்கு தமிழின் மிக அண்மைய உதாரணங்களாகும். ஈழத்தைப் பொறுத்தவரை தமிழ்க் காப்பியங்களை மறுபடைப்பாக்கம் செய்ததில் தேவகாந்தனின் **கதாகாலம்** ஒரு முக்கிய முயற்சியாகும். ஆனால் இவை அனைத்தும் நாவல் முயற்சிகளே இதை விட அங்கொன்றும் இங்கொன்றுமாக ஓரிருவர் தமது சிறுகதை முயற்சிகளில் தொன்மங்களை மறுவாசிப்புக் குட்படுத்தியிருந்தாலும் ஒரு முழுத் தொகுப்பு முயற்சி என்ற வகையில் இது முதன்மையான முயற்சியே.

எனினும் மைக்கல் கொலினின் இந்தக் கதைகளை இந்த படைப்புகளோடு ஒப்பிட்டுப் பேசுவது நமது நோக்கமில்லையாயினும் புதுமையை நோக்கிய அவரது முயற்சி கவனயீர்ப்புக்குரியது என்பது என் கணிப்பு.

ஒரு படைப்பாளி மாற்றத்தை நோக்கியே இயங்கிக் கொண்டிருக் கிறான். அவன் வாழும் காலத்தினதும் மக்களினதும் குரலாகவும் அதேநேரம் வரலாற்றை மீள்கண்டுபிடிப்புச் செய்பவனாகவும், தமது வரலாற்றை நேர்மையாகப் பதிவுசெய்பவனாகவும் ஒருபடைப்பாளி பல்வேறு வகிபங்குகளுடன் இயங்குகிறான். இந்தநோக்கில் ஒரு படைப் பாளியாக மைக்கல்கொலினின் பணி தன் புனைவுகளில் செறிவாக்கம் பெறுகிறது. அவரது இத்தொகுப்பிலுள்ள கதைகள் ஈழப்போராட்டத்தில் சிக்கி சிதிலமடைந்த மக்களின் வாழ்க்கையை காவிய மொழியில் முன்வைக்க முனைகிறது.

இத்தொகுப்பிலுள்ள **பரசுராம பூமி** யதார்த்தத்துக்கும் - மாயா-யதார்த்தத்துக்குமிடையில் சுழலும் கதை. இறுதிக்கட்ட ஈழப்போர் பற்றிய வர்ணனையுடன் தொடங்கும் கதை சடுதியாக தேவர் உலகுக்குள் நுழைகிறது. **ஹோமரின் இலியட்டில்** வரும் போர்க்கள காட்சிகளும் ஓலங்களும் கதைக்குள் திடுக்கத்துடன் தொடர்ந்தபடி இருக்கிறது. கதைக் கான களத்தையும் காட்சிகளையும் உருவாக்கிவிடும் இந்த சித்தரிப்பு கதைத் தொழில்நுட்பம் சார்ந்து மைக்கல் கொலினுக்கு ஒரு அடைவுதான்.

காவியங்களில், புராணங்களில் மக்களின் வாழ்க்கை இருப்ப தில்லை. அவை எப்போதும் எளிய மனிதர்களின் வாழ்விலிருந்து கனவுகளிலிருந்து மிகவும் தொலைவிலேயே உள்ளன. மன்னர்கள், அதி மனிதர்கள், தெய்வங்கள் என அதன் உலகம் மக்களுக்கு

வெளியிலானது. இத்தகைய இலக்கிய வடிவங்கள் இன்று எந்த மொழியிலும் உயிர்ப்புடன் இல்லை. அவை சாதாரணத்துவத்தின் கலையாக இல்லாதிருப்பதனால் அத்தகைய புராண இலக்கியங்களுக்கான தேவை இக்காலப்பகுதியில் இல்லை.

மைக்கல் கொலின் புராண சம்பவங்களை காவியக் கதாபாத் திரங்களை தன் மக்களின் வாழ்க்கையுடன் இணைத்துப் பிணைக்கிறார். புராணங்களை மறுவார்ப்புச் செய்து இன்றைய சாதாரணத்துவத்தின் கலையாக இலக்கியம் இருப்பதையே காவிய மொழியில் மீண்டும் உறுதி செய்கிறார்.

**பரசுராம பூமி** தமிழர் விடுதலைப் போராட்டத்தில் இந்தியாவின் வகிபாகம் பற்றிப் பேசும் கதை என்று நினைக்கிறேன். பரசுராம பூமி என்பதே இந்தியாவைக் குறிக்கும் பெயர்தான். ஈழப்போர் இந்தியாவின் முழுமையான ஆதரவுடனேயே முடிவுக்கு கொண்டு வரப்பட்டதை மிக அழுத்தமாகவே பதிவுசெய்கிறார் கொலின். '**யுத்த தந்திரங்கள் சொல்லிக் கொடுத்து ஆயுதங்கள் அள்ளிக்கொடுத்த எனது தேசமே இவர்கள் மீது போர் தொடுப்பதா?**' என்ற ஆதங்கம் கதைக்குள் வரிக்கு வரி அழுத்தம் பெறுகிறது. விடுதலைப் புலிகள் மீது எந்தவொரு மாற்றுக் கருத்தையும் தன் கதைகளில் முன்வைத்திராத கொலின் இந்தக் கதையில் மட்டுமே ஒரு வரியில் தன் எதிர்க் குரலைப் பதிவுசெய்கிறார். '**தம் பிள்ளைகளைப் போராட வா என இழுத்துச் செல்லும் இயக்கத்தினரை நோக்கிய அப்பாவிப் பெற்றோரின் ஓலம்!**' என்ற வரிகளில் அவரது எதிர்க் குரலைப் பதிவு செய்கிறார்.

**குருசேத்திரபுரம்** கதையும் இது போன்றதொரு கதைக் களனையும், உள்ளடக்கத்தையும் கொண்ட கதைதான். மகாபாரதப் போர் இங்கு இன்னொரு வடிவத்தையும் அர்த்தத்தையும் பெறுகிறது. அது சாதாரண மக்களின் கதையாக மறு ஆக்கம் செய்யப்படுகிறது. சாதாரணத்துவத்தின் கலையாக குருசேத்திரத்தை நமக்கு முன்கொண்டு வந்திருக்கிறார் மைக்கல் கொலின். மகாபாரதப் போர் கடவுள்களின் வழிகாட்டலிலும் ஆசியிலும் நடந்தது. ஈழப் போர் பல மனித வல்லரசுக் கடவுள்களால் வழிநடத்தப்பட்டது. அதன் விதியை மனிதக்கடவுள்கள் தீர்மானித்தனர்.

**'ஆக்கியதும் நானே! அழித்ததும் நானே என்ற புன்னகையுடன் தனது விஸ்வரூபத்தைக் காட்டி நின்ற கண்ணன் மீது எங்கிருந்தோ பறந்து வந்த கல்லொன்று தாக்கி அவனது நெற்றிப்பொட்டிலிருந்து குருதி வழிந்துகொண்டிருந்தது**'

'**ஆக்கியதும் நானே அழித்ததும் நானே**' என்ற வரிகளில் விடுதலைப் புலிகள் முழுக்க முழுக்க இந்தியாவின் உதவியுடனேயே அழித்தொழிக்கப்பட்டதாக உறுதியாக நம்புகிறார். அதேநேரம் இந்தியாவின் அகங்காரமும் இந்த வரிகளுக்குள் வெளிப்படாமலில்லை. அதேநேரம், தமிழர் விடுதலைப் போராட்டத்தை எந்த விமர்சனமுமற்று முழுமையாக ஏற்றுக்கொள்ளும் மைக்கல்கொலினின் அரசியல் நிலைப்பாடும் இந்தக் கதைக்குள் தெளிவாக வெளிப்படுகிறது.

முடிந்து போன ஈழப்போர்; இழப்புகளையும், மரணங்களையும் தவிர வேறெதையும் மக்களுக்கு தந்திராத ஒரு சூழலில் **குருசேத்திர புரம்** ஒரு மாபெரும் போர்க் காவியத்தோடு இன்னொரு போரை ஒப்பிட்டு மேலோட்டமாக பேசிச் செல்லும் ஒரு கதைதான். அது மக்களின் வாழ்க்கைக்குள் இறங்கி நின்று கதைசொல்வதில்லை. பாரதப்போரும் ஈழப்போரும் எந்த விதத்திலும் தங்களுக்குள் ஒப்பீட்டுக்கான சாத்தியங் களைக் கொண்டிருப்பதில்லை என்பது கவனிக்கத்தக்க ஒரு விசயம்.

ஈழப்போரில் மக்கள் கொல்லப்பட்டனர். இது மக்களுக்கு எதிரான யுத்தம். அது மன்னர்களுக்கு கடவுள்களுக்கெதிரான யுத்தம். பாரதப் போர் படித்து இரசிப்பதற்கான யுத்தம். இது வாழ்ந்து மடிந்த மக்களின் கதை. அதில் இருப்பது செயற்கை இரத்தம். இதில் இருப்பது இயற்கை இரத்தம். எனவே இந்த ஒப்பீடு யதார்த்தவாத நோக்கில் தன்னளவில் எந்த அர்த்தத்தையும் கொண்டிருப்பதில்லை. ஒரு படைப்பாளியாக மைக்கல் கொலின் கண்டடைந்த ஓர் அர்த்தம் மட்டுமே இதற்குள் இருக்கக் கூடும்.

**புதிய ஏற்பாட்டின் எழுதப்படாத பக்கங்கள்** கிறிஸ்தவப் பண்பாட்டு மொழியின் வழி எழும் கதை. தமிழர் விடுதலைப் போராட்டத் தில் நிகழ்ந்த காட்டிக்கொடுப்பை குறியீடுகளால் தாக்கும் புனைவு போல் இது தெரிகிறது. இயேசுவும் அவரது சீடர்களையும், அவர்களுக்குள் நிகழ்ந்த உறவையும் விபரித்துச் செல்லும் கதை இது. யூதாஸ் எனும் இயேசுவின் சீடன் அவரைக் காட்டிக் கொடுப்பதன் மூலம் அவரது பணிகளும், உலக வாழ்வும் முடிவுறுத்தப்படுகிறது. ஈழத் தமிழர் போராட்டத்திலும் இதற்குச் சமமான ஒரு காட்டிக்கொடுப்பு நிகழ்ந்திருப்பதையே இக்கதை சுட்டுவதாக எனக்குத் தோன்றுகிறது. ஆனால் அதுவே இக்கதையின் முழுமையான அரசியல் தளம் என நான் வாதிடவும் விரும்பவில்லை. அதைத்தாண்டிய ஒரு பண்பாட்டு அரசில் நெருக்கடியையும் அக்கதை பேசுவதற்கான சாத்தியமும் இருக்கத்தான் செய்கிறது.

எல்லாம் நிறைவேறிற்று, புதிய ஏற்பாட்டின் எழுதப்படாத பக்கங்கள் ஆகிய இரண்டு கதைகளும் ஒரே அரசியல், ஒரே சம்பவம், ஒரேவகையான கதை மொழியுடன் நகரும் கதைகள். அவை தமிழர்களின் போராட்ட அரசியலையும் அதற்குள் நிகழ்ந்த துரோகத் தனங்களையும் கிறிஸ்தவ பண்பாட்டிலிருந்து பேசுபவை. இரண்டு கதைகளும் வாசகனுக்கு ஒரேவகையான அனுபவத்தையே ஏற்படுத்துகின்றன.

புனிதங்களை நோக்கி கேள்விகளை எழுப்பும் ஒரு வித கலகத் தன்மையும் சில கதைகளுக்குள் இருக்கின்றன. **வரம், ராவணாபுரி** போன்ற கதைகள் நம் பொதுப்புத்தியில் உறைந்து போயுள்ள புனிதங்கள் மீது கேள்விகளை எழுப்பும் அதேநேரம், அபுனிதங்களாக கட்டமைக்கப் பட்டவை குறித்து மாற்றுப் பார்வைகளை நோக்கி வாசகனை இட்டுச் செல்கின்றன.

வரம் கதை கவித்துவம் செறிவாகியிருக்கும் ஒரு கதைமொழியில் நகர்ந்துசெல்கிறது. இந்தக் கதைக்கு மைக்கல்கொலின் கையாளும் மொழி கூடுதல், குறைத்தலின்றி பொருத்தப்பாடாய் இருக்கிறது. கதைமொழிக்கு அப்பால் கதையின் அரசியல் இன்னொரு விதத்தில் கவனங்கொள்ளத்தக்கதாக இருக்கிறது.

அகலிகையின் வாழ்க்கையைப் பற்றி பேசும் கதை இது. இக்கதைக்குள்ளிருக்கும் பெண்ணிய அரசியல் மீதும், கௌதமனுக்குள் உறைந்திருக்கும் ஆணாதிக்கத்தின் மீதும் ஒரே நேரத்தில் மைக்கல்கொலின் “டோர்ச் லைட்” அடிக்கிறார். கௌதமன், அகலிகை, இந்திரன் போன்ற புராண இதிகாசக் கதாபாத்திரங்களைக் கொண்டு பெண்கள் விளிம்பு நோக்கித் தள்ளப்பட்டதை விபரிக்கிறார்.

**‘‘முக்காலமும் அறிந்த முனிவரே வெறும் சேவல் கூவும் சத்தத்தில் நிகழ்காலம் அறியாது போனது குற்றமல்ல. ஆனால் கணவனைப் போல் உருமாறி வந்த இந்திரனை பேதை நான் அடையாளம் காணாதது என் பிழையோ...?’’** என்று அகலிகைக்குள் எழும் கேள்வி நூற்றாண்டு காலமாய் தமிழ்ச் சமூக அமைப்பில் பெண் எப்படி மேலும் மேலும் விளிம்புநோக்கித் தள்ளப்பட்டாள் என்பதை வாசகன் உணரும் தருணமாக இருக்கிறது.

தமிழ்ப்படைப்புகளிலும், காவியத்திலும் அகலிகை ஒரு தெய்வீக கதாபாத்திரமாகவே சித்தரிக்கப்பட்டிருக்கிறாள். மைக்கல்கொலின் அவளை ஒரு சாதாரண பெண்ணாகவே காண்கிறார். அவளது பாலியல்

உணர்ச்சிகள் கௌதம முனிவரால் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வந்த செய்தியை கதையின் கடைசி வரிகள் சொல்ல வருகின்றன. **'நாதா, நீங்கள் ஒருமுறை இந்திரன் வேடம் கொண்டு என்னோடு வந்து சுகித்திருக்க வேண்டும்'** என அகலிகை சாபத்திலிருந்து விடுபட்டு கௌதமனிடம் ஒரு வரம் கேட்கிறாள். இந்த வரம் அதுவரைகாலமும் அவளது கணவர் முனிவர் கௌதமன் ஒரு பெண்ணான அவளின் பாலியல் உணர்ச்சிகளைப் புறக்கணித்து வாழ்ந்து வந்ததையும், ஓர் ஏக்கமாக அது அவளுக்குள் உக்கிரம் பெற்றிருந்ததையும் காட்டுகிறது.

தமிழ் இதிகாசப் புராணங்களிலும், படைப்புகளிலும் இராவணண் குறித்த சித்தரிப்புகள் மீது ஒரு உடைப்பை நிகழ்த்தி, புதிய திசையில் வாசகனை சிந்திக்கத்தூண்டும் கதை **ராவணாபுரி**. இராவணன் இராமனுக்கு மட்டுமல்ல மனிதகுலத்துக்கே எதிரானவனாக இராமாயணம் சித்தரித்தது. இராவணனுக்குள்ளிருந்த நேசம், மனிதம், நீதி, வீரம், ஆளுமை எல்லாமும் கேலிசெய்யப்பட்டு, கடைசியில் மனிதகுலத்துக்கே தீங்கான வனாக சித்தரிக்கப்பட்டான். ஆனால் இராவணன் இந்த சித்தரிப்பிலிருந்து எவ்வளவு தூரம் வேறுபட்டவன் என்ற வரலாற்றின் மீதும், ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை வரலாற்றுரீதியாக இராவணண் பெறும் முக்கியத்துவம் குறித்தும் ஒரு அழுத்தமான கவனயீர்ப்பை ராவணாபுரி கதை மூலம் ஏற்படுத்துகிறார் மைக்கல்கொலின்.

இராமாயணத்தினுள் ஊடுபாவியுள்ள ஆணாதிக்க கருத்தியலை, பெண் வஞ்சிக்கப்படுவதை நுணுக்கமாக இக்கதைக்குள் கொண்டு வருகிறார். கதையின் ஓரிடத்தில் **'ஓர் ஆடவன் மேல் தனக்குள்ள காதலை வெளிப்படுத்தியது குற்றமா? தனது காதலை தெரிவிக்கும் உரிமை பாரத தேசத்தில் இல்லையா? இதற்குப் பரிசு பெண்ணை அவமானப் படுத்துவதா?'** என இராவணனின் தங்கையான 'சொர்ணநகை' க்காக மைக்கல் கொலினின் குரல் ஒலிக்கிறது. நீண்டு கொண்டு செல்லும் இக்கதைக்குள் கம்பராமாயணம் காட்டும் இராமன், சீதை, இராவணன், சூர்ப்பனகை (சொர்ணநகை) என முக்கிய கதாபாத்திரங்கள் மீதான புதிய பார்வையை உத்வேகம் கொண்டு உருவாக்குகிறார் மைக்கல்கொலின். இந்தப் பார்வை ஈழத்தமிழர்களின் அரசியல், சமூக உரிமைகள் சார்ந்த தொன்மத்தை நோக்கிய பயணத்துக்கு மிகவும் அவசியமானதாகப்படுகிறது.

ஞானம் பௌத்தம் கூறும் துறவறம் மீது ஒரு மாற்றுப்பார்வையை

முன்வைக்கும் கதை. வாழ்க்கையின் அர்த்தங்களைப் புரிந்து கொண்டதாக கருதிய சித்தார்த்தன் வாழ்க்கையை வெற்றிகொள்ள துறவறத்தை தேர்ந்தெடுத்தார். மனிதகுலத்தையும் அதனை நோக்கி அழைப்புவிடுத்தார். வாழ்க்கையை முழுமையாக அதன் எல்லா இயல்புகளோடும் கடைசி வரை வாழ்ந்து பார்க்காமல் புறக்கணித்தமை, தன் மனைவியின் உணர்வுகளை மதியாமல் மீறியமை போன்ற உண்மைகளை முன்வைப்பதன் மூலம் சித்தார்த்தனின் போதாமை மீது தாக்குதல் தொடுக்கிறார் கொலின். வாழ்க்கை நெருக்கீடுகளை மனிதனுக்கு கொடுக்கும் போது அவற்றுக்கு முகங்கொடுத்து அதனை வெற்றிகொள்வதற்கான பயிற்சியை, தத்துவத்தை மனிதனுக்கு வழங்காமல் ஒரு கோழையைப் போல் வாழ்விலிருந்து மனிதனை ஒதுங்கச் செய்யும் சித்தார்த்தனை நமக்கு அடையாளம் காட்டுகிறார் கொலின்.

நோய், முதுமை, இறப்பு போன்ற வாழ்வின் தவிர்க்க முடியாத நேர்வுகளைக் கண்டு அவற்றை எதிர்கொள்ள முடியாமல் ஞானம் தேடி மரத்தடியில் ஒதுங்கிய சித்தார்த்தனிடம் வாழ்க்கையை அதன் எல்லா அர்த்தங்களோடும் வாழ்ந்து சுகிக்கும் ஒரு ஏழையாசகன் எழுப்பும் கேள்விகள் சித்தார்த்தனையும், வாசகனையும் ஒருசேர உலுக்குகிறது.

**‘சாமி, ஞானம் கிடைத்த உங்களுக்கு முதுமை வராதா?’**

**‘வரும்’**

**‘உங்களுக்கு நோய் வராதா?’**

**‘வரும்’**

**‘உங்களுக்கு இறப்பு வராதா?’**

**‘வரும்’**

**‘வாழ்வின் இரகசியங்களை அறிந்து ஞானம் பெற்ற உங்களுக்கும் முதுமை வரும், நோய் வரும், இறப்பு வரும் என்றால் இந்த ஞானத்தில் என்ன உண்டு?’**

இதற்குமேல் சித்தார்த்தனிடம் நாம் கேட்பதற்கு எதுவுமில்லை.

நவீன கதைகூறல், சம்பவங்களால் கதைவாசித்துப் பழகிப்போன தமிழ் வாசக மனதுக்கு மைக்கல்கொலின் ஒரு பின்-நவீனக் கதைசொல்லி போல் புதிய அனுபவத்தை ஏற்படுத்துகிறார். உரையாடும் கதாபாத்திரங்க ளின்றி, நமக்குள் வாழ்வு பற்றிய பிரக்ஞையை கிளரும் கதாபாத்திரங் களின்றி தன் குரலிலேயே போரையும் அதில் சிக்குண்டு சிதறிய மனிதர்களின் வாழ்வையும் பற்றிக் கதைசொல்கிறார் மைக்கல்கொலின்.

போரில் சிதைவுற்ற மக்களின் கதையை இதிகாசங்களினதும் புராணங் களினதும் இடையீடின்றியே அவர் நேரடியாகச் சொல்லி இருக்க முடியும். அது இன்னும் அவரது கதைகளுக்கான சமகாலத் தன்மையையும் நவீன இலக்கியத் தன்மையையும் மேலும் செழுமைப்படுத்தி இருக்கும். எனினும் அவர் இதிகாசப் பிரதிகளிலிருந்தும், சமயப் பிரதிகளிலிருந்தும் தனக்கான வடிவத்தைக் கண்டடைவதால் அவருக்கு இதுவே சாத்தியமான பாதையாகவுள்ளது.

இதற்கு அப்பால் கொலினின் கதைகள் குறித்து வேறுபார்வைகளும் எழுந்து வரச்சாத்தியமுள்ளது. அவரது எல்லாக் கதைகள் குறித்தும் எனது பார்வையைப் பதிவுசெய்யவில்லை என்பதையும் இங்கு குறித்துக் காட்ட விரும்புகிறேன். நம்மனதில், புத்தியில் உறைந்து போயிருக்கும் புராணக் கதாபாத்திரங்கள் குறித்து ஒரு மாற்றுச் சித்திரத்தை தமிழ் வாசகனுக்குள் உருவாக்குவதில் கொலின் அடையும் வெற்றி அவரது இந்த தொகுப்பை அர்த்தபூர்வமானதாக மாற்றுகிறது. இராவணன் போன்ற கதாபாத்திரங்கள் வழியே அவர் தொடங்கி வைக்கும் உரையாடல் மிகவும் முக்கியமானது. சித்தார்த்தனை மறுவாசிப்புச் செய்யும் ஞானம் தத்துவார்த்தரீதியாக அதிக கவனிப்பை வேண்டிநிற்கும் கதை.

தமிழ் மக்களின் போராட்டத்துக்கு இறுதிவரை இந்தியா உதவி செய்யவில்லை என்ற ஆதங்கம் கொலினுக்குள் மிகவும் விசைகொண்டு அவரைஇயக்குகிறது. இந்திய இதிகாச பாத்திரங்களின் புனிதக் கட்டமைப்புகள் மீதும், பௌத்தம் உள்ளிட்ட இந்தியா உலகுக்களித்த சிந்தனைகள் சிலவற்றின் மீதும் கொலின் முன்வைக்கும் மறுவிசாரணைகள் இந்த உண்மையைப் புலப்படுத்துகின்றன. தமிழ் மக்களின் போராட்டத்தின் மீது ஆழ்ந்த பிடிப்பும், பற்றும், நம்பிக்கையும் கொண்ட படைப்பாளி ஒருவனின் பரசுராம பூமி மீதான சிந்தனைத் தாக்குதலாகவே கொலினின் இந்தக் கதைகள் எனக்குத் தோன்றுகின்றன.

**- ஜிஃப்ரி ஹாஸன்**

# முன்னுரை

## காலமெனும் பெருவெளியை செதுக்கும் சிறு உளி!

, து எனது முதலாவது சிறுகதைத் தொகுப்பு.

1992ல் வெளிவந்த “என் பிரிய ராஜகுமாரிக்கு” என்ற எனது புதுக்கவிதைத் தொகுப்பின் பின் 26 வருட இடைவெளிக்குப்பின்னர் வெளிவரும் எனது இரண்டாவது படைப்பு.

எனது பள்ளிப்பருவம் தொடக்கம் பல்கலைக்கழக காலம் வரை சஞ்சிகை ஆசிரியனாக, பத்திரிகை ஆசிரியனாக, பதிப்பாசிரி யனாக, வெளியீட்டாளனாக பல தளங்களில் இயங்கியதன் காரணமாக எனது சொந்தப்படைப்பு ரீதியாக அதிக கவனம் செலுத்தியிருக்க வில்லை.

மனசு கனக்கும் சந்தர்ப்பங்களில், எனது ஆத்மாவின் வற்புறுத்தலில் கொட்டிய சில கவிதைகள் ஆரம்பகாலங்களில் ஒரு தொகுப்பாக வெளிவந்தது. நான் எழுதத் தொடங்கிய காலம் தொடக்கம் எனக்கான பிரசுரக்களம் எனது கரங்களிலேயே இருந்தது. இருந்தாலும் எழுதிக் குவிக்க வேண்டும் என்ற எந்த எதிர்பார்ப்பும், கவிதைகளை கட்டிமுடிக்க வேண்டும் என்ற எந்த கட்டாயமும் எனக்கிருந்ததில்லை.

நான் எழுதியதைவிட எழுதவைத்தது அதிகம். வெளியிட்டதை விட - வெளியிட்டு உதவியது அதிகம். பத்திரிகையாளனாக எல்லாவற்றையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்ற ஆவல், அதிகமானதும் ஆழமானதுமான வாசிப்பை வேண்டிநின்றது.

வாசிப்பின் புதிய எல்லைகள் விரிய விரிய எனது படைப்பின் கரங்கள் கட்டப்பட்டன. இதற்கு உதாரணமாக இத்தொகுப்பில் உள்ள ‘வரம்’ என்ற எனது முதல் மறுவாசிப்பு சிறுகதைக்கும் (2002) ‘பரசுராமபூமி’ என்ற இரண்டாவது கதைக்கு (2012)மான கால இடைவெளி சுமார் பத்துவருடங்கள். மிகுதியான ஏழுகதைகளும் 2012 - 2018 வரையான காலத்தில் எழுதியது. இதில் ‘ஓர்மம், ராவணாபுரி, ஞானம்’ ஆகிய மூன்று கதைகளும் இவ்வருட

ஆரம்பத்தில் (ஒரு மாத காலத்துக்குள்) எழுதப்பட்ட கதைகளாகும்.

இத் தொகுப்பில் உள்ள மூன்று சிறுகதைகள் கிறிஸ்தவர்களின் புனித நூலான வேதாகமத்தினை மறு வாசிப்புக்குட்படுத்தியதாகும்.

நான் வாசித்த புத்தகங்களில் என்னை மிகவும் பாதித்த நூல் புனித வேதாகமம். அதிலும் குறிப்பாக புதிய ஏற்பாடு ரத்தமும் சதையுமாக வாழ்ந்த இயேசு என்னும் ஒருமனிதனின், புனிதனின் வாழ்வின் பாடுகளை சொல்லும் நூல்.

விஞ்ஞான ரீதியாகவும், வரலாற்று ரீதியாகவும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு நூலாக விளங்கும் வேதாகமம் எமது மக்களின் போர்க்கால வாழ்வியலுடன் மிகவும் தொடர்புடையது.

மக்களை நேசித்த, அவர்களின் ஆன்மீக விடுதலையை நேசித்த இயேசு என்னும் புரட்சிவாதியின், போராட்டக்காரரின் இறுதிக் காலங்கள் எமது போராட்ட வரலாற்றின் இறுதிக் கணங்களுடன் மிக நெருக்கமாக ஒத்துப் போவதை அவதானிக்க முடியும்.

சமயம் வாழ்வியலுடன் இணையும் தருணம் இதுவே.

இதில் உள்ள ‘புதிய ஏற்பாட்டின் எழுதப்படாத பக்கங்கள்,’ ‘எல்லாம் நிறைவேறிற்று’ என்ற இரண்டு சிறு கதைகளும் இயேசுவின் பாடுகளின் (பாஸ்கா) காலத்துடன் தொடர்பு படுவதால் இரண்டு சம்பவங்களும், காலகட்டங்களும் ஒன்றாக தோற்றம் காட்டினாலும் இவ்இரண்டு கதைகளும் அதன் கருத்தியலில் வெவ்வேறானாவை. கதைக்கருவும் வித்தியாசமானவை. பைபிளை அறிந்து கதைகளை வாசித்தால் மேலும் தெளிவு பெறலாம்.

அதில் குறிப்பாக ‘புதிய ஏற்பாட்டின் எழுதப்படாத பக்கங்களின்’ இரண்டாம் அதிகாரம் என்னால் எழுதப்பட்டது. வேதாகமத்தை மறுவாசிப்புக்குட்படுத்துவது மட்டுமல்ல, புதிதாக எழுதவும் முடிந்தது என்றால் எனது மதம் எனக்குத் தந்த சுதந்திரம் அது!

மிக அண்மைக் காலமாக எனது கனவில் வந்து என்னை உறங்கவிடாமல் செய்தவர் லங்காபுரி மன்னர் ராவணமகாராஜா, ராமனை அவதார புருஷனாக்க, தெய்வமாக்க ஆரியர்கள் திட்டமிட்டு செய்த சதி! வீரம் செறிந்த ஒரு தமிழ் மன்னனை அரக்கர்குல தலைவனாக்கி, காமுகனாக்கிய ‘ராமாயணம்’ மதத்தின் பேரால் எவ்வளவு இலகுவாக மக்கள் மத்தியில் தவறான கருத்தியலை விதைத்துள்ளது என்பதனைப் பார்க்க மனம் பொறுக்கவில்லை.

ராவணன் என்ற மன்னனுக்கூடாக அவனுடைய தொன்மங்களுக் கூடாக நான் கண்டு கொள்ள விழைந்தது தமிழர் தம் வரலாற்றினையும் அவர்தம் வீர வாழ்க்கை முறையினையுமே. ஈழத்தமிழர்களாகிய நாம் இன்று எமது தொன்மங்களுக்கூடாக எமது வரலாற்றினை நிரூபிக்க வேண்டிய தேவையில் உள்ளோம்.

உலகளாவிய மனிதாபிமானம் பேசிப்பேசியே எமது வரலாற்று அடையாளங்களை தொலைத்து நிற்பவர்கள் நாம்.

ராவணாபுரி ஒரு குறுநாவலாக கருக்கொண்டகதை. சிலதேவை கருதியும் கால தேச வர்த்தமானங்களைக் கருத்தில் கொண்டும் அதனை ஒரு சிறுகதையாக வடித்தெடுத்தேன். இதன் ஊடாக ஒரு வரலாற்றுக் கடமையை செய்த திருப்தி.

என் இளமைக்காலத்தின் ஒவ்வொரு வருட வைகாசி பூரணை தினங்களில் எனது ஊரில் 'வெசாக்' பார்க்க செல்லும் போது கண்சிமிட்டும் அந்த வர்ண ஒளிவிளக்குகளின் நடுவே வரையப்பட்டிருக்கும் வாழ்க்கைச் சரித்திரத்தில் அந்த அழகிய யசோதராவும் பால்வடியும் ராகுலனும், அவர்களை ஒரு நடுநிசியில் விட்டுச் செல்லும் சித்தார்த்தனும் ஞானம் பெற்ற பின்னரான அவனது தோற்றமும் எனக்குள் என்னவோ செய்தது.

வாழ்க்கை எவ்வளவு அழகானது. அதனை அனுபவிக்காமல் செல்லும் சித்தார்த்தனை மனம் ஏற்றுக் கொள்ளவில்லை. ஒவ்வொருவருட 'வெசாக்' தினத்திலும் மின்விளக்குகளுக்குப் பின்னால் யசோதராவும் - ராகுலனும் அழுது கொண்டிருப்பதை என்னால் பொறுக்கமுடியவில்லை.

வாழ்க்கையை தூரத்தில் நின்று ரசித்த எனக்கு இன்று குடும்பத் தலைவனாக வாழ்வின் அத்தனை இன்ப துன்பங்களையும் அனுபவித்தபடி அதனுடன் கூடவே வாழ்ந்து அதனுடன் உண்டு, உறங்கி, கழிக்கும் இன்றைய காலங்களில் நான் செய்ய முடிந்தது இதுவே. மீண்டும் சித்தார்த்தனை குடும்ப வாழ்க்கைக்குள் கொண்டு வந்துள்ளேன்.

முதுமையையும், நோயையும், மரணத்தையும் கண்டு வாழ்க்கையை வெறுத்தவனாக வாழ்வின் ரகசியங்களை அறிய புறப்பட்டவனை மீண்டும் வாழ்வின் ருசி அறிய 'முழுதாக அனுபவித்து வாழ்ந்து பாரடா' என அவனுக்கு ஞானத்தைக் கொடுத்தேன்.

உலகெங்கும் வாழ்க்கையை புறக்கணித்து விரக்தியின் விளிம்பில் நிற்கும் சித்தார்த்தன்கள் மீண்டும் வாழ்க்கைக்குள் வாருங்கள். வாழ்ந்து பாருங்கள் என்ற அழைப்பே 'ஞானம்.'

பெண்களின் மன உணர்வுகளை புரியாமல், அவர்களது உடலியல் தேவைகளை அறியாமல் தங்கள் எண்ணப்படி அவர்களை புனிதைகளாகவும், தெய்வங்களாகவும் கட்டமைத்து வழிபாட்டுக்குரியவர் களாக்கிய எத்தனையோ புராணக் கதைகள் உண்டு. அவற்றில் இருந்து அகலிகையையும் - ஊர்மிளையையும் மீட்டெடுத்தேன்.

துரோகத்தின் பெருநெருப்பாய், வீரத்தின் விளைநிலங்கள் கருகிக்கிடந்தன அனந்தபுரத்தில் அதுவே 'குருஷேத்திர புரம்' படைக்க காரணமாகியது.

இருபத்தொரு சத்திரியர்களின் தலைமுறைகளை அழித்தவர் பரசுராமர் இந்திய வல்லாதிக்கத்தின் முழு மொத்தவடிவம் பரசுராமர். இருபத்திரெண்டாவது தலைமுறையாக எம் மக்களை கறுவறுத்தது 'பரசுராம பூமி.'

இன்று விபச்சாரிகள் மீது மட்டுமல்ல எமது விடுதலைப் போராட்டம் மீதும் கல்லெறிந்து கொண்டிருக்கும் சில தமிழர்களுக்காய் "யாருமிங்கே தீர்ப்பிடலாம்".

எமது இதிகாச புராணங்களிலும்
வேத நூல்களிலும் சொல்லப்படாத
அறக்கருத்துக்களையா நாம் எழுதிவிடப்போகிறோம்?
ஆனால் அந்த அறங்கள் ஆணாதிக்கத்திற்குரியதாகவிருந்ததால்,
உயர் சாதிக்குரியதாகவிருந்ததால்,
அரச அதிகாரத்திற்குரியதாகவிருந்ததால்,
வாழ்வைப் புறந்தள்ளி இல்லாத ஒன்றை அடைய முயற்சிக்கும் மாயா ரூபமாக இருந்ததால் அந்த தொன்மங்களையும், வேதநூல்களையும் மறுவாசிப்புக்குட்படுத்தினேன்.

எனது சமூகக் கதைகளைப் புறந்தள்ளி இக்கதைகளை தொகுப்பாக்கினேன். ஈழத்துச் சிறுகதை வெளியில் இது முதல் முயற்சி. இனி இது தொடராலாம்.

.......

இந்த முயற்சிக்கு துணையாகி நின்றவர்கள்.

- பலவேலைப்பளுக்களுக்கு மத்தியில் ஒரு நீண்ட அணிந்துரை தந்து என்னையே எனக்கு அடையாளம் காட்டிய அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய பேராசிரியர் சி. மௌனகுரு அவர்கள்.
- தகவல்கலைக்களஞ்சியமாக வாழும், இலக்கிய பல்கலைக்கழகமாக திகழும் பேராசிரியர் செ.யோகராசா அவர்கள் தனதுரையில் வரலாற்றின்


பின்புலத்தோடு என்னையும் இணைத்துக்கொண்டமைக்கும்.

- நவீனத்துவ சிறுகதை வெளிக்குள் என்னை அலைய விட்ட எனது இளைய இளவல் மதங்களுக்கு அப்பாற்பட்டு உறவுகளைப் பேணும் நண்பன் ஜிப்.்.ரி ஹசன்.
- நவீனத்துவம் கடந்த கலைஞனாய் எந்த சமரசங்களுக்குள்ளும் ஆட்படாத இனிய நண்பர் பதிப்புரையில் எனது முதன்மையை நிறுவிய அ.ச.பாய்வா.
- "மட்டக்களப்பு சிறுகதை வெளி உங்கள் தொகுப்பின் வருகையுடனேயே முழுமை பெறும் என" தொடர்ந்து இந்த நூல் வெளிவர காரணமாக இருந்த அன்பு நண்பர் கவிஞர் ச.மணிசேகரன்.
- எனது கதைகளை வாசித்து - நேசிக்கும் எனது மண்ணின் கவிஞன் கந்தையா தவராஜா, கவிதாயினி வாசுகி குணரத்தினம்.
- "இந்த வருடத்தில் உங்கள் சிறுகதைகளும், கவிதைகளும் நூலாக வெளிவரவேண்டும்" என்று அன்புக் கட்டளை இட்டு என்னை வெளிக் கொணர்ந்து இந் நூலுக்கான இறுதி வடிவத்தினை செவ்வைபார்த்து உதவிய நண்பரும் - எழுத்தாளருமான மு. தயாளன் (லண்டன்)
- எனது சகல வெளியீடுகளையும், அழகுற எனது எண்ணப்படி அச்சிட்டுதரும் வணசிங்கா அச்சகத்தின் உரிமையாளர் திரு. நிரஞ்சன் வணசிங்கா, பிரகலதன், நோயல் பிரதீபன் இத்தொகுதியை வடிவமைத்த நண்பர் த.சங்கர், மற்றும் அச்சக ஊழியர்கள் அனைவருக்கும்.
- எனது சிறுகதைகளைப் பிரசுரித்து உதவிய பிரசுரங்களங்களான மகுடம், மலைமுரசு, தேனகம், ஆதவன் (கனடா), தமிழர்தளம், வீரகேசரி வாரவெளியீடு, தினக்குரல் வாரவெளியீடு, ஆகியவற்றுக்கும் அதன் ஆசிரியர்களுக்கும்.
- கேட்டவுடன் ஓவியங்களை வரைந்து உதவிய அன்பு நண்பர் மட்டக்களப்பு மண்ணின் மைந்தன் இரா. குணசீலன் (கனடா)
- வாழ்வை நேசிக்க அன்பான துணைவி தேவை. எனது சகல இயக்கத்திற்கும் துணையாக நிற்கும் என் அன்பு மனைவி ஹஜேந்தினி மைக்கல், மகன்கள் ரொகான் ருக்ஷன், நிருஷான்.
- எல்லாவற்றுக்கும் மேலாய் என்னை வாழவைத்துக் கொண்டிருக்கும் மட்டக்களப்பு மண்ணுக்கும் - மக்களுக்கும் எனது இதயபூர்வ நன்றிகள். நன்றிகள், நன்றிகள்.

என்றும் அன்புடன்

**வி. மைக்கல் கொலின்**

# வரம்



அக் கானகத்தின் ஒற்றையடிப் பாதையின் நடுவே ஒரு கல். அது மனதின் சறுக்கல், வாழ்க்கை தந்த வழுக்கல். மாமுனியின் கோபக்கிறுக்கல் அதுவே சாபக் கருங்கல்லாக்கியது.

ஒன்றல்ல இரண்டல்ல... கிட்டத்தட்ட பன்னிரண்டு வருடங்களாய் அந்தக்கல் அந்தப் பாதையில் தான் தவமிருக்கின்றது. இயற்கையின் எழில் கொஞ்சி விளையாடிய அந்த அழகிய கானகப் பிரதேசம் பல வருட காலமாகப் பாழடைந்த நிலையில் ஏதோ ஒரு சோகம் சொல்லியது.

தூரத்தே தெரியும் ஒரு குடிசை. முனிவர்கள் தங்கும் பர்ணசாலை போல் அழகாக வேயப்பட்டிருந்தாலும் இன்றைய அதன் தோற்றம் மோசமாகவே இருந்தது. விடிகாலை சூரியன் தன் கதிர்களைப் பரப்ப முன்னரே தன் விழிக் கமலம் திறந்து தன் கணவனுக்கு வேண்டிய கடமைகளைச் செய்து அவரது இறை வணக்கத்திற்கான ஒழுங்குகளை

செய்து, ஆற்றங்கரையில் தண்ணீர் கொண்டு வர அன்ன நடை நடந்து செல்லும் அந்த அழகிய பாதங்களின் அசைவுகளின் போது கேட்கும் அந்த சலங்கைகளின் சத்தம் காலை நேரத்துப் புள்ளினங்களின் இனிய கானத்துடன் சேர்த்து ஒரு ரம்மியமான சூழலை உருவாக்கும் நிலை இன்றில்லை.

ஆற்றுக்குள் இறங்கித் தன் ஆடை களைந்து அவள் நீராடும் அழகைப் பார்க்க.... இல்லை இல்லை அவள் மேனி அழகை ரசிக்க ஆற்றங்கரை ஓரத்திற்கு மேய வரும் புள்ளி மான்களும், கவரி மான்களும், அவள் நீராடி தான் கொண்டு வந்த மண் குடத்தில் தண்ணீர் அள்ளிச் செல்லும் வரை அவளுக்குத் துணையாக நிற்கும். வானத்து மின்னல் ஒன்று மாநதியில் இறங்கி வெண்ணிலவாய் வெளிவருவது போல் அவள் நீராடிச் செல்வாள்.

அந்தக் கானகத்து மான்களைப் போலவே அவள் அழகை அவளுக்கும் தெரியாமல் அவனும் ரசித்தான்.

பனிமூட்டம் நிரம்பிய அந்த விடியற் காலைப் பொழுதில் வானத்து நிலவு மண்ணில் உலா வருவதைப் போல் மஞ்சள் மேனி அழகி ஆம்... அவள் தான் அகலிகைப் பெண் தினமும் நீராடும் வேளை இந்திரலோகத்து அதிபதி சித்தம் கலங்கி நின்றான்.

மேனகை, ரம்பை, ஊர்வசி, திலோத்தமை என்று அழகிகள் கூட்டம் அவன் அந்தப்புரத்தை அழகு செய்தாலும் அழகு மயிலாள் அகலிகையின் உடல் வனப்பும். மேனியழகும் அவனைச் சித்தம் தடுமாற வைத்தன.

ஒருநாளேனும் ஒரு பொழுதேனும் அவளுடன் கலந்திட வேண்டும் என்ற வெறி அவனுள் கிளர்ந்தெழுந்து நீறு பூத்த நெருப்பாய் கனன்று கொண்டு இருந்தது.

இது இன்றல்ல நேற்றல்ல தேவலோக அழகுச் சந்தையில் என்று அகலிகையை அவளது தந்தை பந்தயப் பொருளாய் ஆக்கினானோ அன்றிலிருந்து எழுந்தது அந்தத் தீ.

தந்திரக் கௌதமன் பந்தயத்தில் வென்று அகலிகையைப் பூமிக்குக் கொண்டு வந்த நாள் முதல் அந்த தீ மேலும் மேலும் பற்றியெரியத் தொடங்கியது. அவளைக் கண்ட நாள் முதல் விரகத்தின் தாபத்தில் தினமும் துடித்திருந்தான் இந்திரன். வெண்ணிலவு நாட்களில் அந்த நிலவெங்கும் அவள் முகமே தெரிந்தது. இந்திரனுக்கு காமத்தின் பெருநெருப்பு அவன் தேகத்தின் மயிர்கால்கள் தோறும் சில்லென்ற உணர்வாய் சிலிர்த்துக் கிடந்தது.

அவள் ஒரு ரிஷி பத்தினியாய் மாறிப் போனாலும் காட்டில் எறித்த நிலவாய், கடலில் கரைத்த உப்பாய் அவள் இளமை முதுமையைத்

தாலாட்டும் நிலையில் அவள் கணவன் கௌதம முனியின் காலடியில் கொட்டிக் கிடப்பது அவனுக்கு வேதனை அளித்தது. தேனைப் பருகிய வனுக்குத் தானே தேனின் சுவை தெரியும். எத்தனை வகை தேனை ருசி பார்த்தவன் இந்திரன். இது கொம்புத் தேனல்லவா...?

அதன் சுவை அறிய அவன் மனம் துடித்தது. ரிஷி பத்தினிதான் என்றாலும் அவள் இளமை, அவள் அழகு, அவன் சிந்தனையை மயக்கியது. நேரம் பார்த்து இருந்தவனுக்குக் காலம் கூடிவரப் பொறுமை இருக்கவில்லை.

விடியற் காலை எழுந்து தன் கடமை முடிக்க ஆற்றங்கரை செல்லும் மாமுனியின் பழக்கம் அவர்தம் வழக்கமாக இருப்பதை அறிந்தான்.

அன்று சித்திரா பௌர்ணமி

வானில் வெண்ணிலவு பவனி வரத் தொடங்கி நாழிகைகள் ஆகிக்கொண்டிருந்தது. எங்கிருந்தோ ஒரு சேவல் கூவியது. சேவல் வடிவில் வந்து கூவியது இந்திரன். முற்றும் துறந்த முனிவர் எழுந்தார். தன் அருகில் துயிலும் அகலிகையை பார்த்தார்.

மேலாடை விலகிப் படுத்திருக்கும் அவள் உடலகு அவரைக் கிறங்கச் செய்தது. அந்த அழகிய உடல் தன் சொந்தம் என்ற பெருமித உணர்வுடன் அவள்மேல் தன் போர்வையை போர்த்திவிட்டு எழுந்து தன் கமண்டலத்தை எடுத்துக் கொண்டு ஆற்றங்கரை நோக்கி நடக்கத் தொடங்கினார்.

அது அர்த்த ஜாமநேரம். ஆனால் விடிகாலைப் பொழுதைப் போல் நிலவு வெளிச்சம். சேவலைப் போல் கூவி கௌதமனை ஏமாற்றிய இந்திரன் கௌதம வேடம் பூண்டு ஆசிரமத்துக்குள் நுழைந்தான்.

வாசல் நிலை அவன் நெற்றிப் பொட்டில் இடித்தது. 'அம்மா' என்று அவன் நெற்றியைத் தடவியபடி உள் நுழைந்தான். விட்டு விட்டு எரிந்து கொண்டிருந்த அந்த தூண்டாமணி விளக்கை மெல்ல ஊதி அணைத்தான். எங்கும் இருட் போர்வை. பௌர்ணமி நிலவின் ஒளிக்கீற்றுக்கள் திட்டுத்திட்டாய் பர்ணசாலைதோறும் பரவியிருந்தது.

அகலிகையை நெருங்கி அவள் தோள் தொட்டுத் திருப்பினான். அந்த ஸ்பரிசம் பட்ட கணத்தில் அவள் மேனி துடித்தது. நீண்ட நாள் தவம் கலைந்து தன் கணவன் தன்னைத் தீண்டுகிறான் என்ற நினைப்பு. அந்த ஸ்பரிசம் அவளுக்குப் புதிதாய் இருந்தாலும் எத்தனையோ ஆண்டு களுக்குப் பின்னான தீண்டுதல் அது. அதனை இழக்க அவள் தயாராக இல்லை. அதன் பின்பு அங்கு நடந்தது மாபெரும் யுத்தம். ஒருவரை ஒருவர் வெற்றி கொள்வதல்ல ஒருவரிடம் ஒருவர் தோல்வியடைவதை முன்னிலைப் படுத்தி ஆரம்பிக்கும் யுத்தம். இத்தனை நாள் தவம் கலைந்து

அவள் தன்னுள்ளே உருகினாள். தாபத்தின் பெருங் காட்டில் தனித்தலைந்த அந்தப் பறவை தனக்கான கூட்டுக்குள் அடைக்கலமானது. இந்த சுகம் இனிமேல் எப்போது? அவள் மனது துடித்தது. ஓ... இது தான் என்ன சுவை..? அந்தக் காட்டுத் தேனைப் பருகிய மயக்கத்தில் அந்த இந்திர வண்டு களைத்துப் போய் படுத்துக் கிடந்தது.

வாசலில் யாரோ வரும் அரவம். கௌதம மாமுனி உள்ளே நுழைந்தார். தன் மஞ்சத்தில் இன்னுமொரு கௌதமரா? அவரது ஞான திருஷ்டி அவனை இந்திரனாய் அடையாளம் கண்டது. பாவம் அகலிகை... அசல் எது? நகல் எது? எனத் தெரியாமல் விழித்தாள். அசலைக் கண்டதும் நகல் ஓடி மறைந்தது.

அகலிகையின் கோலம் அங்கு என்ன நடந்தது என்பதை முனிவருக்குச் சொன்னது.

“முறைதவறி மாற்றானோடு இன்பம் கொண்டவளே பிடிசாபம். இன்று முதல் நீ உணர்ச்சியே அல்லாத ஜடம். ஆம் இனிமேல் நீ ஒரு கல். வெறும் கல்....”

சாபம் இட்ட முனி வீதியில் இறங்கி நடக்கத் தொடங்கினார். திகைத்தாள் அகலிகை. ‘இவ்வளவு நேரமும் தன்னுடன் இன்பம் அனுபவித்தவன் தன் கணவனில்லையா? இந்திரனா? இந்திரனுடனா நான் காம சுகம் கண்டேன்?

இத்தனை நாள் இல்லறத்தில் இறைவா... இதென்ன சோதனை? முக்காலமும் அறிந்த முனிவரே... வெறும் சேவல் கூவும் சத்தத்தில் நிகழ்காலம் அறியாது போனது குற்றமல்ல. ஆனால் கணவனைப் போல் உருமாறி வந்த இந்திரனை பேதை நான் அடையாளம் காணாதது எனது பிழையோ...?’ கேட்க வாய் துடித்தது. ஆணாதிக்கத்தின் பிரதி விம்பமாய் செல்லும் கௌதமனை நோக்கி வாசலைத் தாண்டிப் பாதைக்கு ஓடியவள் கல்லானாள்.

இது அன்று நடந்தது.

இனி இன்று நடப்பது தொடர்கிறது.

அந்தக் கானகத்துப் பாதை வழியே மூவரின் வருகை. ஆளரவம் அற்றிருந்த அந்தப் பிரதேசம் ஒரு புதிய வரவிற்குக் கட்டியம் கூறியது. காலடிச் சத்தம் எதிரொலிக்க எதிரொலிக்க... அந்தப் பாறையின் நரம்புக்குள் உயிர் துடித்தது.

தன் தந்தை சொல்லை சிரமேற் கொண்டு விசுவாமித்ர முனிவரின் தவத்திற்கு உதவும் பொருட்டு வனம் சென்று ‘தாடகை வதம்’ முடித்த

மிதிலையின் மைந்தன், கோசலையின் புதல்வன் ஸ்ரீ ராமபிரான் தன் குருநாதர் விசுவாமித்திர முனிவருடனும், தன் தம்பி லக்குமணனுடனும், அப் பாதை வழியே வந்தான்.

பாறை மேல் பட்டது ராமரது பாத தூசி

உடனே வெட்டி எழுந்தது அகலிகை எனும் மின்னல் ஊசி. பாதங்கள் பட்டதா....? இல்லை பட வைக்கப்பட்டதா..?

இது விதி. ராமனின் கால் பட்டு அகலிகை மீண்டும் பெண்ணாக வேண்டும் என்பது விதி. எல்லாமே விதிப்படியே நடந்தது.

தனக்கு விமோசனம் தந்த பாதக் கமலங்களில் விழுந்து வணங்கினாள் அகலிகை. "அம்மா" என்றழைத்தான் ராமன். உள்ளம் அறியாது. உடல் செய்த குற்றம் குற்றமல்ல என்று நம்பிய இராமன் அவளை "அம்மா" என்றழைத்து உலகுக்குக் காட்டினான்.

காலம் மனிதனை மாற்றுகின்றது..... ஆம் தான் கொடுத்த சாபம் தன்னையே சபித்ததை உணா்ந்தான் கௌதமன். தனிமை அவனை வாட்டியது. பூசை புனஸ்காரம் முதல் ஆகாரம் செய்வது வரை பார்த்துப் பார்த்து செய்வாளே அகலிகை? இப்போ அவளில்லாத் தனிமை... அது மிகப் பெரும் கொடுமை. தன் நிலை உணர்ந்தான் கௌதமன். காலம் கனிவது அவனுக்குத் தெரிந்தது. முக்காலமும் உணர்ந்த முனிவனல்லவா அவன்.

கௌதமன் மீண்டும் அங்கு வந்தான். வந்தவன் கண்டான். ராமனின் காலில் விழுந்து எழும் தன் பத்தினி அகலிகையை ராமன் "அம்மா" என்று அழைத்தது கௌதமனின் காதிலும் விழுந்தது. கௌதமனின் ஞான திருஷ்டியில் மிதிலைநகரும் சிவதனுசுவும், சீதையும் தோன்றினர். சீதையை பார்க்க அவனுக்கு பரிதாபமாக இருந்தது. பூமி விழுங்கப் போகும் பெண்ணல்லவா அவள்?. தன் பத்தினியின் சாபம் போக்கிய ராமன் தன் மனைவிக்குச் செய்யப்போகும் கொடுமை 'அக்கினிப் பிரவேசம்' என்பது அவன் கண்களில் தெரிந்தது. சிரித்துக் கொண்டான். வளைக்கப்படவேண்டிய வில் முறிபடப்போகும் போதே தெரிந்தது சீதையின்வாழ்வு புதைக்கப்படும் என்று. தான் கல்லாக்கியது மட்டுமே ஆனால் ராமன் வனாந்தரத்தில் அல்லவா தன் பத்தினியை அலைய விடப் போகிறான் என்பதை சொல்லவா முடியும்...?

அகலிகையைப் பார்க்க அவனுக்குப் பாவமாக இருந்தது.
என்ன இருந்தாலும் தன் ரிஷி பத்தினியல்லவா?

இந்திரன் செய்த தவறுக்கு அவளைத் தண்டித்தது. என்ன நியாயம்? இந்திரனையல்லவா தண்டித்திருக்க வேண்டும்.....? அவன்

இப்போதும் எத்தனை அகலிகைகளின் வாழ்க்கையோடு விளையாடிக் கொண்டிருப்பானோ...?

ஆனால் அவன் ஆண் மகன்.

“அகலிகை”

கௌதம முனிவர் மெல்ல அழைத்தார்.

ராமனும், சீதையும், லக்குமணனும் செல்லும் பாதையை பார்த்துக் கொண்டிருந்த அகலிகை திரும்பிப் பார்த்தாள். நீண்ட நெடுநாட்களுக்குப் பின் தன் கணவனின் அழைப்பு.

“அகலிகை உனக்கு ஒரு வரம் தருகின்றேன். உனக்கு என்ன வேண்டுமோ கேள்... இவ்வளவு காலமும் என் சாபத்தால் கல்லாகிப் பட்ட துன்பம் போதும்....” அன்போடு சொன்னார் கௌதமர்.

அவர் அருகில் வந்து அவரது பாதங்களில் வீழ்ந்து வணங்கியவள் எழுந்து பார்த்தாள். பழைய ஞாபகங்கள் அவள் மனதுக்குள் தோன்றியதும் அவள் தேகமெங்கம் ஒரு வித பரவச நிலை தோன்றியது.

பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னரான பௌர்ணமி நாளின் விடிகாலை பொழுதின் சாபத்தை அவள் மெல்ல வாயசைத்துத் தனக்கான வரமாகக் கேட்டாள்.

"நாதா.... நீங்கள் ஒருமுறை இந்திரன் வேடம் கொண்டு என்னோடு வந்து சுகித்திருக்க வேண்டும்...”

அந்தக் கானகத்தின் ஒற்றையடிப் பாதையின் நடுவே இப்போது இரண்டு கற்கள் கிடந்தன...

(மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச
இலக்கிய விழா போட்டியில் முதற்பரிசுபெற்றது)

**- 2002**

# குருசேத்திர புரம்



குருசேத்திரப் போரின் பதினாறாம் நாள். அன்றைய போரில் கௌரவ வீரர்களுக்குத் தளபதியாகத் துரியோதனின் உற்ற நண்பன் மாவீரன் கர்ணன் தனது தேரின் மீது நின்றிருந்தான். பாரதப்போர் ஆரம்பமாகியதில் இருந்து தளபதியாகப் பொறுப்பேற்ற பீஷ்மர் கர்ணனை ஒரு சாதாரண வீரனாகக்கருதி புறக்கணித்தமையின் காரணமாக யுத்தகளத்தில் இருந்து விலகிச் சென்றிருந்தவன் கர்ணன். பத்தாம் நாள் போரில் பீஷ்மர் வீரமரணம் எய்தியதைத் தொடர்ந்து துரோணச்சாரியார் தளபதிப் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறார். பார்த்தசாரதியின் தந்திரத்தால் 'துரோணரின் மகன் அசுவத்தாமன் யுத்தகளத்தில் மாண்டான்' எனத் தர்மன் வாயால் பொய் சொல்லச் சொல்லி மகனின் இழப்பின் துயரில் நின்ற துரோணரை இலகுவாக வெற்றி கொண்டதன் பின்னர் பதினைந்தாம் நாள் போர் முடிவுக்கு வந்தது.

பாரதப்போர் ஆரம்பிக்க முன்னரே அப்போரின் வெற்றி கருதி மாயக் கண்ணனின் தந்திர வேலைகள் பல வழிகளில் பாண்டவர்களுக்குத்

துணையாகவே இருந்தது. விதுரனை வில் உடைக்கச் செய்து கௌரவர்கள் பக்கம் போரிடாமல் செய்தது தொடக்கம் கர்ணனின் மார்போடும் காதோடும் ஒட்டியிருந்த மார்புக் கவசத்தையும் குண்டலத்தையும் இந்திரனை அனுப்பி யாசகம் பெற்றது, குந்தியைக் கர்ணனிடம் அனுப்பி 'அர்ச்சுனனைத் தவிர வேறு பாண்டவர்களை போரில் கொல்வது இல்லை எனவும், நாகாஸ்திரத்தை அர்ச்சுனனின் மீது ஒரு தடவைக்கு மேல் பாவிப்பதில்லை' என்ற வரங்களை யாசிக்க வைத்ததும் தனது மகன் அபிமன்யுவை கொன்ற மன்னன் சயத்திரதனை 'மறுநாள் போரில் சூரியன் மறைவுக்கு முன்னர் கொல்வேன் அல்லது உயிர்துறப்பேன்' என்ற அர்ச்சுனனின் சபதம் வெற்றி பெற அர்ச்சுனனை கைலாயமலைக்கு அழைத்துச் சென்று சிவனிடம் இருந்து வரம் வாங்கியதும் பொய்கையில் ஒழிந்திருந்த சயத்திரதனை சூரியனை மறையச் செய்து அவனை வெளியே வரச் செய்து அர்ச்சுனன் தனது சபதம் முடிக்க உதவியது, எனப் பல அரசியல் காய்நகர்த்தல்களையும் ராஜதந்திர வேலைகளையும் செய்வித்த கண்ணன் பாண்டவர்களுக்கு அர்ச்சுனனின் தேரோட்டியாக மட்டுமல்லாமல் பாண்டவ படைகளின் தளபதி போலவே செயற்பட்டிருந்தான்.

கர்ணன் தனது கௌரவ சேனையை மகரவியூகமாக வகுத்து அதன் முன்னால் நின்றிருந்தான். அங்கதேச மன்னனின் மகுடத்தில் திகழும் மணிகள் சூரியக் கதிர்கள் போல ஒளிவீச, காதுகளில் அணிந்திருந்த பொன் குண்டலங்களும், மார்பில் அணிந்திருந்த பொன் கவசமும் கால்களில் கட்டியிருக்கும் வீரத் தண்டைகளில் பொருத்தியிருக்கும் மணிகளும் ஜொலிக்கக் கர்ணன் தன்தந்தை சூரியனைப் போலவே பிரகாசித்துக் கொண்டிருந்தான்.

......

16200905 எண்களில் காலம் கரைந்து கொண்டிருந்தது. புதிய புதிய போர்க்களங்கள் உலகம் எங்கும் திறக்கப்பட்டு மனித உயிர்கள் தத்தம் விருப்பங்களுக்கு ஏற்ப பலி கொல்லப்பட்டதன் தொடர்ச்சி. வீதி எங்கும் இரத்தச் சிதறல்கள், பிய்த்தெறியப்பட்ட சதைத் துண்டங்களின் உஷ்ணம் இன்னும் அடங்கவில்லை. கருகிச் சாய்ந்திருந்த மரங்களின் மீது மனிதச் சிதிலங்கள். ரத்தவீச்சையின் துர்நாற்றம் எங்கும் வியாபித்திருக்க வீதியில் சிதறிக்கிடந்த உடலங்களை இழுத்துக்கொண்டு நாய்கள் பற்றைகளை நாடிச் சென்றன. ரத்தவெறி கொண்ட மிருகங்கள் தங்கள் கரங்களில் புதிய புதிய படைக்கலங்களைத் தாங்கியபடி அப்பாவி மான்களை வேட்டையாடிக் கொண்டிருந்தன.

நாடு சுருங்கி ஊர்களாகி, ஊர்கள் சுருங்கி கிராமங்களாகி, கிராமங்கள் சுருங்கி மக்கள் ஒரு பொது வெளி நோக்கிக் குவிந்தனர். மக்களை

நான்கு, திசையிலும் சுற்றிவளைத்த ஆக்கிரமிப்புக்கரங்கள் ஒன்றாய், பத்தாய், நூறாய் பலி கொள்ளத் தொடங்கியது.

உலக வல்லரசு முதல், தம் நலன்களை மட்டுமே முக்கியத்துவபடுத்தும் சிறிய நாடுகள் வரை கரங்களை இணைத்து வான வீதியெங்கும் ஏவுகணைச் சோதனை நடாத்திக் கொண்டிருந்தன. புதிய நவீன ஆயுதங்களின் பரிசோதனைக் களமாக, காலாவதியான ஆயுதங்களின் விற்பனைத் தளமாக வெள்ளோட்டப்பவனி, முல்லை மண்ணின் மூலை முடுக்கெங்கும் நடாத்தப்பட்டுக் கொண்டிருந்தது.

மனிதப் பேரவலத்தின் உச்சகட்ட நாடகம் அரங்கேறிக் கொண்டிருந்த தருணமது. தம் வாழ்வில் இறுதிக் கணங்கள் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையிலும் இனிமேல் ஒன்றுமே செய்யமுடியாது என்ற நிலையில் வீரகாவியங்கள் பல எழுதி வெளியிட்ட எழுத்தாளன் மீண்டும் ஒரு காவியத்தினை எழுதத் தயாரானான். அந்தக் காவியத்திற்கான நடிகர்களை அழைத்து காவியத்தின் கதையையும் அதன் உயிர்ப்பு நிலையையும் எடுத்துச் சொன்னான்.

“இந்தக் காவியத்திற்கு ‘காவியத் தலைவன்’ என்று ஒருவன் இல்லை. கதை மாந்தர்கள் அனைவருமே தலைவர்கள் தான். உங்களின் நகர்வுகள், நீங்கள் படைக்கும் வீர அத்தியாயங்களின் முழு மொத்த வடிவமே இந்தக் காவியம். எனவே இந்தக் காவியத்தின், கதையின் முடிவை தீர்மானிக்கப் போவது நீங்கள் தான். உங்கள் கரங்களில் தான் இதன் வெற்றி தங்கியுள்ளது. இந்தக் காவியத்தின் முடிவு எமது மக்களின் முடிவை அவர்களது எதிர்காலத்தைக் கட்டியெழுப்பும். எனவே உங்களின் முழு மொத்தத் திறனையும் காட்டி நடிக்க வேண்டியது உங்களது கடமை. இது கால வரை உங்களை வைத்து நான் எழுதிய காவியங்களைப் படித்து உலகமே வியந்து பேசியது. ஆனால் இந்த உலகமே இன்று எம்மை வைத்துப் பகடையாடுகிறது. நாங்கள் நம்பிய மூத்த சகோதரனே எமக்கு எதிரியாக மட்டுமல்ல துரோகியாகி விட்டான். இனிமேல் எவரையும் நம்பிப் பயனில்லை. பாத்திரங்களே பேசட்டும். இந்தக் காவியத்தின் அரங்கேற்றம் நாளை நடைபெறட்டும். இன்று நீங்கள் ஒத்திகை பார்த்துக் கொள்ளுங்கள். பிரதான பாத்திரங்கள் துணைப் பாத்திரங்களை வழிநடத்தட்டும். இந்தக் காவியத்தின் அரங்கேற்றம் நாளை நடந்தால் எம்மக்களின் கதை மாறும். ஏன் இந்தத் தேசத்தின் கதையும் மாறும். நாம் ஒரு புது விதி செய்தவர்களாவோம். இதுவே எனது கடைசிப் படைப்பு.”

எழுத்தாளர் தனது பாத்திரங்களுடன் கதைத்து விட்டு அந்தக் காவியத்தின் கதை மாந்தர்களோடு கைகுலுக்கிவிட்டு தனது பயணத்தை ஆரம்பிக்க ஆயத்தமானார். போகும் முன்னர் அவரது கண்கள் பனித்தன.

இந்தக் காவிய அரங்கேற்றம் நாளை எந்தத் தடங்கலுமற்று நடந்து விட்டால் எம்மை நம்பி வாழ்ந்த மக்களை வாழவைக்கலாம். இத்தனை காலத் துன்பங்களையும் துடைத்தெறியலாம் ஆனால்... ஆனால்... துரோகியாக மாறிவிட்ட சகோதரன் இந்த காவிய அரங்கேற்றம் பற்றிய தகவலை எதிரியிடம் சொல்லாமல் இருக்க வேண்டும். அவரது சிந்தனை அவரது கதாபாத்திரங்களுக்கு விளங்கியது. "நீங்கள் போங்கள் நாங்கள் நடிக்கின்றோம்" என்ற அவர்களின் அன்பான கட்டளையை ஏற்று எழுத்தாளர் அவ்விடம் விட்டு நகர்ந்தார்.

......

மீண்டும் எண்கள் சுழன்று முன்னோக்கி நகர்ந்தன. பாரதப்போரின் பதினாறாம் நாள் போர் ஆரம்பமாகி விட்டிருந்தது. மாவீரன் கர்ணன் போர்க்களத்தில் பலவீர காவியங்களை எழுதிக் கொண்டிருந்தான். பீஷ்மரும், துரோணரும் தளபதிகளாக நின்ற காலத்தை விடப் பாண்டவப் படைகள் இன்றைய நாளில் அதிக இழப்புக்களைச் சந்தித்தன. தன் கணைகளால் நகுலனை துவம்ஷம் செய்த கர்ணன் அவனைக் கொல்வதற்கு இறுதிக் கணையைப் பாய்ச்ச எத்தனிக்கையில் குந்திக்குக் கொடுத்த வரம் ஞாபகத்திற்கு வருகின்றது. "போர்க்களத்தில் அர்ச்சுனனைத் தவிர வேறு எந்தப் பாண்டவர்களையும் கொல்லமாட்டேன்" என்ற வாக்கு கர்ணன் கொடுத்த வாக்கைக் காப்பதிலும் கர்ணன் அல்லவா. நகுலனைப் பார்த்து "போ போய்விடு" எனக் கூறிய படி போர்க் களத்தின் முன்நகர்ந்தான்.

மகரவியூகத்தின் மூலை முடுக்கெல்லாம் சென்று பாண்டவ படைகளை வேட்டையாடிய கர்ணனின் விழிகள் அர்ச்சுனனைத் தேடியது. அவனது அம்பறாத்துணியில் இருந்த நாகாஸ்திரம் "எப்போது என்னை அர்ச்சுனன் மீது செலுத்தப் போகிறாய்? நான் எப்போது அவனைக் கொல்வது?" எனக் கேட்டுக் கொண்டிருந்தது. திடீரெனக் கர்ணனின் மூளையில் புதிய தந்திரோபாயம் ஒன்று மின்னி மறைந்தது. பாண்டவர்களின் தளபதி திட்டதுய்மன் வகுத்திருக்கும் சக்கரவியூகத்தை பிளந்துகொண்டு எதிரிப் படைகளுக்கு நடுவே சென்று அவர்களை துவம்சம் செய்வது என்ற நினைப்பு மனதில் எழுந்ததும் தனது களத்தளபதிகளை அழைத்து புதிய வியூகத்தினை வகுத்தான்.

போர் புரிந்து கொண்டிருந்த கர்ணன் திடீரென தனது தளபதிகளை அழைத்து இரகசிய ஆலோசனை நடத்தி அவர்களுக்குக் கட்டளையிட்டதும் அவர்கள் முகங்களில் புதிய உற்சாகத்துடன் துரியோதனனின் தம்பிமாரையும் அழைத்துக் கொண்டு போர் அரங்கின் ஓர் பகுதியில் ஒன்று கூடுவதும்

அர்ச்சுனனின் தேரோட்டியாக ஒருவகையில் பாண்டவர்களுக்குத் தளபதியாகச் செயற்பட்டுக் கொண்டிருந்த பார்த்தசாரதியின் கண்களில் தெரிந்தது. கண்ணன் அர்ச்சுனனுக்குத் தேரோட்டினாலும் கர்ணனின் செயற்பாடுகளை கூர்ந்து அவதானித்துக் கொண்டிருந்தான். போரின் இறுதிக் கணத்தையே மாற்றி அமைக்கும் சக்தி கர்ணனுக்கு உண்டு என்பது மாயக் கண்ணனுக்குத் தெரியும்.

திடீரென தனது படைத்தளபதிகளுக்கு உத்தரவிட்டு விட்டு துரியோதனன் போர்புரியும் இடம் நாடி அவனைச் சந்திக்கக் கர்ணன் செல்வதை அவதானித்த அர்ச்சுனன் "கண்ணா இங்கே என்ன நடக்கிறது? ஏன் கர்ணன் தளபதிகளுடன் கதைத்தான், இந்தப் போர்க்களத்தில் இது நாள் வரை இப்படி நடந்தது இல்லையே? இங்கு என்ன நடக்கப்போகிறது? ஒரு பகுதியில் ஒன்று கூடும் தளபதிகளும் போர்வீரர்களும் என்ன செய்யப் போகிறார்கள் நீதான் கூறவேண்டும்" என்றான்.

"அர்ச்சுனா இந்தப் போர்க்களத்தில் ஒரு புதியவீர காவியம் அரங் கேறப்போகிறது. எமது சக்கரவியூகத்தினை உடைத்துக்கொண்டு கர்ணனின் மகரவியூகம் உள்நுழையப் போகிறது. அப்படி நுழைந்தால் இன்றுடன் இந்தப் போர் முடியும். அது மட்டுமல்ல பாண்டவப் படைகள் மொத்தமாக அழிந்து நாசமாக வேண்டியதுதான்"

"கண்ணா கடைசிவரை எங்களைக் காப்பேன் என்று சத்தியம் செய்தவன் நீ. நீதான் இதுநாள் வரையான எமது வெற்றிகளுக்கும் காரணம். உனது வழிப்படுத்தலிலேயே நாம் வென்றோம். இனிமேலும் எங்களையும் எமது படைகளையும் நீதான் காத்தருளவேண்டும்". அர்ச்சுனனின் வேண்டுதலில் ஒரு பதட்டம் நிலவியது.

"பயப்படாதே அர்ச்சுனா, இது எனது யுத்தம். எனது யுத்தத்தையே நீங்கள் நடத்துகிறீர்கள். என் மூலம் நீ சிவனிடம் பெற்ற பாசுபதாஸ்திரத்தை அவர்கள் மீது அனுப்பு. வீரகாவியம் எழுத நினைத்து ஒன்றுகூடிய கர்ணனின் படைகள் அழிந்து போகட்டும்".

கண்ணனின் வார்த்தைகளைக் கேட்டு தைரியப்பட்ட அர்ச்சுனன் சிவன் தனக்களித்த பாசுபதாஸ்திர ஆயுதத்தை அவர்கள் மீது ஏவினான். தனது படைத்தளபதிகளையும், படையினரையும் நோக்கி வரும் அர்ச்சுனனின் கணை தனது படையினரின் உடல்களை எரித்து கருக்கிவிடும் என்பது கர்ணனுக்குத் தெரிந்தது.

உடனே அவன் அசுவத்தாமனை அழைத்து அதற்கு எதிராக அவனிடம் உள்ள பாசுபதாஸ்திரத்தை ஏவும்படி கட்டளை இட்டுவிட்டு

தானும் தனது கணைகளை ஏவினான். அசுவத்தாமனின் பாசுபதாஸ்திரத்திற்கும் கர்ணன் ஏவிய கணைகளுக்கும் தாக்குப் பிடிக்க முடியாத அர்ச்சுனனின் பாசுபதாஸ்திரம் திசைகளை மறந்து, காலங்களைக் கடந்து, தீப்பொறி களைக் கக்கியபடி வன்னிமண்ணின் மீது விழுந்து வெடித்தது. அதன் எரிகணை வீச்சு எங்கும்பரவி "வீரகாவியம்" படைக்கக் கூடி நின்ற வீரமறவர்கள் மீது வெடித்துச் சிதறியது. குருசேத்திரத்தில் விழவேண்டியது குருசேத்திரப்புரத்தில் விழுந்தது. ஒரு இனத்தின் விடியலை வேரோடு சாய்த்தது.

ஆக்கியதும் நானே! அழித்ததும் நானே என்ற புன்னகையுடன் தனது விஸ்பரூபம் காட்டிநின்ற கண்ணன் மீது எங்கிருந்தோ பறந்துவந்த கல்லொன்று தாக்கி அவனது நெற்றிப்பொட்டில் இருந்து குருதி வழிந்து கொண்டிருந்தது.

**- 2013**

# புதிய ஏற்பாட்டின் எழுதப்படாத பக்கங்கள்



## அதிகாரம் - 1

*(பாஸ்கா திருவிருந்து)*

1. பாஸ்கா எனும் புளிப்பற்ற அப்பவிழாவில் தன் சீடர்கள் பன்னிருவரோடு பாஸ்கா திருவிருந்து உண்ணுவதற்காக இயேசு வீற்றிருந்தார்.
2. இரவின் நிசப்தம் ஏதோ ஒரு துர்ச்சம்பவம் நடைபெறப் போவதற்கான முன்னேற்பாடு நிகழ்வாக இயற்கையின் அசைவில் ஒரு சிறு மாற்றம். கலக்கம். மானுடமகனின் இறுதிக்காலம் எண்ணப்பட்டுக் கொண்டிருந்த அந்த சில மணித்துளிகள்.
3. இயேசுவைப் பிடிப்பதற்கான முயற்சியில் மறை நூல் அறிஞர்களும், தலைமைக் குருக்களும், படைத் தளபதிகளும் தமக்குள் கூடிப் பேசி அவரை எப்படியாவது கையும் களவுமாகப் பிடிப்பதற்கான நேரத்திற்காகத் தம்மைத் தயார் படுத்திக் கொண்டனர்.
4. இரவு பாஸ்கா விருந்துண்ணலுக்குப் பின்னர் அவரைக் காட்டிக் கொடுப் பதற்காக யூதாஸ் ஸ்காரியோத் வாக்குப்பண்ணி அதற்கான சன்மானத்

தொகையாக முப்பது வெள்ளிக்காசுகளைப் பெற்றுச் சென்றிருந்தான்.

5. எனவே எப்பிடியாவது இன்று நள்ளிரவுக்குள் இயேசுவைப் பிடித்துவிட முடியும் என்ற நம்பிக்கை அவர்கள் முகங்களில் தெரிந்தது.
6. முப்பது வருடங்களுக்கு மேற்பட்ட அவரைப் பிடிப்பதற்கான அவர்களது தேடுதல் வேட்டை முற்றுப்பெறும் நாள் அல்லவா அது?
7. இயேசுவின் பணிப்பின் பேரிலேயே அந்த வீட்டில் பாஸ்கா விருந் துண்ணல் ஆயத்தமாகி இருந்தது.
8. ஊரின் ஒதுக்குப் புறத்தில் அமைதியாக இருந்த அந்த வீட்டின் உள்ளே பதின்மூன்று ஆன்மாக்கள் பல்வேறு சிந்தனைகளோடு போட்டி போட்டுக் கொண்டிருந்தன.
9. பாஸ்கா விருந்துக்கு முன்னதாக தனது பன்னிரெண்டு சீடர்களின் கால்களையும் கழுவி தன் மேலாடையினால் துடைத்து முத்தமிட்டார்.
10. இயேசு தனது கால்களைக் கழுவும் வேளை தடுத்த தன் அன்புக்குரிய சீடன் பேதுரு விடம் "நான் உங்களுக்குச் செய்வதை நீங்கள் பிறருக்குச் செய்யுங்கள்." என்று விடை பகர்ந்தார்.
11. கால்கழுவும் சடங்கு நிறைவு பெற்று பாஸ்கா திருவுணவுப் பலிப் பொருட்களை தன் சீடர்களுக்கு பகிர்ந்து கொடுத்தார்.
12. பாஸ்கா இரவுப் பலி முடிவடைந்ததும் அவர் சிறிது நேரம் தனது சீடர்களுடன் உரையாடினார்.
13. உண்மையான திராட்சைச்செடி நானே என் தந்தையே அதை நட்டு வளர்ப்பவர்.
14. என்னிடமுள்ள கனி கொடாத செடிகள் அனைத்தையும் அவர் தறித்து விடுவார்.
15. கனி தரும் அனைத்துச் செடிகளையும் மிகுந்த கனிதருமாறு கழித்து விடுவார்.
16. நான் உங்களோடு இணைந்திருப்பதைப் போல் நீங்களும் என்னோடு இணைந்திருங்கள்.
17. கொடி திராட்சைச் செடியோடு இணைந்திருந்தாலன்றி தானாகக் கனிதர இயலாது.
18. அதுபோல் நீங்களும் என்னோடு இணைந்திருந்தாலன்றிப் பயன் தர முடியாது.
19. நானே திராட்சைச் செடி நீங்களே அதன் கொடிகள்.
20. ஒருவர் என்னுடனும் நான் அவருடனும் இணைந்திருந்தால் அவர் மிகுந்த கனிதருவார்.
21. என்னை விட்டுப் பிரிந்து உங்களால் ஒன்றும் செய்ய முடியாது.

22. ஆரம்ப காலங்களில் உங்களால் எல்லாம் செய்யக் கூடியதாக இருப்பதைப் போல் ஒரு தோற்றப்பாடு இருக்கும்.
23. இது அவர்கள் என்னிடமிருந்து உங்களைப் பிரிப்பதற்கு தரும் சன்மானமேயன்றி வேறில்லை.
24. இதுவும் நான் இல்லாவிட்டால் உங்களுக்கேது?
25. என்னைப் பிடித்துச் சிலுவையில் அறைந்த பின்னர் உங்கள் முக் கியத்துவம் அவர்களுக்குத் தேவையிராது.
26. அவர்களாக உங்களைக் கை கழுவி விடமுன்னர் மக்களே உங்களை வெறுக்கத் தொடங்கி விடுவர்.
27. ஏனெனில் பரலோக இராச்சியத்தின் வாசற் கதவுகளுக்கான திறவுகோல் நானே. நான் இல்லா விட்டாலும் எனது வழிவந்த ஒருவனாலேயே உங்கள் அனைவருக்கும் விடியல் ஏற்படும்.
28. என்னோடு இணைந்திராதவன் கொடியைப்போல் தறித்து எறியப்பட்டு உலர்ந்து போவார்.
29. அச் செடிகள் கூட்டிச் சேர்க்கப் பட்டு நெருப்பில் எரிக்கப்படும்.எனப் பலவிதக் கருத்துக்களை அவர்களிடம் கூறிவிட்டு சற்று இளைப்பாறு வதற்காக பாஸ்காவுக்கென தயார்படுத்தப்பட்டிருந்த அந்த வீட்டின் மேல்தளம் நோக்கிச் சென்றார். அவர் கூறிய வார்த்தைகளை மனதில் இருத்தி பதினொரு சீடர்களும் தங்களுக்குள் சிந்தனை செய்தபடி இருந்தனர்.

# அதிகாரம் - 2

## இயேசுவும், யூதாஸ்காரியோத்தும்

1. மேல்தளம் நோக்கி இயேசு செல்லவும் அங்கே அவருக்காகக் காத்திருப்பவன் போல் யூதாஸ் காரியோத் அவருக்கு முன்னமே சென்று நின்றிருந்தான்.
2. அவர் மேல்தள அறைக்குள் காலடி வைத்து உள்ளே வரவும் அவரது காலடியில் சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கினான்.
3. அவரது பாதங்களின் மேல் அவரைக் காட்டிக் கொடுப்பதற்காக அவன் பெற்றுக் கொண்ட முப்பது வெண் காசுகளையும் கொட்டினான்.
4. இயேசு யூதாசைப் பார்த்து "யூதாஸ் என் அன்புக்குரிய சீடனே இந்தக் காசுகளைப் பொறுக்கிக் கொள்' என்றார்.
5. அவனது கண்கள் என்னும் மாநதியில் இருந்து பிறப்பெடுத்த கண்ணீர் ஊற்றுக்கள் அவரது புனித பாதங்களைக் கழுவிக்கொண்டிருந்தது.

6. “ராபி இந்த இரவும், இந்த இரவின் நிகழ்ச்சிகளும் எமக்குத் தேவைதானா? தெரிந்து கொண்டே நாம் எமக்கான கடைசி நிமிடங்களை எண்ணிக் கொண்டிருக்கின்றோம்.
7. நீங்கள் நினைத்தால் இந்த சோகச் சுமையில் இருந்து வெகு சீக்கிரத்தில் தப்பிவிட முடியுமே… ஏன் இந்த துன்பியல் நாடகம் பிரபு?” யூதாஸ் ஸ்காரியோத் பேசினான்.
8. “யூதாஸ் மானிட மகனின் இறுதிக் கனங்கள் இவை… எனது பிறப்புப் பற்றி உனக்குத் தெரியுமா? நான் பிறந்தபோதே தனது அரசுக்கு ஆபத்து வந்து விடுமோ என்று ஏரோது மன்னன் என்னைக் கொல்வதற்கு தேடித் தோற்றுப்போய் எத்தனை ஆயிரம் குழந்தைகளைக் கொலை செய்தான்.
9. பின்நாட்களில் எனது போதனைகளைக் கேட்டார் என்பதற்காக ஏரோது வழிவந்த ஆட்சியாளர்களால் எனது மக்கள் எவ்வாறு துன்புறுத்தப் பட்டார்கள்.
10. எத்தனை உயிர் இழப்புக்கள். எத்தனை சொத்திழப்புக்கள். மீண்டும் மீண்டும் நான் இருக்கும் வரை இந்த அழிவுகள் தொடரவே செய்யும்.
11. எனது மக்கள் நிம்மதி இழந்து எத்தனை காலந்தான் வாழ முடியும்? எனவே எனது இறுதிக் காலங்களை நானே தேர்ந்து கொண்டேன்.
12. எனக்குத் துணையாக உன்னையும் சேர்த்துக் கொண்டேன்.”
13. “பிரபு உங்களைக் காட்டிக்கொடுப்பதற்காகவா என்னைத் தேர்ந்து கொண்டீர்கள்?”
14. “சீமோன் ஸ்கோரியோத்தின் மகனாகிய யூதாஸ் ஸ்காரியோத்தே என்னைக் காட்டிக் கொடுப்பதற்காக உன்னை நான் தேர்ந்து கொண்டது ஒரு காரணத்தின் பொருட்டே.
15. எனதருமைச் சீடர்களில் நீயே திறமையானவன். என்னைப் போல் பேச்சாற்றல் உள்ளவன்.
16. என்னைப் போல் போர்க் குணாம்ச ஆளுமை கொண்டவன்.
17. எனவே என்னைக் காட்டிக் கொடுக்கச் சந்தேகம் இல்லாமல் இயங்கும் ஒருவன் தேவை அது நீதான்.”
18. ‘ராபி இது எனக்குப் பாவச் செயல் அல்லவா? குருவைக் காட்டிக் கொடுத்த சீடன் என உலகம் என்னைத் தூற்றுமே.”
19. “யூதாஸ் கலங்காதே பதற்றப் படாதே ‘நீ ஒரு பாறை உன்மேல் என் திருச்சபையைக் காட்டுவேன்.’ என்று நான் நம்பிக்கை வைத்திருக்கும் எனது சீடன் பேதுருவே இன்று விடியற் காலை சேவல் இருமுறை கூவ முன்னர் மும்முறை என்னை மறுதலிக்கப் போகிறான்.

20. அவனைப் போல் என்னை மறுதலித்து என்னையும் என் கொள்கை களையும் மறக்கப் போகும் பல சீடர்கள் உள்ளனர்.
21. யார் யார் என்ன செய்வார்கள்? என்ன செய்யப் போகிறார்கள்? என்பது எனக்குத் தெரியும். எனவே உனக்குக் கலக்கம் வேண்டாம். அதைரியப் படாதே உன் கடமையைச் செய்."
22. "பிரபு இந்தப் பாவக் கிண்ணத்தை பருக என்னை அழைக்கிறீர்களே உங்கள் கட்டளைப்படியே முப்பது வெள்ளிக் காசுகளைப் பெற்று வந்தேன். இதிலிருந்து தப்பிக்கவே முடியாதா?"
23. "யூதாஸ் இக்கணம் இந்த இரவின் முடிவில் எம்முன் உள்ளது. மூன்று வழிகளே. . .
24. முதலாவது – என்னை நீ முத்தமிட்டுக் காட்டிக் கொடுக்கப்போகும் தருணத்தை ஏற்படுத்தாமல் படைவீரர் கையில் சிக்காமல் தப்பிச் செல்ல வேண்டும்.
25. இரண்டாவது – படைவீரர் என்னைக் கைது செய்ய முன்னர் நானாகவே மரணத்தைத் தழுவி எனது உடலைப் படையினர் கையில் கிடைக்காமல் உங்களைச் சொல்லி அழித்துவிட வேண்டியது.
26. மூன்றாவது – என்னைத் தேடி வரும் படைவீரர்களிடத்தில் நானாகவே கைதாவதற்குரிய வழி சமைத்து அவர்கள் என்னைக் கைது செய்து, சித்திரவதைகள் புரிந்து அவர்கள் கையாலேயே எனது கபாலம் திறக்கப்பட்டு முள்முடி சூட்டப்பட்டு சிலுவையில் அறையப்பட வேண்டும்.
27. முதலாவதும் இரண்டாமாவதும் எனது மக்களை என்னை நம்பியவர் களை மேலும் மேலும் துன்பப்படுத்தும். யூதாஸ் நான் கேட்டுக்கொண்டால் எனது தந்தை வான தூதர்களை அனுப்பி என்னைத் தூக்கிச் செல்ல மாட்டாரா?
28. நான் தப்பிச் சென்றால் என்னைத் தேடுவதை ஒரு காரணமாக வைத்தே மீண்டும் மீண்டும் என் மக்களையும் எனது கொள்கைகளை ஏற்றுக் கொண்டவர்களையும் துன்புறுத்துவார்கள்.
29. நானாகவே மரணத்தைத் தழுவிக் கொண்டு எனது உடலை இல்லாது செய்தால் அவர்களது பழிவாங்கல் உணர்வுக்கு அது வடிகாலாக அமையாது.
30. மானுடமகன் பாடுகள் பல படவேண்டும் என்று விடுதலை நூலில் எழுதப்பட்டுள்ளதே?
31. விடுதலை என்பது பாடுகள் பல அனுபவித்த பின்தான் கிடைக்கும் என்பது எமது முன்னோர் காலத்து அனுபவம் அல்லவா?

32. எனவே எனது உடலை அவர்கள் கையில் ஒப்புவித்தால் அதனை அவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்யட்டும். பழிதீர்க்கட்டும். ஆனால் இதன் மூலம் அவர்களது கோபாவேஷம் அடங்கி இதுவே எனது மக்களுக்கான ஒரு விமோசனமாக மாறிவிடும் அல்லவா."

33. இயேசுவின் வார்த்தைகளின் அர்த்தம் யூதாசுக்குப் புரிந்தது. அதன் ஆழமும் தெரிந்தது. அவன் கண்களில் இருந்து நீர் அருவியாய்க் கொட்டியது.

34. மீண்டும் அவரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான். அவன் எழுந்தபோது முப்பது வெள்ளிக் காசுகள் கொண்ட முடிச்சு அவன் கையில் இருந்தது.

35. ஒரு தேவரகசியத்தின் மகிமையை உணர்ந்தவனாக வாசலை நோக்கிச் சென்ற அவனை

36. "யூதாஸ்" என்ற தேவ மைந்தனின் அன்பான அழைத்தல் தடுத்து நிறுத்தியது.

37. எங்கே திரும்பிப் பார்த்தால் மீண்டும் அழுது விடுவோமோ என்ற நிலையில் அவரைப் பார்க்காமலே நின்றான்.

38. அவனின் மனத்துயரின் வியாகுலம் இயேசுவுக்குப் புரிந்தது.

39. "யூதாஸ் கவலைப்படாதே உனக்கு ஒன்று சொல்கிறேன். எங்கெல்லாம் எனது பெயர் உச்சரிக்கப்படுகின்றதோ எங்கெல்லாம் எனது கொள்கை களை ஏற்றுக் கொள்கிறார்களோ அங்கெல்லாம் உனது பெயரும் ஒலிக்கும்.

40. இயேசுவைக் காட்டிக் கொடுத்தவன் என்ற இழிப் பெயர் உனக்கு என்பொருட்டு ஏற்பட்டாலும் எம் மக்களுக்காய் நீ பெற்ற இந்த இழிப் பெயரின் காரணமாகவே சரித்திரத்தின் பக்கங்களில் எனது பெயரைப் போலவே உனது பெயரும் உயிர்வாழும்.

41. எனது முக்கிய சீடர்களின் பெயர்களை நாளை மக்கள் மறந்து போகலாம்.

42. ஆனால் எனது பெயர் உள்ளவரை உனது பெயர் நிலைத்து நிற்கும்.

43. ஏனெனில் என்னை யாரும்தேர்ந்து கொள்ளவில்லை.

44. நானே உங்களைத் தேர்ந்து கொண்டேன். நான் சொன்னதையே நீங்கள் செய்தீர்கள்.

45. நான் செய்ததையே நீங்கள் சொன்னீர்கள். நானே வழி என்வழியாய் அன்றி யாரும் விண்ணரசு செல்ல முடியாது."

46. படியிறங்கிச் செல்லும் யூதாஸ் ஸ்காரியோத்தின் கால்களில் இப்போது புதுத்தெம்பு கூடியிருந்தது.

47. இவ்வளவு நேரமும் பெரும் சுமையாய் அழுத்திக் கொண்டிருந்த முப்பது வெள்ளிக்காசுகள் இப்போது சுமையாகத் தெரியவே இல்லை.

**- 2013**

# ராவணாபுரி



சந்தியாகாலப் பூசைக்கான ஆலயமணி ஓசை பெருஞ்சத்தத்துடன் ஒலிக்கவும் மண்டோதரி சொர்ப்பனம் கலைந்து விழிக்கவும் சரியாக இருந்தது. அவளின் உடலில் ஒருவித நடுக்கம், முகத்தில் வியர்வைத்துளிகள் முத்துமுத்தாக வழிந்து கொண்டிருந்தன. உறக்கம் கலைந்து எழுந்தவள் தனது தாலியை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டாள். அவளது வாய் 'கோணேசப்பெருமானே' என மெல்ல முனகத் தொடங்கியது.

என்ன இது? இந்தக் கெட்ட சொர்ப்பனம் அண்மைக்காலமாக அடிக்கடி இரவில் வந்து தொல்லைப்படுத்துகிறது?. அதுவும் என்று மில்லாதவாறு இன்று ஆலய மணி ஓசை கேட்கும் இந்த நேரத்தில் இந்த சொர்ப்பனம் வந்து போனது ஏதாவது துர்ச் சம்பவம் நிகழப்போவதற்கான அடையாளமோ...?

திருக்கோணேசமலையில் மாதுமை அம்பாள் சகிதம் வீற்றிருக்கும் கோணேசப்பெருமானின் ஆலய மணி ஓசை தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருந்தது

மஞ்சத்தின்மேலே ஆஜானுபாவனாக துயில் கொள்ளும் தனது கணவன் ராவணேசனைப் பார்க்க மண்டோதரிக்குப் பெருமையாக இருந்தது. அவனது முகத்தில் தெரியும் அந்த 'தேஜஸ்' அவன் உறங்கும் போதும் எதுவித குறைவுமில்லாமல் ஒளிர்ந்தது.

தீவிர சிவபக்தனான அவன் உறங்கும்போது கூட அவன் நெற்றியில் அழியாமல் இருக்கும் அந்த திருநீற்றுப்பூச்சு அவனை ஒரு ஞானியாகவே அடையாளம் காட்டியது.

வீணை வாசிப்பதில் சிவனின் மனம் குளிர்வித்தவன் அல்லவா அவன்? தன் அன்னை மீது கொண்ட பெரும்பக்தி காரணமாக கைலாயங்கிரியில் உள்ள சிவனையே தனது லங்காபுரிக்கு பெயர்த்துவர முயன்றபோது சிவன் தனது வலது பாதப் பெருவிரலை அவன் மீது ஊன்றியவேளை தனது உடலையே வீணையாக்கி வாசித்த இசையில் மயங்கிய சிவன் அவனுக்களித்த வரங்கள்தான் எத்தனை?

இசையால் தன் இறைவன் மனதை நிறைத்தவன். தன் குணத்தால் மண்டோதரியின் இதயத்தை ஆட்கொண்டதில் அதிசயமில்லை.

தன் தாயை அளவு கடந்து நேசிக்கும் ஒருவனால் எல்லோரையும் நேசிக்கமுடிகிறது. பிறரில் அன்பு செலுத்துவதில் ராவணன் எல்லோரையும் விஞ்சி நிற்பவன்.

மண்டோதரி வைத்தகண் மாறாமல் தனது ஆருயிர் கணவன் ராவணனையே பார்த்துக் கொண்டிருந்தாள். உறக்கத்திலும்கூட அந்த ராஜ கம்பீரம் குறையாமல் என்ன அழகாக இருக்கிறார்? ஒரு சுத்த வீரனுக்கு அழகு எந்நேரமும் தன்நிலை தளராமல் இருப்பது.

ராவணன் உறக்கத்திலும் தன்னிலை உணர்ந்தவனைப் போலவே இருந்தான். ஒரே சீராக ஒலித்துக்கொண்டிருந்த அவனின் மூச்சுக் காற்று அவனது உடலில் தடவியிருந்த சந்தனத்துடன் இணைந்து ஒருவித சந்தன வாசனையை அந்த அறையெங்கும் பரப்பிக்கிடந்தது.

சாஸ்திர சம்பிரதாயங்களில் கைதேர்ந்த ராவணன் சோதிடக்கலையில் ஒரு மகாஞானி. ராவணனின் எல்லா நடவடிக்கையிலும் ஒரு சோதிட கணிப்பிருக்கும். இவர் தனது உறக்கத்திலும் சோதிட கணிப்பின் படிதான் சயனித்திருக்கிறார் என்ற நினைப்பே மண்டோதரிக்கு அந்நேரத்தில் கூட சிரிப்பை வரவழைத்தது.

தனது தந்தை விஷ்ரவ முனிவரைப் போலவே, ராவணன் மகாராஜாவாக அந்த லங்காபுரியை ஆண்டு வந்தாலும் அவனது அரண்மனை வாழ்க்கையில் ஒரு எளிமை இருந்தது.

லங்காபுரி

அது தங்க நகரமல்லவா?

தேவர்களுக்காக விஷ்ரவ முனிவரால் உருவாக்கப்பட்ட தீவல்லவா அது!

விஷ்ரவ முனிவருக்கும் அசுரகுலப் பெண்ணான கைகேசிக்கும் பிறந்த நால்வரில் மூத்தவன் அல்லவா ராவணன்!

ராவணன் தன்னைக் கரம்பற்றிய பின்னர் தனது தந்தையான மாயாசுரன் என அழைக்கப்படும் மயன் அந்த லங்காபுரியை சொர்க்க லோகத்திற்கு இணையான வகையில் அல்லவா கட்டமைத்தான். ஒவ்வொரு கட்டிட வேலைப்பாடும் பிரமிக்கத்தக்கவை மலை முகடுகளிலும், மலைகளைக் குடைந்தும் எவ்வளவு அழகான நுட்பமான வேலைப்பாடுகள் அவை?

லங்காபுரி அது குபேரனின் பூமி அல்லவா?

விஸ்ரவ முனிவரின் முதல் மனைவியான ரிஷிகுமாரிக்குப் பிறந்த குபேரன் அல்லவா லங்காபுரியை தன் வசம் வைத்திருந்தான். தனது தமையனிடம் இருந்து ராவணன் தனது பராக்கிரமத்தால் மீட்டெடுத்த மண் அல்லவா அது? லங்காபுரி தேவர்களின் நகரம். இன்று தனது கணவன் ராவணனின் ஆட்சியில் அது தங்கநகரமாக ராவண தேசமாகியுள்ளது.

இந்த உலகம் உள்ள நாள்வரை பேசப்படப்போகும் தமிழன் ஆளும் பூமியல்லவா இது? என்ற நினைப்பு மண்டோதரியைப் புளகாங்கிதம் கொள்ள வைத்தாலும் அந்தக் கனவின் கோரம் உலகமெங்கும் பேசும் லங்காபுரிநகரம் தீப்பற்றி எரியும் கோரக் காட்சி, அக்னி தேவனின் சுவாசத்தால் தங்கப் பாளங்கள் உருகி நதியாகி ஓடும் காட்சி அவளை நிலைகுலையச் செய்தது.

அந்தக் கனவின் கோரம் அவளைத் தாக்கினாலும்? வைத்தவிழி வாங்காமல் தனது கணவனை பார்க்கும் பார்வையை அகற்றினாளில்லை. தன்னைப் போலவே ஒரு சுத்த வீரனை மகனாகத் தந்தவன் அல்லவா அவன்? ஆம்.

மேகநாதன்!

அவனை நினைக்க அவளது அடிவயிற்றில் குளிர்மை படர்ந்தது. பெற்றவயிறும் பால் கொடுத்தமார்பகங்களும் பெருமிதத்தால் நிறைந்தன. வீரனா அவன்? மாவீரன் அல்லவா?

அவன் பிறக்கும் போதே மின்னல் வெட்டி, வானகத்தில் பெரும் இடி ஓசை கேட்டதே, அதனால் வைத்த பெயர் அல்லவா மேகநாதன்.

அவன் மட்டுமல்லவா இந்த உலகின் மஹா மஹாரிதி? சஸ்திர அஸ்திரப் பிரயோகத்தில் அவனை வென்றிட இவ்வுலகில் யாருளர்?

தனது தந்தையின் கட்டளைப்படி இந்திரலோகம் சென்று இந்திரனை வெற்றி கொண்டதினால் 'இந்திரஜித்' என்ற காரணப்பெயர் பெற்றவன். பிரம்மனின் பிரமாஸ்திரம், விஷ்ணுவின் நாராயணாஸ்திரம் சிவனின் பாசுபதாஸ்திரம் என மூவரின் அஸ்திரங்களையும் பெற்ற ஒரே வீரன் அல்லவா?

நினைவுச் சுழலுக்குள் அவள் மனது சுழன்று வந்தாலும் அந்தச் சொர்ப்பனத்தின் பீதி அவளது மனக் கண்முன்னால் தோன்றி மறைவது குறையவில்லை.

என்று ராவணனின் தங்கையும் தனது மைத்துனியுமான 'சொர்ணநகை' வேட்டையாட லங்காபுரியில் இருந்து கிளம்பி தெற்குப்பக்க காடுகளுக்குள் சென்று அங்கு வாழ்ந்த இராம – லக்ஷ்மணர்களின் கரங்களால் மூக்கறுபட்டு மூளியாக வந்தாளோ, அன்றிருந்து இந்தக் கனவு வருவது தொடர்கிறதே.

தன் குடிமக்களையே தன் பிள்ளைகள் போல் நேசிக்கும் ராவணன் தனது அன்புத் தங்கை அவமானப்பட்டு வந்ததை சகிப்பானா? நேசத்தைச் சொன்னது குற்றமா?

ஒரு ஆடவன் மேல் தனக்குள்ள ஆசையை வெளிப்படுத்தியது குற்றமா? தனது காதலைத் தெரிவிக்கும் உரிமை பாரததேசத்தில் இல்லையா...? இதற்குப் பரிசு பெண்ணை அவமானப்படுத்துவதா?

ராமன் மேல் 'சொர்ணநகை' கொண்ட காதல் தகாது என்றால் அதனை எடுத்துச் சொல்லியிருக்கமுடியும். அவதார புருஷனாகப் பேசப்படும் ராமனுக்கு இது புரியாதா என்ன?

தமிழ்ப் பெண் என்றால் அவதார புருஷர்களும் ஆயுதம் ஏந்தி விடுவார்களா என்ன? இதன்பலனை காலாகாலத்துக்கும் அனுபவிக்கப்போவது சீதை அல்லவா?

ஆண்களின் தவறுகள் எல்லாம் பெண்களின் தலையில் அல்லவா விழுகின்றன? 'சீதை' என்ற அந்தப் பெண்ணைப்பற்றி நினைக்கும்போது என்மனதுள் ஒருவித இனம் புரியாத தாய்மைப் பாசம் ஏற்படுவது தவிர்க்கமுடியாமல் இருக்கிறதே, சீதையும் ஒரு பெண்தானே?

சீதையாவது சொர்ணநகைக்கு நடந்த அகோரத்தை தடுத்திருக்கலாமே? இன்று சீதை லங்காபுரியில்! தனது தங்கைக்கு நேர்ந்த கொடுமைகண்டு ராவணேசன் சும்மா இருப்பானா?

லாங்காபுரி மன்னன் தனது படைத்தளபதிகளைக் கூட அனுப்பவில்லை. தானே தனியனாகச் சென்று சீதையை தனது விமானத்தில் ஏற்றிவந்தான்? ஜடாயு வெட்டப்பட்டான் சீதை லங்காபுரியில் சிறை வைக்கப்பட்டாள். அது சிறையல்ல...

ஒரு அரசிளங்குமாரிக்குக் கொடுக்க வேண்டிய சகல மரியாதை களுடன் அசோக வனத்தில் சீதையை உலவவிட்டான். அந்த வனத்தின் அழகை அவள் ரசிக்கலாம். அதன் காய்கனிகளை புசிக்கலாம். அந்த வனமே அவளது ஆட்சியில்தான்.

ஆனால் அதில் இருந்து வெளியே மட்டும் அவளால் செல்லமுடியாது. அந்த வனத்தைச் சுற்றி எவரும் உள்நுழைய முடியாதபடி ராவணசேனைகள் இரவும் பகலும் காவலிருக்கின்றன. இதுவல்லவோ பெண்மையை மதிக்கும் செயல். தான் சிறைகொண்டவளைக் கூட பாதுகாப்பாக வைத்திருக்கும் ஆண்தன்மை.

மீண்டும் அவள் கண்ட சொர்ப்பனத்தின் பயங்கரம் அவளை அழுத்தத் தொடங்கியது. சில தினங்களுக்கு முன் லங்காபுரி வந்த வானரத்தூதுவன் லங்காபுரியின் சில பகுதிகளில் தீ விபத்து ஏற்படக் காரணமாகியதும் தனது மைத்துனன் விபீஷணன் அண்மைக்காலமாகத் தனது சகோதரனாகிய ராவண மகாராஜாவையே எதிர்த்துக் கேள்வி கேட்கத் தொடங்கியிருப்பதும் அவளுக்கு நல்ல சகுனமாகத் தெரியவில்லை. என்னதான் சுத்த வீரனாக இருந்தாலும் உள் வீட்டிற்குள்ளேயே அதுவும் தனது சொந்தத் தம்பியே தனக்கு எதிரான கருத்துக்களை முன்வைத்ததும் ராவணன் சற்றுக் குழம்பியே போனான்.

“சொர்ணநகை எனக்கு மட்டுமா தங்கை? தம்பி விபீஷணனுக்கும் தங்கை தானே? ஏன் எனக்கு ஏற்பட்ட அந்தப் பாச உணர்வு அவனுக்கு மட்டும் இல்லாமல் போனது?” என்று பலமுறை மண்டோதரியிடம் கூறியது அவளுக்கு அந்தக் கணத்தில் ஞாபகம் வந்தது.

அண்மைய காலங்களில் விபீஷணன் ராம, லக்ஷ்மணர்களுடன் தொடர்பில் இருப்பதை ஒற்றர்கள் மூலம் அறிந்த ராவணன் “விபீஷணன் எதிரிக்குத் துணைபோனான் என்ற அவப்பெயர் அவனைச் சூழுமே. இனிமேல் காட்டிக் கொடுப்புக்கும் அவனது பெயரே சரித்திரம் தோறும் உதாரணமாக பேசப்படுமே. வீரம் விளைந்த லங்காபுரி மண்ணில் துரோகமும் சமபங்கு வகித்தது எனச் சரித்திரம் பேசுமே” எனப் பலமுறை மண்டோதரி யிடம் கூறி கவலைப்பட்டிருக்கிறான்.

தன் ஞாபகஓட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைத்த மண்டோதரி ராவணன் பாதங்களை வருடி அவனை மெல்ல எழுப்பினாள்.

அவள் கரம் பட்ட மறுணமே உறக்கத்தில் இருந்து விழித்த ராவணன் “தேவி சந்தியாகாலப் பூசைக்கான ஆலய மணி ஒலித்துவிட்டதா?” என வினவினான்.

"ஆம் பிரபு சில நாழிகைகள் முன்னரே ஆலயமணிகள் ஒலித்து ஓய்ந்தன".

"இருவரும் ஸ்நானம் செய்துவிட்டு புறப்படுவோமா தேவி'"

"புறப்பிடுவோம், பிரபு, நான் துஷ்ட சொர்ப்பனம் கண்டு விழித்துக் கொண்டேன். அந்தக்கோணேச பெருமானே எனக்கு ஆறுதல்...?

"துஷ்ட சொர்ப்பனமா? வெறும் சொர்ப்பனம் என்ன செய்து விடும் தேவி?"

"பிரபு அந்த சீதையைச் சிறைப்பிடித்து வந்தநாள் முதல் எனக்கு அடிக்கடி இப்படியே சொர்ப்பனங்கள் வருகின்றன.... நானும் தங்களுக்கு பல முறை கூறியுள்ளேனே..?"

சீதையின் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் ராவணனின் முகம் மெல்லப் பிரகாசித்தது. அவனது கண்களில் வழமையாக மின்னும் அந்த ராஜகம்பீரபார்வை மறைந்து, ஒரு பாசக்கார தந்தையின் பார்வை தெரிந்தது.

"சீதா.... சீதா.... சீதா" என்று அவனது உதடுகள் மெல்ல முணுமுணுக்கத் தொடங்கின.

.......

லங்காபுரி அரண்மனைவாசல் வாயிலில் நுரைகக்க, புரவியில் இருந்து பாய்ந்து இறங்கிய அந்த ஒற்றர்படைத்தலைவன் நேராக ராவண மகாராஜாவின் அரியணை அருகே வந்து பணிந்து நின்றான்.

ராவணனின் கையசைவினைத் தொடர்ந்து "ராவணமகாராஜாவின் சமூகத்திற்குப் பணிவு. போர்க்களத்தில் தங்கள் இளைய சகோதரர் கும்பகர்ண மகாராஜா வீரமரணம் அடைந்துவிட்டார் பிரபு" என்ற செய்தியைக் கூறவும் தனது சிம்மாசனத்தில் இருந்து எழுந்தார் ராவண மகாராஜா. அவரைத் தொடர்ந்து அவரது மந்திரி பிரதானிகளும் எழுந்து நின்றனர்.

ராவணசேனைக்கும் ராம லக்ஷ்சுமணர்களின் வானரசேனைக்கும் யுத்தம் ஆரம்பமாகியதில் இருந்து ராவணனின் படைத்தரப்பில் பல முன்னனித்தளபதிகள் வீரமரணம் அடையும் செய்தி புதியதல்லவென்றாலும் கும்பகர்ணனின் இழப்பு அவனுக்கு பேரிழப்பே.

தன் அண்ணனின் வார்த்தைக்கு மறுபேச்சு பேசாதவன் கும்பகர்ணன். தனக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்து அவன் ராவணனை தனது தந்தைக்கும் மேலாகவே மதித்துவந்தான். ராவணனும் தனது தம்பியைப் போலல்லாமல் தனது மகனைப் போலவே கும்பகர்ணனை பேணிவந்தவன். சொல்லப்போனால் கும்பகர்ணனுக்கு அடுத்த படியாகவே அவன் மேகநாதனை யும் கவனித்தான். அந்தளவுக்குக் கும்பகர்ணன் மேல் ஒருவித தனிப்பாசம்

இருந்தது. இன்று அந்த கும்பகர்ணனே போர்க்களத்தில் வீழ்ந்தான்.

ராவணனின் மீசை துடித்தது அவனது கண்கள் கோவைப்பழம்போல் சிவந்து பயங்கரம் காட்டியது. மார்புகள் விம்மிப் புடைக்க எங்கே மார்புக் கவசம் வெடித்து விடுமோ என்ற நிலையில் கடும் சீற்றத்தில் தனது வலது பாதத்தை தூக்கிப் பூமியில் உதைத்தான். நிலம் அதிர்ந்து பூமி கிடுகிடுக்க....

"நாளை நானே போர்க்களம் புகுவேன் அந்த ஆரிய ராமனையும் லக்ஷ்மணனையும் சிறை பிடிப்பேன்" ராவண மகாராஜாவின் வாயில் இருந்து வார்த்தைகள் உதிரவும்

"தந்தையே என்னை மறந்து போனீர்களா? தனயன் இருக்க தந்தை போர்க்களம் புகுவதா? நாளை நான் போர்க்களம் புகுவேன். என் சித்தப்பாவையும், சகோதரர்களையும் அழித்தவர்களை நானே அழிப்பேன் இது உறுதி தந்தையே.."

"இந்திரனையே சிறைபிடித்த என் இளவலே இந்திரஜித் உன் தந்தை சொல்கிறேன் நாளைய படைத்தலைவன் நீயே! உன் பின்னே ராவணாபுரிப்படைகள் நிற்கும் மகனே?..."

........

லங்காபுரியின் வடமுனைப் போர்க்களம். ராம, லக்ஷ்மணர்களின் தலைமையில் வானரப்படைகளும் பல்வேறு தேசங்களைச் சேர்ந்த ஆரியப் படைவீரர்களும் அணிவகுத்து நிற்க அவர்களுக்கு எதிர்ப்புறம் லங்காபுரியின் இளவல் இந்திரஜித் என அழைக்கப்படும் மேகநாதனின் தலைமையில் நாகர்குலப் படைகளும், அரக்கர், இயக்கர், வேடர், பழங்குடித் தமிழர் என பெரும் படையணியே அணிவகுத்து நின்றது.

ராமனின் படைக்கு ராவண மகாராஜாவின் தம்பி விபீஷணனின் தலைமைப் பொறுப்பை ஏற்று படைத்தளபதியாக நின்றான்.

இந்திரஜித்தை படைத்தளபதியாக போர்க்களத்தில் கண்டதும் விபீஷணனின் முகம் மாறிப்போனது. இந்த உலகத்தில் இறுதிப் பரியந்தம் வரை மஹா மஹாரிதியாக நிற்கப்போகும் ஒரேவீரன். எவராலும் வெல்லப்பட முடியாதவன். சஸ்திர அஸ்திர பிரயோகத்தில் தன்னிகரற்றவன் தன் தவவலிமையால் பிரம்மா, விஷ்னு, சிவன் என முத்தேவர்களிடம் இருந்தும் அஸ்திரங்களைப் பெற்ற முதலும் முடிவுமான ஒரேவீரன்.

பிரம்மாவின் பிரம்மாஸ்திரம், நாராயணனின் நாராயணாஸ்திரம் சிவனின் பாசபதாஸ்திரம் என அஸ்திரங்களைப் பெற்றிருந்தாலும் தனது அடக்கமான குணத்தினால் எதுவிதமான தீய நடவடிக்கைகள் மீதும்

நாட்டம் கொள்ளாது காத்துவருபவன் 'அஸ்திரப் பிரயோகம் உலக மாந்தர்களை ஒட்டு மொத்தமாக அழித்துவிடும் என்று அறிந்தவன். உலக நன்மைக்காக அந்த அஸ்திரங்களை இதுவரை எங்கும் பிரயோகிக்காமல் காத்துவருபவன்.

"தனது அத்தையை அவமானப்படுத்தியவர்களை அழிப்பேன்" என அன்றே சபதம் பூண்டவன். இன்று அந்தச் சபதம் நிறைவேற்ற படைத் தளபதியாக வந்து நிற்கிறான்.

இந்திரஜித் தனது எதிர்ப்படைகளின் நடுவே வீபீஷணனைக் கண்டான்.

சித்தப்பா!

இந்த மண்ணுக்கு முடிசூட ஆசைப்பட்டு எதிரியுடன் கைகோர்த்து தனது சொந்தச் சகோதரனுக்குத் துரோகம் இழைக்கும் தனது சித்தப்பாவை பார்க்க பாவமாக இருந்தது.

வரலாற்றின் பக்கங்களில் காலா காலத்துக்கும் ஒரு துரோகியாகப் பதியப்படப்போகும் விபீஷணனைப் பார்க்க ஒருபக்கம் அனுதாபமாகவும் சொந்தச் சகோதரனைக்காட்டிக் கொடுத்துச் சொந்த மண்ணுக்கும் மக்களுக்கும் துரோகம் இழைக்கத் துணிந்த அவரைப் பார்க்கக் கோபமாகவும் இருந்தது.

விபீஷணனுக்கு வெட்கம் பிடுங்கித்தின்றது. தன்னை ஒரு புழுவிலும் கேவலமாக பார்க்கும் இந்திரஜித்தின் பார்வையில் சர்வாங்கமும் ஒடுங்கி தன் சகலதையும் இழந்து நிர்வாணமாக நிற்பதைப் போன்ற உணர்வு ஏற்பட்டது. அவனது ஆத்மா நாணப்பட்டு தலைகவிழும் சந்தர்ப்பத்தில் போர்முரசு ஒலிக்கத் தொடங்கியது.

யுத்தத்தின் ஆரம்பம் முதலே இந்திரஜித் எதிரிப்படையை துவம்சம் செய்தான். அவனது ரதம் எதிரிப்படைகளின் உள்ளே நுழைந்து வெளிவரும் போதெல்லாம் பலரை வேட்டையாடியது. பலமுறை தனக்கு எதிராகப் போர்புரிய வந்த தனது சித்தப்பாவின் மீது போர்புரியாமல் விலத்திச் சென்றான். அது விபீஷணனுக்கு மேலும் மேலும் ஆத்திரத்தையும் அவமானத்தையும் ஏற்படுத்தியது. ராமர் படையின் தளபதியை அவன் ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளாததும் தன்னை ஒரு சாதாரண படைவீரன் என்ற நிலையிலும் கவனத்தில் எடுத்து யுத்தம் செய்யாமல் அவன் தவிர்ப்பது தன்னை அவமானப் படுத்தும் செயல் என்பது விபீஷணனுக்கு புரிந்தது.

யுத்தம் ஆரம்பித்து ஒருசில நாழிகைக்குள்ளேயே வானரப் படைகளை அழித்தொழிப்பு செய்தான் இந்திரஜித். இந்நிலை தொடர்ந்தால் இன்றைய நாளிலேயே தமது படைகள் அனைத்தும் அழிந்துவிடும் என்ற பயம்

ராம லக்ஷ்மணர்களை ஆட்கொண்டது.

இந்திரஜித்தின் முன்னேற்றத்தினை தடுத்து அவனை அழித்துவிடும் நோக்கில் லக்ஷ்மணன் தனது ரதத்தினை இந்திரஜித்தின் ரதத்தின் எதிரே கொண்டுவந்தான்.

இருவருக்கும் இடையே கடும் போர் மூண்டது. லக்ஷ்மணனுக்குத் துணையாக ராமனும் துணைக்கு வந்தான். இருவரையும் ஒருங்கே கண்ட இந்திரஜித்துக்கு தனது சபதம் ஞாபகம் வந்தது. அவர்களை பார்க்க பார்க்க சினம் பலமடங்காகியது.

தனது அத்தையை மூளியாக்கியவர்கள். ஒரு பெண் என்றும் பாராது அவளது மூக்கை அறுத்து அவளது அழகைச் சிதைத்தவர்கள்.

அவனையறியாமலேயே அவனது மனம் சினத்தின் உச்சத்தில் கரங்கள் நாகாஸ்திரப்பிரயோகம் செய்யத் துணிந்தது. நாகஸ்திரம் சீறிப்பாய்ந்து சென்று ராம லக்ஷ்மணர்களையும் பக்கத்தில் போர்புரிந்த படைவீரர்களையும் தாக்கியது. ராமனும் லக்ஷ்மணனும் உயிரற்ற உடல்களாக தமது ரதத்தின் மீது வீழ்ந்தனர்.

அவர்களைத் தூக்கிக் கொண்டு வானரப்படைகள் செல்லவும் அன்றைய யுத்தம் முடிவுக்கு வந்தது.

..........

இந்திரஜித்திற்கு போர்க்களத்துச் செய்திகளைக் கேட்க கேட்க ஆச்சரியமாக இருந்தது. தனது நாகாஸ்திர பிரயோகத்தில் பலியான ராம, லக்ஷ்மணர்கள் மீண்டும் பிழைத்துக்கொண்டது அதிசயமாக இருந்தது. அது இரண்டாவது முறையும் நடந்த போது இந்திரஜித் ஆச்சரியத்தின் உச்சத்திற்கே சென்றான்.

வானர வீரனான அனுமன் சஞ்சீவி மலையையே பெயர்த்து வந்ததும் அதன் காரணமாக இறந்தவர்கள் உயிர் பெற்று எழுந்து வந்த செய்திகளை ஒற்றர் படைத்தலைவன்மூலம் அறிந்து கொண்டான் இந்திரஜித்.

எப்படியாவது அவர்களை வெற்றி கொண்டு தனது சபதத்தினை நிறைவேற்ற வேண்டும் என்ற வெறி இந்திரஜித்திற்கு ஏற்பட நாளைய போருக்கு முன்னர் தமது குல தெய்வமான 'நிகும்பளா தேவி'க்கு யாகம் செய்து நாளைய போரை தொடங்க எண்ணம் கொண்டவன் நிகும்பளா என்ற இடத்திற்கு தனது புரவியைத் தட்டி விட்டான்.

இந்திரஜித் தனியாளாக நிகும்பளா செல்வதை ஒற்றர் மூலம் அறிந்த விபீஷணன் ராம லக்ஷ்மணர்களை அழைத்துக்கொண்டு நிகும்பளா சென்று காத்திருந்தான். அவனுக்குத்தெரியும் இந்தயாகம் முடிந்து

இந்திரஜித் போருக்கு வந்தால் பின்னர் ராமனின் படையை யாராலும் காப்பாற்றமுடியாது என்று.

தனது குலதெய்வழிபாடுகளை முடித்து ஆலயத்திற்கு வெளியே வந்த இந்திரஜித் மீது லக்ஷ்மணனின் கணை வந்து தாக்கியது. நெஞ்சில் முதல் பாணத்தை தாங்கியவன் ஆலயத்திற்கு எதிரே நின்ற மரங்களின் பின்னால் மறைந்திருந்து வெளியே வந்த ராமனையும், லக்ஷ்மணனையும் கூடவே சிறிய தந்தையான விபீஷணனையும் கண்டான்.

பெண்மீது தமது வீரத்தைக் காட்டிய பேடிகள். மாவீரனானவாலியை மறைந்து நின்று கொன்றவர்கள் இன்று நிராயுதபாணியாக ஆலயத்திற்கு வந்த தன்மீது தாக்குதல் தொடுத்த அவர்களை பார்க்க இந்திரஜித்திற்கு பரிதாபமாக இருந்தது.

இவர்களா அவதார புருஷர்கள்? இவர்களா தெய்வாம்சம் பொருந்தியவர்கள்?

“இந்தத் துரோகத்தின் பலனை உங்கள் தேசம் என்றோ ஒரு நாள் அனுபவிக்கும். எனது குலவீரன் ஒருவன் உங்கள் தேசத்தின் வாசலுக்குவந்தே உங்களை வேரறுப்பான்....”

என்று சொல்ல நினைத்த இந்திரஜித்தின் தலையை கொய்தது லக்ஷ்மணனின் அடுத்த அம்பு. உலகின் எந்த இராணுவத்தாலும் வெல்லப் படமுடியாத ஒரு மாவீரனின் உயிரற்ற உடல் துரோகத்தினால் வீழ்த்தப் பட்டது...

......

இந்திரஜித்தின் மறைவால் லங்காபுரியே சோகத்தில் ஆழ்ந்தாலும் மறுநாள் யுத்தத்திற்கு தயாரானார் ராவண மகாராஜா. அன்று இரவு ராவணன் அரண்மனை

லங்காபுரியின் ராஜகுரு மன்னனின் அழைப்பை ஏற்று அரண்மனைக்கு வருகை தந்தார்.

“குருவே என்ன நடக்கிறது இங்கே? இந்திரஜித்தினால் கொல்லப் பட்டவர்கள் மீண்டும் உயிர் பிழைக்கிறார்கள். ஆலயத்திற்கு நிராயுத பணியாக யாகம் செய்யச் சென்றவனை கொல்கிறார்கள். யுத்த தர்மம் தெரியாத பேடிகளா இவர்கள்... இவர்களுடனான நாளைய எனது யுத்தம்? வெட்கமாக இருக்கிறது. இந்தயுத்தத்தின் முடிவுதான் என்ன?”

“ராவணா இந்த யுத்தத்தின் ஆரம்பமே நீதானே? அதன் முடிவும் நீதான்!”

“யுத்தத்தின் ஆரம்பம் நானா? சொர்ணநகையை அவமானப்படுத்தி

அவளை மூளியாக்கியது யார் குருவே?"

"ராவணா இது ஒரு சம்பவம். விதியின் செயல். அவ்வளவே இதன் தொடர்ச்சி எங்கு வந்து முடிகிறது பார்த்தாயா?

இதன் ஆரம்பம் உணராதவனா நீ. உன்னைப் போல் ஜோதிட சாஸ்திரத்தில் விற்பன்னர் இந்த உலகில் யார்? இருந்தாலும் கூறுகிறேன் கேள்.

நீ சிறை வைத்திருக்கும் உனது மகள் சீதையின் சாபமே இது...."
"சீதையின் சாபமா...?"

"என்ன ராவணா ஒன்றுமே அறியாதவன் போல் பேசுகிறாய்..? பல வருடங்களுக்கு முன்னர் நீ காத்தவீரிய அர்ச்சுனனுடன் போர்புரிந்து மீளுகையில் வழியில் கண்ட அப்ஸ்சரசை ஞாபகம் வருகிறதா? அவள் மீது காதல் கொண்ட நீ, உனது காதலை அவளிடம் வெளிப்படுத்திய வேளை அவள் உரைத்தது ஞாபகம் வருகிறதா?

"நான் பிரம்மாவுக்கு என்றே அவரால் படைக்கப்பட்டவள். என்னைத் தீண்டுவது பாவம்" என்றாளே, நீ மோகத்தின் உச்சத்தில் அதனை சட்டை செய்யாமல் அவள் கரம் பற்றினாய். அவள் யாககுண்டத்தில் பாய்ந்து தனது உடலை அக்னிக்கு இரையாக்கும்போது உனக்குத் தந்த சாபமே இது.

"அடுத்த பிறப்பில் உன்னுடன் இருந்தே உன்னை அழிப்பேன்" என்று சாபமிட்டாள். அதன் பயனாக உனது மூத்த மகளாக அவளே வந்து பிறந்தாள்.

நீ ஜோதிட சாஸ்திரம் அறிந்தவன். எதிர்காலத்தில் அவளால் உனக்கு மரணம் ஏற்படும் என்பதனை அறிந்து மண்டோதரியிடம் பொய்யுரைத்து பச்சிளம் குழந்தையைப் பேழையில் வைத்துக் கடலில்விட்டாய். அது மிதிலையில் கரை ஒதுங்கி ஜனகன் மகளாக வளர்ந்து ராமனின் மனைவியாகி நின்றாள் சீதை. இன்று உனது மகளையே நீ சிறை வைத்தநிலை.

விதி வலிது ராவணா!

எந்த மகளால் உனக்கு மரணம் என்று அவளைக் கடலில் விட்டாயோ? இன்று அவள் சார்பாகவே இந்தயுத்தம்! நாளை நீ யுத்தம் செய்யப் போவது உனது மகளின் கணவனுடன் இந்த அழிவுகளுக்கு காரணம் சீதையாக இருந்தாலும் இந்த யுத்தம் உனது பொருட்டு ஆரம்பிக்கப்பட்டது. நீயே முடித்துவைக்கவேண்டும்"

ராஜகுருவின் வார்த்தைகள் ராவணனின் சிந்தையில் ஒரு தெளிவை ஏற்படுத்தியிருந்தது. நாளைய யுத்தத்தில் நான் மடிந்தாலும் என் மகளின் வாழ்வைப் பலியாக்கக் கூடாது. சீதையை விதவையாக்கியவன் என்ற

அவப் பெயர் எனக்கு வரவே கூடாது. என்ற நினைப்பு அவனை ஆட் கொண்டாலும் போரிட்டேமடிவேன். இல்லை அவர்களை லாங்காபுரியை விட்டே துரத்துவேன். உறுதிபூண்டான் ராவணன்.

ராவணயுத்தத்தின் இறுதிக்கணங்கள் பல முறை ராமனை யுத்தத்தில் அழித்து விடுவதற்கான சந்தர்ப்பங்கள் இருந்தாலும் ராவணமகாராஜா அதனைத் தவிர்த்து வந்தார்.

ராமனுக்கும் வீரன் என்ற முறையில் அது புரிந்தே இருந்தாலும் ராவணனின் அந்த போர்முறைக்கான அர்த்தம் புரியவில்லை. ஒவ்வொரு ஆயுதத்தினையும் பிரயோகிக்கும் போதும் 'ராமன் எனது மருமகன் சீதை எனது மகள்' என்ற நினைப்பு வந்து அஸ்திரங்களின் பிரயோகத்தில் ஒருவித தளர்வு நிலையை ஏற்படுத்தியது. இதனை ராமன் தனக்கு சாதகமாக்கிக் கொண்டான்.

ராமன் தனது கணைகளினால் ராவணனின் ஆயுதங்களை நிர்மூல மாக்கினான். பல மணி நேரயுத்தத்தின் பின்னரான பொழுதுகள் ராவணனின் சகல ஆயுதங்களும் அழிக்கப்பட்டு அவரது ரத சாரதியும் கொல்லப்பட்டான். அவரது ரதத்தின் தேர்க்கால்கள் சிதைக்கப்பட நிராயுத பாணியாக மல்யுத்தம் புரியத் தயாரான ராவணனின் வீரம் ராமனைத் திகைக்கச் செய்தது.

தன் உயிர்பறிக்க பல சந்தர்ப்பங்கள் கிடைத்தும் அதனைத் தவிர்த்து வந்த ராவணன் தற்போது நிராயுத பாணியாக நிற்பதைக்கண்டு

'ராவணா இன்று போய்
போருக்கு நாளை வா'

என்ற வார்த்தைகளை உதிர்க்கவும் வீரத்தின் விளைநிலமான அந்த மாவீரன் "மயிர்நீப்பின் உயிர்வாழா கவரிமா" போன்று அக்கணமே உயிரற்ற உடலாய் மண்ணில் சாய்ந்தான்.

**- 2018**

# யாருமிங்கே தீர்ப்பிடலாம்



ஒலிவ் மலை மலையடிவாரம் என்றுமில்லாதவாறு தகதகத்துக் கொண்டிருந்தது. மாலைச்சூரியன் தன் பொன்னிறக்கதிர்களை மேலிருந்து எங்கும் விசிறிக் கொண்டிருந்தாலும் மலையடிவாரத்தின் கீழே ஒரு மனிதச்சூரியன் நின்றது அங்கே மேலும் ஒளிச் செறிவை அதிகரித்துக் கொண்டிருந்தது.

ஆம் இயேசுகிறிஸ்து என்னும் தேவசூரியன் ஒலிவ் மலையின் மேலே தனது தந்தையாம் பரமபிதாவுடனான பிரார்த்தனைகளை முடித்துக் கொண்டு கீழே இறங்கி வந்திருந்தது.

தூரத்தே அவரது போதனைகளை கேட்பதற்காகவும் அவரிடம் ஆசி பெறுவதற்குமாக வழமை போலவே மக்கள் பெருங்கூட்டம் திரளாக திரண்டிருந்தது. சற்று ஓய்வு பெறும் பொருட்டு இயேசு மலையடிவார மணல்வெளியில் அமர்ந்தார்.

திடீரென அங்கு ஒரு கும்பல் வந்து நின்றது. அவர்கள் ஒரு அபலைப் பெண்ணை இழுத்து வந்து அவரின் முன்னே தள்ளினார்கள்.

மறைநூல் அறிஞர்களும், பரிசேயர்களும், வேதபரசகர்களும், தலைமைக்குருக் களும் அவரை ஏளனமாகப் பார்த்துக் கொண்டனர். அவரை எப்படியாவது தமது கேள்விகள் மூலமும், அவரது நடத்தைகளையும் போதனைகளையும் வைத்தே அவர் மேல் குற்றும் கற்பித்து அவர் மீதான தமது யுத்தத்தை ஆரம்பித்துவிட வேண்டும் என்பதும் அந்த யுத்தத்தில் அவரைப் பழி வாங்கிக் கொலை செய்துவிட வேண்டும் என்பதும் அவர்களது நீண்டநாள் ஆசையாக இருந்தது.

மோசே தமக்களித்த திருச்சட்டங்களை மீறுபவராகவும் புதிய புதிய வேதபாராயணங்களைப் பிரசங்கிப்பவராகவும் இயேசு விளங்கியதால் அவர்களது மரபுவழி ஆளுகை மக்கள் மத்தியில் செல்வாக்கு இழந்து போவது பற்றிய பெருங்கவலை அவர்களை ஆட்கொண்டிருந்தது.

சீசருக்கு வரி செலுத்துவது தொடர்பான இயேசுவின் கருத்தினை அறிந்து அதன்மூலம் அவரை இராஜதுரோக குற்றச்சாட்டின் மூலம் அரச விரோதியாக்கிவிட எடுத்த முயற்சிகளும் அவர் ஒரு நாணயத்தில் பொறிக்கப்பட்டிருந்த உருவத்தையும் எழுத்தையும் குறிப்பிட்டு ‘சீசருக்கு உரியதை சீசருக்கும் கடவுளுக்கு உரியதை கடவுளுக்கும் கொடுங்கள்.’ என உரைத்ததைத் தொடர்ந்து அவர்களால் அவர்மேல் குற்றம் சாட்ட முடிய வில்லை. இப்படி எத்தனையோ நிகழ்வுகள். அவரைப் பலமுறை குற்றவாளி யாக்கித் தீர்ப்பிட முனைந்த யூதர்களும், பரியேசரும், மறைநூல் வல்லுநர்களும் கடைசியாகக் கையிலெடுத்த ஆயுதம் பெண். அதுவும் விபச்சாரப் பெண்.

“போதகரே இப்பெண் விபச்சாரத்தில் ஈடுபட்டிருந்த வேளை கையும் மெய்யுமாகப் பிடிபட்டாள். இப்படிப்பட்டவர்களை கல்லால் எறிந்து கொல்ல வேண்டும் என்பது மோசே நமக்கு கொடுத்த திருச் சட்டத்திலுள்ள கட்டளை. நீர் என்ன சொல்லுகின்றீர் ” எனக் கேட்டனர்.

“ஒருவரது வாக்குமூலத்தைக் கேளாது அவர் என்ன செய்தாரென்று அறியாமல் ஏன் செய்தாரென்று புரியாமல்? ஒருவருக்கு தீர்ப்பளிப்பதுதான் மோசே உங்களுக்கு அளித்த திருச்சட்டமா...?”

இயேசு புன்னகைத்தபடியே மறுவினாவினைத் தொடுத்தார். அக் கேள்விக்கு அவர்களால் உடனடியாகப் பதில் சொல்லிவிட முடியவில்லை. மறைநூலில் கூறியுள்ளதைப் போன்று கலிலேயர்களிலிருந்து இறைவாக்கினர் ஒருவரும் தோன்றுவதில்லை என்ற நம்பிக்கை கொண்ட அவர்கள் இயேசுவைப் பார்த்து

“மேசேயின் திருச்சட்டமே எங்களுக்குப் பெரியது. அவரது திருச் சட்ட நூலில் உள்ளபடியே விபச்சாரத்தில் ஈடுபட்டவர்கள் கல்லால் எறிந்து

கொல்லப்பட வேண்டும் என்பது நியதி. எனவே இவள் கொல்லப்பட வேண்டியவளே" என வாதிட்டனர்.

"மேசேயின் திருச்சட்டத்தின் மூலம் இன்று விடுமுறை நாளாக இருந்தால், இவள் மீது நீங்கள் கல்லெறிந்து கொல்வது அவரது ஓய்வுநாள் சட்டத்தை மீறுவது போலாகி விடாது..?" என்று அவர் கேட்டதும் அவர்கள் திகைத்து நின்றனர்.

ஒருமுறை பார்வையற்ற ஒருவனுக்கு இயேசு ஓய்வுநாள் ஒன்றில் அவனது பார்வையற்ற கண்களின் மேல் சேற்றைப் பூசி, பின் அதனைக் கழுவச் சொல்லி அவனுக்கு பார்வை வழங்கியதும் அன்றைய தினம் ஓய்வு நாளாக இருந்ததைக் காரணம் காட்டி அவரை ஒழித்துக் கட்ட அவர்கள் முயன்றதும் அவர்களுக்கு ஞாபகத்திற்கு வந்தது.

தமது ஓய்வு நாள் சட்டத்தை வைத்து அவர் மீண்டும் தம்மையே திருப்பித் தாக்குவது அவர்களுக்குப் புரிந்தது. அவர் தொடர்ந்து அவர்களை நோக்கி "தன் வயிற்றின் பசி போக்க இப் பெண் தனது உடலை விற்று விபச்சாரம் செய்தாள். இன்று உங்களில் எத்தனையோ பேர் தாம் கொண்ட கொள்கைகளை கைவிட்டுத் தமது கடந்த கால செயற்பாடுகளை மறந்து தமது ஆடம்பர வாழ்க்கைக்கும் உல்லாசப் பயணங்களுக்கும் என தமது கொள்கைகளை விற்றுப் பிழைப்பு நடாத்துகிறார்கள். தமது சுயலாபங்களுக்காக தம்மை நம்பிய மக்களையே விற்று மன ரீதியாகவும் உடல் ரீதியாகவும் கொள்கை ரீதியாகவும் விபச்சாரம் செய்யும் பலபேர் ஊருக்குள் திரியும் போது அவர்கள் மீது உங்கள் சட்டம் பாயவில்லை. அவர்களைக் கல்லெறிந்து கொல்லுவது யார்? நீங்களே அவர்களாக இருக்கும் போது உங்களுக்கு யார் இங்கு தீர்ப்பு வழங்க முடியும்?" எனக் கேட்டார்.

அவர் மறைமுகமாகவும் நேரிடையாகவும் தாம் சார்ந்தோரைப் பற்றி கேள்வி எழுப்புவது அவர்களுக்குப் புரிந்தது. இருந்தாலும் தன் முயற்சியில் சற்றும் மனந்தளராத விக்கிரமாதித்தனைப் போல் அவர்கள் மீண்டும் மீண்டும் அந்த விபச்சாரப் பெண்ணின் மீது கல்லெறிவது தொடர்பாகவே அவருடன் வாதிட்டனர்.

அவர் மௌனமாக அந்த மணல்வெளியில் மணலைத் துளாவி அதில் தனது விரலால் சில எழுத்துக்களை எழுதினார். அரமாய் மொழியில் அதில் "சிகப்பு நிற அங்கி அணிந்த நீ நேற்று இவளுடன் விபச்சாரம் செய்யவில்லையா...?" என்ற வினா வடிவம் கொண்டிருந்தது. அதனைப் பார்த்த ஒருசில தலைமைக் குருக்கள் அவ்விடத்தை விட்டகல, பரிசேயர் களும் மறைநூல் அறிஞர்களும் மீண்டும் மீண்டும் அவரை ஓயாது

கேள்வி கேட்டுக் கொண்டிருந்தனர். இயேசு நிமிர்ந்து பார்த்து அவர்களை நோக்கி

"உங்களில் பாவம் செய்யாதவன் இவள் மேல் முதல் கல்லை எறிந்து தீர்ப்பிடட்டும். அதே வேளை இவளுடன் விபச்சாரத்தில் ஈடுபட்டவனையும் கையும் களவுமாகப் பிடித்த நீங்கள் அவனையும் அழைத்து வாருங்கள். இருவருக்கும் தண்டனைகள் சமமாக இருக்கட்டும்" எனக் கூறிவிட்டு மீண்டும் மண்ணில் எதையோ எழுதத் தொடங்கினார்.

மறைநூல் அறிஞர்களும் பரிசேயர்களும் தலைமைக் குருக்களும் மெல்ல மெல்ல அவ்விடத்தை விட்டு அகலத் தொடங்கினர்.

"அம்மா"

என்ற வீறிட்ட அலறல்! அந்தப் பெண்ணின் நெற்றிப் பொட்டை நோக்கி ஒரு கல் எறியப்பட்டு இரத்தம் வடிந்து கொண்டிருந்தது.

இயேசு கிறிஸ்து திகைத்து நிற்க அடுத்த கல் அவரை நோக்கி வந்து அவரது கபாலத்தை தாக்கியது. தேவமகன் படவேண்டிய பாடுகளின் காலம் வரும்வரை பல நேரங்களில் மாயமாய் மறைந்து அவர்களுக்குப் போக்கு காட்டிய இயேசு, தான் பாடுகள் பட வேண்டிய காலம் நெருங்கி வருவதை அறிந்தவராக அந்தக் கல்லெறிகளைத் தாங்கிக் கொண்டார். அவரது கபாலம் பிளந்து இரத்தம் வழிந்தது. மேலும் கற்களை எறிந்து தீர்ப்பிடத் தயாராகிக் கொண்டிருந்தவர்கள் யாரென்றால் - கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த குடிகளில் ஒருசிலர்.

**- 2012**

# பரசுராமபூமி



காற்றைக் கிழித்துக் கொண்டு வானில் பரவிய பொஸ்பரஸ் குண்டுத் துகள்கள் யுத்தத்தால் சிதறி, சின்னாபின்னமாக்கப்பட்டுக் கிடந்த பொதுமக்கள் கூடாரங்கள் மேல் விழுந்து சிதறின. உடனே கூடாரங்கள் தீப்பற்றிக் கொண்டன. அதனைத் தொடர்ந்து எங்கிருந்தோ வந்த ஆட்டிலறிக் குண்டுகளும், மல்டிபரல் குண்டுகளும், கட்டிடங்கள் மீதும், தற்காலிகமாக அமைக்கப்பட்ட மருத்துவமனைகள் மீதும், மக்கள் தம் உயிர்காக்கப் பதுங்கியிருந்த பதுங்கு குழிகள் மீதும் விழுந்து தொடர்ச்சியான ஒரு வெடிப்பதிர்வை ஏற்படுத்தின.

நூற்றுக்கு மேற்பட்ட பொதுமக்கள் சவங்களாய்ச் சரிய, கை, கால்களை இழந்து, காயப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களின் செந்நீர் மண்ணோடு மண் ணாய்க் கலந்து முள்ளிவாய்க்கால் மண் சிவந்த மண்ணாகிக் கொண்டிருந்தது.

ஓலங்கள்!

எங்கும் ஓலங்கள்!!

நீண்ட துயில் கொண்டிருந்த பரசுராமர் கண் விழித்தார்.

தொடர்ச்சியான ஓலங்களின் பெரும் சப்தம் அவரது உறக்கத்தைச் சில நாட்களாகவே கலைத்துக் கொண்டிருந்தது. அண்டப் பெருவெளியின் எங்கோ ஒரு மூலையில் இருந்து காற்றின் கரங்களால் துரத்தப்பட்டு அவரது செவிப்பறையில் மோதும் கணவனை இழந்த பெண்களின் ஓலம், பெற்றோரை இழந்த குழந்தைகளின் ஓலம், பிள்ளைகளைப் பறி கொடுத்த பெற்றோரின் ஓலம், சகோதரியை இழந்து. சகோதரனை இழந்து, தவிக்கும் உறவுகளின் ஓலம், கட்டிய மனைவியைப் பிரிந்து கைக்குழந்தைகளுடன் 'இனிமேல் என்ன செய்வது?' எனத் தவிக்கும் கணவன்மார்களின் ஓலம்.

மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதிப்பது போல், பெரும் காற்றால் அணையப் போவதாய் அல்லாடும் விளக்கினைப் போல் உயிர் மூச்சைக் கையில் பிடித்தபடி உயிருக்குத் தவிக்கும். இந்த வேளைகளிலும், தம் பிள்ளைகளைப் "போராட வா" என இழுத்துச் செல்லும் இயக்கத்தினரை நோக்கிய அப்பாவி பெற்றோரின் ஓலம்! ஓலம்!! எங்கும் ஓலம்! ஒப்பாரிகளின் தேசமாக மாறிப்போன மண்ணின் ஓலம். நவீன விஞ்ஞான சாதனைகளின் ஓர் அம்சமான ஹிரோசிமா – நாகசாகி போல் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் வன்னி மண்ணின் ஓலம்! இதென்ன பரசுராம பார்கவருக்குப் புதிதா? குருஷேத்திரப் போரில் அவர் பார்க்காத இழப்புக்களா என்ன? லட்சக்கணக்கில் மடிந்த போர்வீரர்களின் எண்ணிக்கை தெரியாதவரா என்ன? இருபத்தொரு தலைமுறைச் சத்திரியர்களின் குருதியைக் குடித்த அவரது மழுவிற்கு இந்த இரத்த அபிஷேகம் தூசு அல்லவா?

ஓலங்கள்.... அவரது காதின் செவிப்பறையைத் தட்டியதை விட பரசுராமரின் மனக்கதவுகள் அதிரத் தொடங்கின. ஓலங்கள் வெறுமனே ஒப்பாரிகளாக இல்லாமல் அதில் ஏதோ ஒரு செய்தி அவருக்குத் தெளிவாகக் கேட்டது.

"இருபத்திரெண்டாவது தலைமுறை... இருபத்திரெண்டாவது தலைமுறை" என ஏதோ ஒரு மந்திரச் சொல் அவரது மனச்சாட்சியை தொடர்ச்சியாகக் குத்திக் கிளறியது. வாயுதேவன் பரசுராமரை நித்தியமும் சிந்திக்க விடாமல் செவிப்பறையைத் தொடர்ச்சியாகத் தாக்கிக் கொண்டிருந்தான்.

இந்த ஓலங்கள்... யாருடைய ஓலங்கள்...? ஏன் என் செவியில் வந்து விழ வேண்டும்? அதுவும் இத்தனை நூற்றாண்டுகளுக்குப் பிறகு. ஏதோ ஒன்றின் நீட்சியாக அவரைக் குறிவைத்துத் தாக்குவதைப் போன்ற ஓர் உணர்வு அவருக்குள் ஆயிரம் ஆயிரம் கேள்விகளை எழுப்பியது. இருபத்தொரு தலைமுறை போதாதென்று மணக்கோலத்தில் வந்த இராமனிடம் போர் செய்யப் போய் தனது தவவலிமை இழக்கப்பட்டதும்

அதன் பிறகு ஏற்பட்ட ஞானஉபதேசம். அந்த நிகழ்விற்குப் பின் எனது "மழு" எந்த ஒரு சத்திரியனையும் கொல்லவில்லை. ஆனால் சில நாட்களாக எனது செவிகளில் விழும் "இருபத்திரெண்டாவது தலைமுறை" என்ற அந்த ஒலி எங்கிருந்து வருகின்றது. தலையைப் பிய்த்துக் கொண்ட பரசுராமர் மீண்டும் ஓர் முறை தனது சாபங்களை மீட்டிப் பார்க்க தொடங்கினார்.

தர்மதேவதை அவரைப் பார்த்து நகைப்பது அவருக்குத் தெரிந்தது. அவளது மகனை, ஆம் தர்மத்தின் மகனை சாபம் கொடுத்துக் கொன்ற வராயிற்றே, தன் உறக்கம் கலையாதிருக்க வலி தாங்கிய கர்ணனுக்கு அவனது குலத்தை அறியாமலேயே, தான் கொடுத்த சாபம், யுத்தக் கலைகளைக் கற்பித்துவிட்டு "யுத்தத்தின் போது கற்ற கலைகள் யாவும் மறந்து போகட்டும்" என்று சாபம் கொடுப்பது ஓர் குருவின் இலட்சணமா...? அதனை விட அன்று அவனைக் கொன்றிருக்கலாமே...? அல்லது தனது ஞான சிருஷ்டியால் அறிந்து அவனுக்கு கலைகளைப் போதியாமல் விட்டிருக்கலாமே? தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்ற தாரக மந்திரத்துக்குக் கட்டுண்டு பெற்ற தாயைக் கொலை செய்ததும், அதற்காக தந்தை தந்த வரத்தைக் கொண்டே தாயை உயிர்ப்பிக்கக் கேட்டதும். எல்லாமே அவசர புத்தியால் வந்த வினை. முன்யோசனையின்றி தனது வீரத்தையும் தவ வலிமையையும் பெரிதென எண்ணித் தன்னிச்சையாக எடுத்த முடிவுகள்.

மோனநிலையில் இருந்த பரசுராமரின் செவிகளில் மீண்டும் அந்த ஓலங்கள் பெரிதான அலறலாகக் கேட்கத் தொடங்கியது. "காப்பாற்றுங்கள், எங்களைக் காப்பாற்றுங்கள்...." பெரும் சப்தம் பரசுராமரை மட்டுமல்ல அவரது புரவியையும் அசைக்கத் தொடங்கியது. அவர் தட்டி விடாமலேயே அது அவரையும் சுமந்து கொண்டு அந்த ஓலங்கள் வந்த திசைநோக்கிப் பறக்கத் தொடங்கியது.

காடுகள், மலைகள், கடல்கள் எனப் புரவி பலகாத தூரம் கடந்து இறுதியாக வன்னிமண்ணின் பெருநிலப்பரப்பில் வந்துநின்றது.

யுத்தத்தின் சத்தங்கள், வெடிப்போசைகளின் அதிர்வுகள் பரசுராமரைப் பயங்கொள்ள வைத்தன. இது அவர் காணாத யுத்த களம். குருஷேத்திரப் போரை விடக் கொடூரமான யுத்த களம். அந்த யுத்தத்தில் நேர்மை இருந்தது. ஆனால் இங்கு....?

தன்னால் இருபத்தியொரு தலைமுறை சத்திரியர்கள் கருவறுக் கப்பட்டு நரமேதயாகம் செய்து அவர்கள் குருதியைக் கொண்டு உண்டாக்கிய "சமந்த பஞ்சம்" என்ற இடத்தில் நடைபெற்ற வீம துரியோதன யுத்தத்தில், யுத்த விதிமுறைகளுக்குமாறாக துரியோதனனைக் கதையால் வீமன் தொடையில் அடித்துக் கொன்றான் என்பதற்காகப் பாண்டவர்களின்

தேரோட்டியாகத் தன் தம்பி கண்ணன் போர் புரிந்தாலும், வீமனுக்கு எதிராகப் பலராமர் போர் புரியத் தயாரான யுத்த களம் அல்லவா குருஷேத்திரம்.

இங்கே யுத்த விதிமுறைகள், யுத்த தத்துவங்கள், அவருக்கு ஒன்றுமே விளங்கவில்லை. இது யாருடைய யுத்தம்? எந்த இரண்டு அரசுகள் தமக்குள் மோதுகின்றன என்பதே அவருக்குப் புரியாத புதிராக இருந்தது. ஆனால் இதுவும் ஒரு குருஷேத்திரப் போரின் நீட்சியாகத் தொடர்கின்றது என்பது மட்டும் அவருக்குப் புரிந்தது.

ஒருபக்கம் அவரது பெரும் தேசம் உட்பட, உலக வல்லரசுகளும் ஒன்று சேர்ந்து ஒரு மக்கள் கூட்டத்தின் மீது போர் தொடுப்பதாகப்பட்டது. இவர்கள் யார்....? இவ்வளவு பெரிய படையெடுப்புடன் மோதும் இவர்கள் யார்..? அவரது ஞானக் கண்கள் அகலத்திறந்தன. ஆயுதங்களுடன் ஓடித் திரியும் அந்த இளைஞர்கள் யார்....? திகைத்துப் போனார் இராமபத்திரன் எனும் பரசுராமர். சில வருடங்களுக்கு முன்னால் தனது தேசத்தில் தனது தேசத்தவர்களால் ஊட்டி வளர்க்கப்பட்ட இந்த இளைஞர்கள் மீது.... இன்று எனது தேசமே முன்னின்று போர் தொடுப்பதா...?

யுத்ததந்திரங்கள் சொல்லிக் கொடுத்து, ஆயுதங்கள் அள்ளிக் கொடுத்த எனது தேசமே இவர்கள் மீது போர் தொடுப்பதா? நான் கர்ணனுக்குச் செய்ததை எனது தேசம் இவர்களுக்குச் செய்கிறதா...?

இது எனது பாரத தேசத்தினதும், எனதும் சாபக்கேடா? புண்ணிய தேசம் என்பதும், மகான்களின் தேசம் என்பதும் வெறும் வெற்று வார்த்தைகள்தானா?

சத்திரியர்களின் இருபத்தியொரு தலைமுறைகளை நான் வேரறுத்தேன். இருபத்திரெண்டாவது சத்திரியர்களின் தலைமுறைகளை எனது தேசம் வேரறுக்கின்றதா...? தன் மீதும் தனது தேசத்தின் மீதான கோபமும் அவரது கண்களைச் சிவக்கச் செய்தது. வெட்கத்தில் தனது தாடி மயிர்க் கால்கள் ஒவ்வொன்றாக உதிர்ந்து விழுவது போன்ற பிரம்மை அவரை வாட்டி வதைத்தது. பரசுராமர் தனது பரசுவை எடுத்து காறித் துப்பிவிட்டு தூரத்தே எறிந்தார். அது நந்திக் கடல் பெரு வெளியில் சங்கமமாகியது.

அவரது புரவி அவரையும் சுமந்த கொண்டு வெள்ளைக் கொடி போர்த்திய உடலங்களின் நடுவே பாய்ந்தோடி வன்னிக் காட்டுக்குள் காணாமல் போனது.

**-2012**

# ஒர்மம்



வெண்பஞ்சு மேகங்கள் கூட்டம் கூட்டமாய் திருவிழாவில் கூடும் மக்கள் கூட்டத்தினைப் போல் வானமெங்கும் கூடித்திரிந்தன. இதமான சில்லென்ற காற்று மரங்களின் முகங்களில் அறைந்து அறைந்து அவற்றை அசைத்துக் கொண்டிருந்தன. காலை வெயிலின் சூடு பூமியெங்கும் மெல்ல மெல்லப் பரவத் தொடங்கியது.

அயோத்தி மாநகரம் என்றுமில்லாத வகையில் திருவிழாக் கோலம் பூண்டிருந்தது. அரண்மனை எங்கும் மலர்ச்சரங்களும், வாழை மரத்தோரணங்களுமாய் ஒரு மங்கல நிகழ்வின் அடையாளமாய் வீதிகள் தோறும் தென்னோலைச் சரங்களும், வீடுகளின் வாசல் தோறும் நிறைகுட அலங்கரிப்பும் மாவிலை தோரணங்களும் அரசிளங்குமாரர்களின் ரதங்கள் பயணிக்கும் பெருவீதிகள் மட்டுமல்ல அயோத்தி மாநகரின் சிறு வீதிகளும் அலங்கரிக்கப்பட்டேயிருந்தன.

அரண்மனைக்குள்ளே எல்லோரும் பரப்பரப்பாக இயங்கிக் கொண்டிருந்தார்கள். எல்லாவற்றையும் எல்லோரையும் இயக்குபவனாக பரதன் மும்முரமாகக் கட்டளைகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்தான். இன்றைய நாள் அவனைப் பொறுத்தவரை ஒருபொன்நாள். இத்தனை வருடகாலம் அவனது நெஞ்சை அழுத்திக் கொண்டிருந்த ஒரு பெருஞ் சுமையை இறக்கி வைக்க வாய்த்த தருணம் இன்னும் சில மணித் துளிகளில் வந்துவிடும் அல்லவா?

கைகேயி பெற்றவரம் அவன் தலையில் சாபமாக அல்லவா வந்து சேர்ந்திருந்தது. அயோத்தி மணிமகுடம் என்ற மலர்க்கிரீடத்தை அவனின் தலையில் சூடி அழகுபார்க்க விரும்பினாள் அவன் அன்னை. ஆனால் அவனுக்கு அது முட்கிரீடமாக அல்லவா தோன்றியது.

பதினான்கு வருடங்கள், ஆம் பதினான்கு வருடங்கள் அண்ணனின் பாதுகையை அரியாசனத்தில் வைத்து அழகு பார்த்தாலும், ராஜ்ஜியபாரம் என்னவோ அவன் தலையை அல்லவா அழுத்திக் கொண்டிருந்தது. கூடவே அண்ணனுக்கான துரோகம் என்ற அவப்பெயர் வேறு.

அண்ணனும் அண்ணியும்தான் சென்றார்கள். கூடவே இலக்குவனனும் சென்றது காலக் கொடுமையல்லவா? அரண்மனை விசேடங்களில் முனிபுங்கர்களின் வருகைகளின் போது தற்செயல் நிகழ்வாக ஊர்மிளையைக் காணும்தோறும் அவள் மீது ஏற்படும் பச்சாதாபமும், வியாகுலமும் அவனுக் குத்தானே தெரியும். இதற்கெல்லாம் தெரிந்தோ தெரியாமலோ தானும் ஒரு காரணன் என்ற மனஅவஸ்த்தை இந்த பதினான்கு வருடங்களும் அவன் நெஞ்சுக் குழிக்குள் ஒரு பந்தைப்போல் அழுத்திக் கொண்டிருந்தது.

நாதஸ்வர ஓசையின் உச்சபட்ச ஒலி பரதனின் காதுகளை அடைக்கிறது. சரயு நதிதீரத்தில் இருந்து அயோத்தி மாநகர அரண்மனை வாசல்வரை இராமனையும், சீதையையும், இலக்குமணனையும் மலர்த்தூவி அழைத்துவர ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அயோத்தி மாநகரமே ஒருவித ஆச்சரிய உலகில் மூழ்கியிருக்க அந்த அந்தப்புரத்தின் ஒரு அறையில் தனித்தே இருந்தாள் ஊர்மிளை.

பதினான்கு ஆண்டுகள் வனவாசத்தின் பின் இராமனும் சீதையும் இலக்குமணனும் இன்று அயோத்தி வருகிறார்கள் என்ற செய்தி அவள் செவிகளுக்கும் எட்டியது. ஆனால் அந்த செய்தியை மற்றவர்கள் கொண்டா டியது போன்ற எந்த விதமான உணர்ச்சியும் அவளைத் தொடவில்லை.

அன்று மிதிலை மாநகர உப்பரிகையில் தானும் சீதையும் பூப்பந்து விளையாடிக் கொண்டிருந்த வேளை மறுபுறத்தே நின்ற தனது சகோதரிகள்

மாண்டவிக்கோ, ஸ்ருத கீர்த்திக்கோ காட்டாமல் சீதைதான் தனக்கு அந்த காட்சியைக் காட்டினாள்.

ஒரு மாமுனியின் பின்னே இரண்டு திடகாத்திரமான வாலிபர்கள் வந்து கொண்டிருந்தனர். ஒருவன் கரியநிற மேனியுடனும் மற்றவன் செந்நிற மேனியுடனும் மிக அழகாக இருந்தனர். தானும் சீதையும் அவர்களைப் பார்த்து சிரித்துக் கொண்டிருப்பதைக் கண்டு எட்டிப்பார்த்த தனது சகோதரிகள் மாண்டவியும் ஸ்ருதகீர்த்தியும் தமக்கு கண்களால் ஜாடை காட்டிவிட்டு உள்ளே சென்றதும், மறுநாள் அரண்மனையில் சிவதனுசுவை உடைத்து இராமன் சீதையைக் கரம்பற்றியதும் இலக்குமணனுக்குத் துணைவியாகித் தானும் அயோத்தி வந்த நிகழ்வும் அவள் மனக் கண்முன்னே காட்சியாய் விரிந்தது.

சீதையை வயல்வெளியில் கண்டெடுத்த போது, தனது மூதாதையர் மூலம் கிடைத்த சிவதனுசுவைத் தூக்கி நாண் ஏற்றியவனுக்கே அவளை சுயம்வரம் செய்யவிருப்பதாக மாமன்னர் தனது தந்தை ஜனகர் அறிவித்திருந் ததும் அவளுக்கு ஞாபகம் வந்தது.

மணம் முடித்து அயோத்தி வந்து வாழ்ந்த காலங்கள் சொஞ்சம்தான். இயல்பிலேயே கோபக்காரனான இலக்குமணனை அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது. சாந்தமே உருவான இராமனை விடக் கோபக்காரனான அவனது ஆண்மை அவளுக்குள் ஒருவித கிளர்ச்சியை என்றும் ஏற்படுத்தி வந்தது. அந்த வகையில் பட்டத்து ராணியான சீதையைவிட தான் கொடுத்து வைத்தவள் என்ற நினைப்பு ஊர்மிளைக்கு வந்து சில தினங்கள் தான். காலம் எல்லாவற்றையும் புரட்டிப் போட்டது.

கைகேகியின் வரம், பரதனின் ஆட்சி, இராமனும் சீதையும் வனவாசம் புகுந்தது. எல்லாம் சரிதான் ஆனால் இந்த இலக்குமணனும் கூடச் சென்றதுதான் அவளால் பொறுக்க முடியவில்லை. எதுவித அபிப்பிராயமும் கேட்காமல் “அண்ணனுக்குப் பாதுகாப்பாகக் கூடவே செல்கிறேன்” என அவள் அந்தப்புரம் வந்து அவளது காதுகளுக்குள் ஓதிவிட்டு அவளது பதிலைக் கூட எதிர்பாராமல் சென்றதுதான் அவளது மனதில் தினமும் பேரலையாய் ஒலித்துக் கொண்டிருந்தது.

இதுதான் காதலா? இதுதான் இல்லறமா? கடமைக்காகக் கட்டிய மனைவியை விட்டுவிட்டுச் செல்வதுதான் அரசநீதியா? இராமன் சீதையை தன்னுடன் காட்டுக்கு அழைத்துச் செல்ல முடியும் என்றால் என்னை ஏன் இவர் அழைத்துச் செல்லவில்லை? அழைத்துத்தான் செல்லவில்லை “நீயும் வருகிறாயா?” என்று ஒரு வார்த்தைதானும் கேட்கவில்லை. அந்த

ஒரு வார்த்தை, ஒரேயொரு வார்த்தை வெளிவந்திருந்தால் போதுமே, நாய்க்குட்டி போலப் பின்னால் சென்றிருப்பேனே? எல்லோரும் தத்தம் குடும்பங் களுடன் இணைந்திருக்க, நான் மட்டுமல்லவா இந்தப் பதினான்கு வருடங்களும் துணையை பிரிந்து வேதனைப்பட்டது.

இரவுகள்தான் எவ்வளவு கொடுமையானவை. பதினான்கு வருடங்கள். முழுப் பகலும் முழு இரவும், ஒரு பெண்ணின் தனிமை எவ்வளவு காலக்கொடுமை.

பகல் முழுக்க லக்குமணனுடன் வாழ்ந்த அந்தக் குறுகிய காலத்துள் நடந்த பசுமையான நினைவுகளை அசை போட்டபடி ஒருவித கிறக்கத்திலும் மயக்கத்திலும் கழிந்தாலும் இரவுகள் என்பது எவ்வளவு வலிமையானவை. ஒவ்வொரு இரவும் அவனும் தானும் வாழ்ந்திருந்த அந்த உணர்ச்சிகரமான பொழுதுகள் அவளைக் கொல்லுமே.

சாளரத்தின் வழியே பட்டுத்தெறிக்கும் நிலவொளியின் சுருமையில் அந்தப்புரத் தோட்ட மலர்களில் இருந்து வரும் வாசனையும், அறையுள் கமழும் அகில் புகை சுகந்தமும், உள்ளமுருக லக்குமணன் மேல் கொண்ட காதல் பாடாய் படுத்த உடல் அதன் வெப்பத்தை தாள முடியுமா என்ன?

இரவுகள் தோறும் காமத்தால் தகித்த கணங்கள் எவ்வளவு? மூளைக்குள் பாயும் குருதியைப் போலவே அவனது நினைவுகள் உடலுக்குள் பாய்ந்து அது நரம்புகள் தோறும் வழுக்கிச் செல்கையில் இரத்தம் சூடேறி, தாபத்தின் காட்டில் தனித்தலையும் பறவையாய் அவள் மட்டுமே பறந்து திரிந்த நாட்கள் ஒன்றா இரண்டா.?

மோகத்தின் உச்சபட்ச வெப்பத்தால் சூடேறிய ரத்தம் அவள் முலைகளுள் பாய்ந்து விம்மிப்புடைத்து நிற்கையில் இலக்குமணன் கேசத்தைப் பற்றி மெல்ல இழுத்து தனது மார்புடன் அவள், அவன் தலையை அழுத்துகையில் வியர்வைத் துளிகளா, இல்லை தாபத்தின் கட்டுடைத்து மார்புக் காம்புகளில் இருந்து கசியும் அமிர்தத்தாரையா எனத் தெரியாமல் மேலும், மேலும் அணைக்க அணைக்க....

இறுதியில் அது தனது மஞ்சத்தில் கிடக்கும் தலையணைதான் என்று தெரிந்தபோது அவள் கண்களில் இருந்து வடிந்த கண்ணீரின் ஈரம் காயுமுன்னரே எத்தனை இரவுகள் விடிந்திருக்கும்...?

ஊர்மிளை!

பாவமடி நீ!

உன்னைப் போல் ஒரு அபாக்கியசாலியான பெண் இந்த உலகத்தில் இல்லையடி. எத்தனை நாட்கள் அவள் தன்னைத் தானே நொந்து

கொண்டிருப்பாள். காலம் கரையக் கரைய அவளுள் இருந்த காமத்தின் மதன நீர் வடிந்தது. நீண்ட பகல்களும், நீண்ட இரவுகளும் அவளுக்கு நித்திரையைப் பரிசாகத் தந்தன.

உறக்கத்தின் நடுவே அவள் உடல் வியர்த்து, மோகத்தின் தாபத்தில் எரியும் விரகத்தில் அவளது பெண்மையின் மயிர்க்கால்கள் சில்லிட்டு ஒற்றை நட்சத்திரமாக அவள் தனக்குள் எரிந்து கருகிப் போன நாட்கள் மெல்ல மெல்லக் கடந்து போயின.

அவள் தாபத்தின் காட்டில் ஞானத்தைத் தேடத் தலைப்பட்டாள். மெல்ல மெல்ல அவள் உடலில் காமத்தின் கண்கள் மூடிக்கொள்ளத் தொடங்கின. அதற்குப் பதிலாய் ஞானத்தின் கண்கள் திறக்கத் தொடங்கின. அவள் நித்திரையை உதறினாள். கானகத்தில் உறங்காமல் தன் தமையனுக்குத் துணையாய் நிற்கும் தன் கணவன் தனது உறக்கத்தையும் தனது விழிகளுக்குக் கடத்தியதை உணர்ந்து பல பகல்களும், இரவுகளும் அவனுக் காக உறங்கிக்கிடந்த பொழுதுகள் கடந்து மீதியுள்ள நாட்களை விழித்தே கழித்தாள். ஒருவித தவநிலையில் அவள் தன்னை உணரத் தலைப்பட்டாள்.

கடந்த சில நாட்களாய் அவளது கோலம் மாறியது. அரண்மனை அந்தப்புரத்துக்குள்ளேயே ஒரு தவமுனியைப் போல் மாறியிருந்தாள் அவள்.

அவளது அறையின் கதவுகள் திறக்கப்பட எதுவித சலனமும் இன்றி அமர்ந்திருந்த ஊர்மிளையின் தோள்களை மெல்லப் பற்றி திருப்பியது ஒரு கரம்.

ஐயாயிரத்துக்கு மேற்பட்ட இரவுகளும், பகல்களும், யாருடைய நினைப்பில் காயப்பட்டுக் கிடந்தாளோ அவன், ஆம் லக்குமணன். அவளது கணவன் அவளது தோள்களை வருடி அவளது முகத்தை தனக்கு நேராக தூக்கினான்.

அந்தக் கணம் அவன் திகைத்துப் போனான். "என்ன ஒளி? இந்தத் தேஜஸ் எங்கிருந்து வந்தது?" ஊர்மிளை தன் கண்களைத் திறந்து அவனைப் பார்த்தாள்.

அதில் காதல் இல்லை.

காமம் இல்லை. தாபம் இல்லை.

விரகத்தின் விரசமில்லை.

பதினான்கு வருடப் பிரிவின் போதையுடன் வந்த லக்குமணன் திகைத்து நின்றான். அவன் தேகம் முழுதும் அவள் நிறைந்து நின்றாள். பிரிவின் கொடுமையை அவன் உணரத் தலைப்பட்டான். பதினான்கு வருடங்களும் பணியின் காரணமாக நித்திரையற்று இருந்த களைப்பு

அவனை வாட்டியிருந்தாலும் ஊர்மிளையுடன் சேரப் போகிறோம் என்ற அந்த நினைப்பின் உச்ச இன்பம் கொடுத்த போதை அவனைப் புதிய மனிதனாக மாற்றியிருந்தது.

'ஊர்மிளை'

அவளை அன்புடன் அழைத்து அவளது கொவ்வை இதழ்களில் தனது இதழ்களைப் பதிக்கப் போனவனை மெல்ல நகர்ந்து தடுத்தாள் அவள்.

"ஏன் ஊர்மிளை... என்ன.....?"

அவனால் பேச முடியவில்லை. ஆண் புத்திக்கேயுரிய அவசரம் அவனுக்கு. ஊர்மிளை வார்த்தைகளை உதிர்த்தாள்.

"அன்பே இந்த பதினான்கு ஆண்டுகளும் இரவும் பகலும் உங்கள் நினைப்பில் வாழ்ந்த நான் உங்களை நினைத்துத் தவம் இயற்றத் தொடங்கி விட்டேன். இன்று நான் எதுவித ஆசாபாசங்களும் அற்ற பெண். தவமே எனது வரம். இனிமேல் நாம் இல்லற இன்பத்தில் சேர்ந்திருப்பது முடியாத காரியம். நாம் இருவருமே ஞானத்தின் உச்ச நிலையை அடைவோம்.

நீங்களும் என்னுடன் இணைந்து தவமியற்றுங்கள் இருவரும் இல்லற இன்பம் என்ற மாய உலகில் இருந்து விடுதலை பெறுவோம் பிரபு"

ஊர்மிளை கூறிமுடிக்கவும் அந்த நிலாக்காலப் பின்னிரவில் எங்கோ கேட்கும். சாக்குருவியின் ஓலம் விக்கித்து நின்ற லக்குமணனின் செவிகளில் ஒலிக்கத் தொடங்கியது.

**- 2018**

# நாசம்



இரவுச் சூரியனாய் முழு நிலா வான வீதியில் வலம் வந்து கொண் டிருந்த நேரம். நில வொளியின் கிறக்கமான பொழுதில் வனத்தை ஒட்டிய அந்தப்பகுதி மிக அமைதியாக இருந்தது. அடர் மரங்களின் கிளைகளுக்கு இடையே ஒளிக்கதிர்களாய் பல வடிவங்களில் மண்ணில் வீழ்ந்த நிலவொளி அந்தப் பிரதேசமெங்கும் ஒரு மனோரம்மியமான சூழ்நிலையை ஏற்படுத்தியது.

சித்தார்த்தன் கபில வஸ்துவில் இருந்து வாழ்வின் ரகசியங்களை அறிவதற்காகப் புறப்பட்டுவந்ததன் பின்னர்வரும் பன்னிரண்டாவது பௌர்ணமி இது.

இதே போன்றதொரு பௌர்ணமியில் தான் அவன் பிறப்பும் நிகழ்ந்தது. அவன் தனது அரண்மனை விட்டு வெளியேறியதும் இதுபோன்ற தொரு வைகாசிப் பூரணையில்தான். இந்தப் பன்னிரண்டு பௌர்ணமிகளில் வாழ்வின் இரகசியங்களை அறியமுயன்று அரசமரத்தடியில் உண்ணாவிரதம் இருந்து தனது உடலை வருத்திக் கொண்டதே மிச்சமாகியது. வாழ்க்கை

எனும் பாடத்தை அவனால் புரிந்து கொள்ளவும் முடியவில்லை. அந்த வலைப்பின்னலின் ஒரு முடிச்சைத்தானும் அவிழ்க்க முடியவில்லை. இதில் அதன் ரகசியத்தை எப்படி அவனால் உய்த்துணரமுடியும்? எல்லாம் வெறும் மாயையாகவே கண்ணுக்குத் தோன்றியது.

அரசமரத்தடியில் அமர்ந்தவாறே சித்தார்த்தன் தனது ஞாபகங்களை பின்னோக்கிச் செலுத்தத் தொடங்கினான். தனது பிறப்பு, வளர்ப்பு, காதல் வாழ்க்கை, திருமணம், அதன் பரிசாக கிடைத்த மகன் ராகுலன் எல்லாம் கண்களுக்கும், புலன்களுக்கும் இடையே காட்சிகளாய் விரியத் தொடங்கின.

அன்று வைகாசிப் பூரணை சாக்கிய குலத்தைச் சேர்ந்த கபில வஸ்துவின் மன்னன் சுத்தோதனர் – மாயாதேவி தம்பதிகளுக்கு லும்பினி நகரத்தின் அழகிய பூங்காவில் பிறந்தான் சித்தார்த்தன்.

சித்தார்த்தனின் மிக இளவயதிலேயே அவனது தாயார் மாயாதேவி காலமாக அவனது தாயின் தங்கை மகா பிரஜாபதி கௌதமி அம்மையாரே அவனை அன்னையைப்போன்று வளர்த்தார்.

தனது பதின்மவயதில் தனது உறவுக்கார பெண்ணான யசோதரைமேல் காதல் கொண்டு பதினாறாவது வயதில் அவளைக் கரம் பிடித்தான்.

அரச வாழ்வில் திளைத்து, வாழ்க்கை எனும் மதுக்கிண்ணத்தில் தினம் தினம் இன்பத்தேன் அருந்தி, அத்தனை சுகபோகங்களையும் மாய்ந்து, மாய்ந்து அனுபவித்தபடியே வாழ்க்கை சென்றது. யசோதரையுடனான வாழ்வுக்கான அர்த்தம் 'ராகுலன்' என்ற வடிவில் முழுமை பெற்றது. பதின்மூன்று வருடகால இல்லற வாழ்க்கை

அன்றும் ஒரு வைகாசி பௌர்ணமி தினம் மாலைநேரம். தனது தந்தையின் வேண்டுதலின் பேரில் "முடிசூடிக் சொள்வதற்கு முன் ஆயத்தமாக இளவரசன் தன் குடிமக்கள் தொடர்பாக அறிந்திருக்க வேண்டும்" என்ற கோட்பாட்டுக்கு அமைய, அரண்மனைய விட்டுக் குடிமக்கள் வாழும் பகுதியில் தனது ரதத்தில் பயணித்த போதே சித்தார்த்தனுக்கு உலக வாழ்க்கையின் சூட்சுமங்கள் புரியத்தொடங்கின.

முதலில் அவன் கண்டகாட்சியே அவனுக்கு மிக வியப்பாக இருந்தது. வயோதிபத்தின் உச்சியில், நாடிநரம்புகள், தளர்ந்துபோன நிலையில் கூன் விழுந்து ஒட்டிய வயிற்றுடன் தோலில் சுருக்கங்களுடன் கண்களில் குழிவிழுந்து ஒரு வயோதிபர் வீதியில் நின்று யாசகம் செய்து கொண்டிருந்தார்.

'மனிதர்களில் இது என்ன கோலம்? இளமையின் துடிப்பில் யௌவனத்தின் வாசலில், கம்பீரமாக நிற்கும் நான் எங்கே அழகிழந்து அசிங்கமாய் நிற்கும் இவன் எங்கே? இப்படியும் மனிதப்பிறவி இருக்க

முடியுமா?" அந்த வினாவிற்கு விடைகாணத் தன்னுடன் வந்த தனது சிறிய தாயாரிடமே அக்கேள்வியைக் கேட்டான்.

"சித்தா, இது முதுமையின் கோலம். ஒவ்வொரு மனிதர்களுக்கும் குழந்தைப் பருவம், வாலிபப் பருவம் என இருப்பதைப் போல் இது முதுமைப் பருவம். இப்பொழுது அந்த முதியவர் தனது முதுமைப் பருவத்தினை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்"

"அப்படியானால் உங்களுக்கும் முதுமை வருமா? எனது தந்தையும் முதுமை அடைவாரா தாயே?"

"சித்தார்த்தா உனது தந்தையும், நானும் ஏற்கனவே முதுமைப் பருவத்தில்தான் நிற்கிறோம். அரண்மனை வாழ்க்கை, அரசசுகபோகங்கள் எமது முதுமையை மறைத்துள்ளது. அவ்வளவே, நாங்கள் மட்டுமல்ல சித்தா, காலம் வருகையில் நீயும், உனது மனைவி யசோதராவும் முதுமை அடைவீர்கள். உலகில் வாழும் அனைவருக்கும் முதுமைப் பருவம் உண்டு. இது இயற்கையின் நியதி.?"

சித்தார்த்தனின் முகத்தில் குழப்பரேகைகள் பரவத் தொடங்கின. ரதம் பெரு வீதியைக்கடந்து சிறுவீதியால் செல்லும் வழியில் பெருநோயால் பாதிக்கப்பட்ட ஒருவன் மரத்தின்கீழ் அமர்ந்திருந்தான்.

அவன் தனது உடலைமூடி ஒரு கம்பளித்துணியைப் போர்த்தியிருந் தான். அவனது முகத்தில் ஆங்காங்கே சதைகள் கட்டி கட்டியாக வீங்கியிருந்தன. கால்களில் இருந்த புண்களில் இருந்து நீரும் சீழும் வழிந்து கொண்டிருந்தன. அதனை ருசிபார்ப்பதற்கென்றே இரண்டு மூன்று நாய்கள் அவனைச் சுற்றிச் சுற்றி அவனது கால்புண்களை நக்குவதும், அவன் தனக்கருகில் இருந்த மரக்கிளையினால் அவைகளை விரட்டுவதுமாக இருந்தான்.

அதனைக் கண்ணுற்ற சித்தார்த்தன் "தாயே என்ன இது? அந்த மனிதனின் உடல் ஏன் இப்படி இருக்கிறது. அவனை நாய்களும், காகங்களும் சுற்றிச்சுற்றி வருகின்றனவே? என்ன கொடுமையிது?"

"மகனே இதுவும் மனித வாழ்வில் ஓரம்சமே... நோய் வந்தவர்கள் தம்மைக்குணப்படுத்த வைத்தியரை நாடுவார்கள். இவனைப் போன்ற வறுமைப்பட்டவர்களுக்கு வைத்திய உதவி கிடைக்காமல் இருக்கலாம். வைத்திய உதவிகிடைத்தாலும் சில தீரா நோய்கள் குணமாவதில்லை. அது அவர் அவர் கர்மவினை."

சித்தார்த்தன் பார்த்த நோயுற்ற மனிதன் கண்ணில் இருந்து மறைய முன்னர் அவர்களது ரதம் திரும்பிய சாலையின் எதிரே ஒரு மரண

ஊர்வலம் வந்து கொண்டிருந்தது. இறந்த மனிதனின் உடலத்தைத் தூக் கிக் கொண்டு அவனது உறவினர்கள், அயலவர்கள், எனப்பலர் மயானம் நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். அந்த ஊர்வலம் செல்வதற்காக ரதத்தினை ஓரமாகத் தரித்தவேளை மீண்டும் சித்தார்த்தன் தனது அன்னையிடம் "என்ன ஊர்வலம் தாயே இது? ஒருவனைத் தூக்கிக் கொண்டு நால்வர், அவர்களுக்குப்பின்னே சிலர் அழுதபடி செல்கின்றனர்."

"சித்தா இது மரண ஊர்வலம்"

"மரணம் என்றால் என்ன தாயே...?"

"மரணம், ஒருவன் தனது வாழ்நாளை முடித்துக் கொள்ளும் தருணம். உயிர்ப்பறவை உடல் என்னும் கூட்டில் இருந்து விடுதலையாகி அண்ட வெளியில் கலக்கும் நிலை..."

"அப்படியானால் மரணம் எல்லோருக்குமானதா....?"

"இவ் உலகில் பிறந்தவர்கள் அனைவருக்கும் மரணம் உண்டு. அதனை எவராலும் மாற்றியமைக்க முடியாது. அவரவர் கர்மவிதிப்படி நாட்கள் எண்ணப்படும். தமது காலம் வந்ததும் அவர்கள் உயிர்பிரியும்'

"மரணத்தை வெற்றி கொள்ளவே முடியாதா அன்னையே?"

"இல்லை மகனே! இதுவே சாஸ்வதம். மரணத்தை வெல்ல யாராலும் முடியாது. பிறப்பும், இறப்பும் மாறாவிதிகள். இவ்வுலகில் பிறந்த அனைவரும் என்றோ ஒருநாள் இறக்கத்தான் வேண்டும். பழையன கழிதலும் புதியன விளைதலும் காலம் தோறும் நடந்து கொண்டே தான் இருக்கும்"

நகர்வலம் முடிந்து அரண்மனை திரும்பிய சித்தார்த்தனின் மனம் சஞ்சலமுற்றுக்கிடந்தது. முதுமையும், நோயும், மரணமும் மனித வாழ்வின் மறையாத பக்கங்கள் என்றால் இதனை வெற்றி கொள்ளவே முடியாதா? இந்த வாழ்வின் இரகசியந்தான் என்ன? இதனை அறிந்து இந்த வினாக் களுக்கு விடையை கண்டுபிடித்தால் முதுமையை தவிர்த்து நோயை இல்லாமலாக்கி மரணத்தை ஜெயித்துவிடலாம் அல்லவா?

சித்தார்த்தனின் மனதில் ஆயிரமாயிரமாய் கேள்விகள் விடை தெரியாது தவித்தன. நள்ளிரவு ஆழ்ந்த உறக்கத்தில் அவனது மார்பின் மீது தனது வளைக்கரத்தினை வைத்தவாறு உறங்கிக் கொண்டிருக்கும் யசோதராவைப் பார்க்கச் சித்தார்த்தனுக்கு மாலை நேர நிகழ்வுகள் ஞாபகத்திற்கு வந்தன. இந்தப்பேரழகும் ஒருநாள் முதுமையில் அழகு குன்றுமா? இவளுக்கும் நோய் வந்து கஷ்டப்படுவாளா? இவளுக்கும் மரணம் உண்டா?

மரணம் எனக்கு முதல் வருமா? அல்லது இவளுக்கு வருமா?

கேள்விகள் சித்தார்த்தனின் மனதை நெருடினாலும் மிகமுக்கியமான ஒரு அரசியல் விடயமும் அவனைச் சிந்திக்க வைத்தது.

"கபிலவஸ்துவின் மன்னனாக சித்தார்த்தன் முடிசூடிக்கொள்ள வேண்டும்." பல நாட்களாக தந்தையின் வேண்டுகோள் அவனுக்குள் ஓர் அரசியல் பார்வையை ஏற்படுத்தியிருந்தது.

குலமுறை ஆசாரங்களைக் கொண்ட ஜனநாயக அமைப்பாக இயங்கிவந்த பழங்குடி அரசான சாக்கிய வம்சம். அதன் இளவரசன் நான். பழங்குடி அரசுகள் பேரரசுகளால் அழிக்கப்பட்டு வரும் இந்நிலையில், கபில வஸ்துவும் பேரரசுகளினால் கபளீகரம் செய்யப் படலாம் என்ற நினைப்பு அவன் மனதுள் எழுந்து அவனைப் பயமுறுத்தியது.

அழிந்துபடப்போகும் ஒரு அரசு, முதுமையடைந்து நோய்வாய்ப்பட்டு இறந்துபோகும் இந்த உடல் இவற்றுக்காக இந்த அரண்மனையில் இருந்து விடை தேடுவதைவிட அரண்மனையை விட்டு வெளியே சென்று வாழ்வின் அர்த்தத்தை உணர அவனது மனசு தலைப்பட்டது.

அந்த நடுநிசிப் பொழுதில் ஒரு உருவம் அந்த அரண்மனையை விட்டு ரகசியமாக வெளியேறிக் கொண்டிருந்தது.

.............

பன்னிரண்டு மாதங்களுக்கு முந்திய காட்சிகள் மறைந்து போனாலும் இன்று காலையில் சித்தார்த்தன் கண்டகாட்சி அவனது மனதைத் தைத்தது.

இரண்டு கால்களும் ஊனமான தனது மனைவியைத் தோளில் சுமந்தபடி வீதியில் வந்த ஒரு குடிமகன் கடைத்தெருவின் ஓரத்தில் நின்ற மர நிழலில் அவளைப் பத்திரமாக அமரவைத்தான். அந்தக் கடைத் தெருவில் உள்ள கடைகளுக்கு வந்திறங்கும் பொதிகளைச் சுமந்து சென்று உள்ளே வைத்தவன் அதில் கிடைத்த வருமானத்தைக் கொண்டு இடைக்கிடை உணவுப்பண்டங்களை வாங்கிவந்து தனது மனைவிக்குக் கொடுத்து தானும் உண்டு இளைப்பாறிவிட்டு, மீண்டும் பொதிகளைச் சுமக்கச் செல்வான். அவனது அந்தச் செய்கை யாசகம் பெறவந்த சித்தார்த்தனைக் கவரச் சற்று நேரம் அவனது செய்கையைப் பார்த்துக் கொண்டேநின்றான்.

வழமையாக நடக்கும் காரியமாதலால் வீதியில் வந்தவர்கள், சென்றவர்கள் எவருமே இதனைப் பெரிதாகக் கண்டு கொள்ளவில்லை.

பன்னிரண்டு மாதங்களாக உணவு உட்கொள்வதை வெகுவாகத் தவிர்த்து, தனது உடலை வருத்திவந்த சித்தார்த்தன், உடலை வருத்து

வதனால் ஞானம் அடைந்து விடமுடியாது என்பதை உணர்ந்து கொண்டான். வாழ்வின் இரகசியங்களை அறிய தான் உயிர்வாழ வேண்டும் என்ற நினைப்பு அவனைப்பற்றிக் கொண்டது. அதன் பயனாகவே அவன் தனது அமர்விடத்தை விட்டு யாசகம் செய்வதற்காக அந்தக் கடை வீதிப்பக்கம் வந்திருந்தான்.

சித்தார்த்தன் தனக்குரிய உணவினை யாசித்துத் திரும்பவும், அக்குடியானவனும் தனது வேலையை முடித்துக் கொண்டு தனது ஊனமுற்ற மனைவியைச் சுமந்தபடி தனது இல்லம் நோக்கிச் செல்லவும் சரியாக இருந்தது.

சித்தார்த்தன் அக்குடியானவனைப் பின் தொடர்ந்து சென்றான். அவன் பல வீதிகளைக் கடந்து அந்த நகரத்தின் ஒதுக்குப்புறமான ஒரு பாதையில் தனியனாக அமைந்திருந்த ஒரு குடிசை வாசலில் வந்து நின்றான். களிமண்ணால் கட்டப்பட்டு மேலே ஓலையினால் வேயப்பட்டிருந்த ஒரு சிறிய வீடு. அந்த வீட்டுத் திண்ணையில் தனது மனைவியை அமரவைத்த அவன், அவள் வசதியாக அமர்ந்து கொள்வதற்குரிய வகையில் ஒழுங்குபடுத்திவிட்டுத் தானும் அருகில் அமர்ந்து மகிழ்வுடன் உரையாடத் தலைப்பட்டான். அவ்வேளையில் தான் தன் வீட்டு வாசலில் வந்துநிற்கும் சித்தார்த்தனைக் கண்டான்.

சித்தார்த்தனின் துறவுக் கோலம், அவனது கரங்களில் இருந்த பிச்சாப்பாத்திரம் அக்குடியானவனுக்கு சித்தார்த்தன் தொடர்பான ஒரு மனப்பதிவை ஏற்படுத்தியிருக்கவேண்டும்.

“வாருங்கள் சாமி....” என அவனை அன்புடன் வரவேற்றான். அவனது மனைவியும் தனது கரங்களைக் கூப்பி “வாருங்கள்” என வரவேற்றாள்.

அவர்களது அழைப்பை ஏற்று அந்த வீட்டுத் திண்ணையின் எதிரில் நாட்டப்பட்டிருந்த மரக்குற்றியில் வசதியாக அமர்ந்து கொண்டான் சித்தார்த்தன்.

“சாமி எங்கிருந்து வருகிறீர்கள்? இந்த ஏழையின் குடிசை நாடி வந்த விடயம் என்னவோ....?”

அவனது கேள்வி பல கேள்விகளை சித்தார்த்தனின் மனதில் ஏற்படுத்தியது. தனது மனதில் சுழலும் பல விடைதெரியாத வினாக்களுக்கு ஏன் இந்த குடியானவனிடமே பதிலைப் பெறமுடியாது? வாழ்க்கையை அதன் இன்பதுன்பங்களுடன் முழுமையாக அனுபவித்து வாழ்ந்து கொண்டிருப்பவன் இவனல்லவா? இவனைவிட எனது கேள்விகளுக்கு யார்தான் விடைகூற முடியும்? வாழ்வின் ரகசியங்களை வெறும் மரத்தடியில்

தேடுவதை விட, வாழ்வை அதன் வழியே வாழ்ந்து கொண்டிருக்கும் இவனிடமே கேட்டுத் தெளிவுபெறுவோமே என்ற நினைப்பில் பேச்சை ஆரம்பித்தான் சித்தார்த்தன்.

"வாழ்வின் ரகசியங்களை அறிந்து கொள்வதற்காக புறப்பட்டவன் நான். உன்னையும் உனது துணைவியையும் கண்டேன். உங்களுக்குப் பின்னே வந்தேன்..."

"வாழ்வின் ரகசியங்களை அறிவதற்கு நீங்கள் இவ்வளவு தூரம் எங்களுக்குப் பின்னே வந்திருக்க வேண்டிய அவசியமில்லையே சாமி. வாழ்ந்துபாருங்கள் அதன் ரகசியம் புரியும்..."

"நானும் வாழ்ந்து பார்த்தவன்தான். உனது வயதை ஒத்தவன்தான் நானும். இந்த மனித உடலின் மூப்பு, நோய், இறப்பு என்னை வதைக்கிறது. இவ்வளவுதான் வாழ்க்கையா? என்ற கேள்வி என்னுள் தொடர்ந்து எழுகிறது..."

"சாமி இவ்வளவுதான் வாழ்க்கையா? என்ற உங்கள் கேள்விக்கு உங்களிடமே பதில் உள்ளது. இவ்வளவுதான் வாழ்க்கையா? என்பதை இதுதான் வாழ்க்கை என உணரத் தலைப்படுங்கள். எல்லாம் சரியாகிவிடும். வாழ்வின் ரகசியம் புரிய ஆரம்பித்து விடும்."

அவனது பதில் சித்தார்த்தனைக் கவர்ந்தது. தொடர்ந்து அவனுடன் உரையாடினால் வாழ்வின் சூக்குமங்கள் புரிந்துவிடும் என்ற எண்ணம் அவனுள் மலர்ந்தது.

"நானும் குடும்பவாழ்வில் திளைத்தவன். அதன் ஒவ்வொரு கணங்களையும் அனுபவித்தவன். அதுவும் செல்வச் செழிப்பில், அதிகார போதையுடன் ஒவ்வொரு மணித்துளியும் சொர்க்கமாகவே கழிந்த நாட்களை வாழ்ந்தவன். என்று முதுமையையும், நோயையும், இறப்பையும் கண்ணால் கண்டேனோ, அன்றிலிருந்து என்னுள் ஒரு கலக்கம். அதுவே இந்த மாற்றம்..."

"இது தான் சாமி உங்கள் பிரச்சினை. நீங்கள் செல்வச்செழிப்பில் ஒவ்வொரு கணங்களையும் வாழ்ந்து பார்த்திருக்கிறீர்கள். என்னைப்போல் நாளாந்தம் நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைத்து வாழவில்லை. உழைப்பின் பலனால் கிடைக்கும் அந்த வருமானத்தில் மனைவிக்கும் எனக்குமான உணவினை வாங்கி உண்ணும்போது அவளது கண்களில் மின்னும் அந்த காந்தசக்தியை நீங்கள் உங்கள்துணையிடம் கண்டிருக்க மாட்டீர்கள். உழைப்பின் களைப்பினால் எனது உடலில் வடியும் வியர்வைத் துளிகளை தனது சேலைத் தலைப்பினால் அவள் ஒற்றி எடுக்கும் போது

ஏற்படும் அந்த அருகாமையையும் அந்த ஒற்றலில் இருக்கும் அன்பையும் பரிவையும் நீங்கள் அனுபவித்திருக்கமாட்டீர்கள்"

"உனது மனைவி உடல் முடியாமல் இருக்கும்போது இது எப்படி சாத்தியம் அப்பனே?"

"சாமி எனது மனைவியின் இன்றைய நிலைதான் இது. அவளும் எல்லோரையும் போன்று நடந்து திரிந்தவளே. எங்களது குழந்தையின் பிரிவு அதன் புத்திரசோகத்தால் ஏற்பட்ட விஷக்காய்ச்சல். அதன் காரணமாக அவளது கால்கள் செயலிழந்து விட்டன. அதனால் என்ன அவளுக்கு கால்களாய் நான் இருக்கிறேன்..."

"என்ன, உனது குழந்தை இறந்து விட்டதா?"

"ஆம் சாமி எனது மகன். இந்த உலகின்முழு அழகும் அவன்தான். அந்த பிஞ்சுக்கரங்களால் எனது முகத்தைப்பற்றும் போது ஏற்படும் அந்த நிமிட இன்பத்திற்கு இந்த உலகமே சமதையாகாது. கன்னங்களில் குழிவிழ அவன் சிரிக்கும் சிரிப்பு வாழ்நாள் முழுதும் பார்த்துக் கொண்டிருக்கவே நேரம் போதாது. பிறந்துபத்தே மாதங்களான குழந்தை அவன். திடீரென ஏற்பட்ட சுகயீனம் எங்களைவிட்டுச் சென்றுவிட்டான்."

"எங்களைச் சேர்ந்தவர்கள் இறந்து போவது எவ்வளவு கொடுமை யானது பார்த்தாயா? இதன் ரகசியங்களை அறியவே நான் குடும்ப வாழ்வை உதறிவிட்டு வெளியே வந்தேன்."

"இதில் என்ன ரகசியம் சாமி? மனிதனாய்ப்பிறந்த ஒவ்வொருமனிதனும் இறக்க வேண்டும் என்பது உலகநியதிதானே?

"அப்படியானால் இந்த வாழ்க்கையில் ஒன்றுமேயில்லையா....?'

"ஒன்றுமேயில்லை சாமி..."

"என்ன ஒன்றுமே இல்லையா...?"

"ஆம் சாமி ஒன்றுமேயில்லை. இந்த ஒன்றுமில்லையை நோக்கித்தான் எமது வாழ்க்கை. இந்தப் பூமிக்கு வருகின்றோம். வாழ்கிறோம், வாழ்க்கை முடிந்ததும் போகிறோம். அவ்வளவே..."

"உன்னைப்போல் என்னால் ஒன்றுமில்லை என்ற வாழ்க்கையில் 'ஒன்றுமே இல்லை' என வாழ்ந்திட முடியாது. அதுதான் அதன் ரகசியங்களை அறிவதற்காக ஞானத்தைத் தேடுகிறேன்.."

"சாமி, ஞானத்தைத் தேடும் உங்களுக்கு, ஒருவேளை ஞானம் கிடைக்கலாம். ஆனால் ஞானம் கிடைத்த உங்களுக்கு முதுமை வராதா?

"வரும்"

"உங்களுக்கு நோய்வராதா?"

"வரும்"

"உங்களுக்கு இறப்பு வராதா?

"வரும்"

"வாழ்வின் ரகசியங்களை அறிந்து ஞானம் பெற்ற உங்களுக்கும் முதுமை வரும், நோய்வரும், இறப்புவரும் என்றால் இந்த ஞானத்தில் என்ன உண்டு?

"ஒன்றுமே இல்லை.."

"அப்படியானால் ஒன்றுமே இல்லை என்பதைத் தேடி இன்றைய வாழ்வை இழக்கவேண்டுமா சாமி?

கட்டிய மனைவியையும் பிள்ளையையும் பிரிந்து ஒன்றுமே இல்லாத ஞானத்தைத் தேடி அலைவது என்ன கொடுமை?"

அவனது கேள்வி சித்தார்த்தனின் உச்சந்தலையில் அடிப்பது போல் இருந்தது. ஒன்றுமில்லையை நோக்கித்தானா இந்தப் பயணம்?

வாழ்வின் ரகசியம் என்பது வாழ்ந்து பார்த்தல்தானா? முதுமை அடைந்து, நோய்வந்து, இறந்து போகும் மனித வாழ்க்கையின் நிகழ்வுகள் தானே எனக்கும். அப்படியானால் இவ்வளவு காலமும் உடலை வருத்தி இந்த மரத்திற் கடியில் அமர்ந்திருந்ததில் ஒன்றுமேயில்லையா?

சித்தார்த்தனின் மன உணர்வுகளைப் புரிந்து கொண்டவன் போல் குடியானவன் பேசத் தொடங்கினான். "சாமி உங்களுக்குக் கூறுவதற்கு நான் தகுதியற்றவன். ஆனாலும் நீங்கள் வாழ்வை மறுதலித்துக் குடும்பத்தைப் பிரிந்து வந்துள்ளீர்கள். இந்த உலகில் எதுவே நிரந்தரமில்லை. ஆனால் நாம் வாழும் இவ் வாழ்வின் அடையாளம் குடும்பம்.

கணவன் மனைவி என்ற உறவுக்கு மேலான உறவு உலகில் எதுவும் இல்லை. சிக்கல் நிறைந்ததே வாழ்க்கை.

அதுவும் குடும்பபாரம் என்பது சுமைதான். ஆனாலும் அதுசுகமான சுமை. அந்த சுகத்தை அறிந்தவன் அதில் முழுமையாகத் திளைத்தவன் துறவை நாடவே மாட்டான். வெறும் பஞ்சு மெத்தையில் மட்டுமல்ல. இந்த திண்ணையிலும் வாழ்வை ரசிக்கலாம்.


நான் நோயை, அதன் தீவிரத்தை அறிந்தவன். மரணத்தை எனது மகனின் பிரிவில் நேரில் அனுபவித்தவன். முதுமை இன்னும் சில காலத்தில் எனக்கும் மனைவிக்கும் ஏற்படும். ஆனாலும் இந்த ஒவ்வொரு கணத்தையும் வாழ்ந்தே கழிக்கிறேன். அதன் இன்பத்தோடும், துன்பத்தோடும் இரண்டையும் அனுபவித்தே கடக்கின்றேன். எனக்கு இங்குதான் ஞானம் இதுதான் நான் கண்டுகொண்ட ஞானம்.

ஒவ்வொரு கணவனுக்கும் மனைவிதான் போதிமரம். ஒவ்வொரு

மனைவிக்கும் கணவன்தான் போதிமரம். இருவரது வாழ்க்கைதான் அவர்கள் கண்டு திளைக்கும் ஞானம். இதைத்தேடித்தான் நீங்கள் இங்கு வந்தீர்கள். ஆனால் நீங்கள் உங்கள் குடும்பத்தில், குடும்ப வாழ்க்கையில் அடைய முடியாத ஞானத்தை வேறு எங்குமே அடைய முடியாது." குடியானவன் பேசிக் கொண்டேயிருந்தான்.

சித்தார்த்தனின் கால்கள் கபிலவஸ்துவில் உள்ள தனது அரண் மனையை நோக்கிப் பயணிக்கத் தொடங்கியது. வானில் வைகாசி பூரணை நிலவு தண்ணொளியைப் பாய்ச்சுக் கொண்டிருந்தது.

**- 2018**




# எல்லாம் நிறைவேறிற்று

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை நீ இழந்தாய்?
எதற்காக நீ அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்? அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக்கொண்டாயோ அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதி – (பகவத் கீதை)

பாஸ்கா எனும் புளிப்பற்ற அப்பவிழா நிகழ இன்னமும் இரண்டு நாட்களே இருந்தன. தலைமைக் குருக்களும் மறைநூல் அறிஞர்களும் இயேசுவை எவ்வாறு சூழ்ச்சியாகப்பிடித்துக் கொலை செய்யலாம் என வழி தேடிக்கொண்டிருந்தார்கள். அதிக வலுவுள்ள நச்சுக்கலந்த மயக்கப் புகையைச் செலுத்தி அவரை மயக்கமுறச் செய்து பிடித்துவிடலாம் என்பது படைவீரர் சிலரின் கருத்தாக இருந்தது. ஆயினும் விழாவின் போது வேண்டாம் ஒருவேளை மக்களிடையே கலகம் ஏற்பட்டு 'ஏரோது'அரசனின் ஆட்சிக்கு களங்கம் ஏற்பட்டுவிடக்கூடும் என்ற பயமும் அவர்களிடையே இருந்தது.

இம்முறை பாஸ்கா விழா மிகச்சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடகியிருந்தது. நீண்ட திட்டமிடலுடன் பலநாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் மிகப் பெரும் அரச விழாவாக அதனை மாற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வெகுவிமர்சையாக அதன் ஆரம்ப விழாக்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. இம்முறை நடைபெறும் பாஸ்கா திருவிருந்தில் பலிப்பொருள் உண்பதற்காக சர்வதேசங்களையும் சேர்ந்த மிகமுக்கிய நாடுகள் தமக்கான அழைப்புக் கடிதங்களுடனும், இயேசுவைப் பிடிப்பதற்கு உதவியாக ஏரோது அரசனின் இராணுவத்துக்கு உதவுவதற்கான படைக்கல உதவிகளுடனும் உள்ளே வருவதற்குத் தயார்நிலையில் காத்து நின்றன. அண்டை நாடுகள் சில ஏற்கனவே விழாவின் பங்காளிகளாகி இயேசுவைப் பிடிப்பதற்கான புலனாய்வுத் தகவல்களை வழங்குவதில் தலைமைக் குருக்களுக்கும், மறைநூல் அறிஞர்களுக்கும் அவர் தம் படைவீரர்களுக்கும் உதவிகள் புரிந்து கொண்டிருந்தன.

இன்றைய பாஸ்கா விழாவின் போதாவது இயேசுக் கிறிஸ்துவைக் கையும்மெய்யுமாக பிடித்து விடவேண்டும் அல்லது அவரைக் கொலை செய்து அவரது கொள்கைகளை ஏற்றுக்கொண்டு அவர் பின்னால் திரியும் ஒரு கூட்டத்தினரையும் அதன் மூலம் நிர்மூலமாக்கிவிட வேண்டும் என்ற தீவிர வெறி ஆட்சியாளர்கள் மத்தியில் மிக இறுக்கமாக வேரூன்றியிருந்தது.

முப்பத்துமூன்று வருடகால இயேசுவின் வாழ்க்கையில் பன்னிரெண்டு வயதிற்குப் பின்னர் அவர் யூதேயாவை விட்டு உலக சஞ்சாரங்களில் ஈடுபட்டுத் தனது ஆளுமையையும், ஆற்றலையும் வளர்த்துக்கொண்டு, தேசாதி தேசமெங்கும் சென்று கல்விப்புலமை, கொண்டு தனது போர்க் குணாம்ச ஆளுமையையும் மிகத்தீவிரமாக வளர்த்துக்கொண்டு மீண்டும் முப்பது வயதில் தனது சொந்த மண்ணிற்கு வந்ததில் இருந்து கடந்த மூன்று வருட காலங்களில் செய்த அற்புதங்களும் புதுமைகளும் பற்பல.

தேர்ந்தெடுக்கப்பட்ட இனமாகிய இஸ்ரவேல் சமூகம் பட்ட துயரங்களும் வேதனைகளும் தொடர்ந்த வண்ணமிருக்க அவர்களுக்காகவும் அவர்களின் அறியாமைக்காகவும் அவர் போராட வேண்டியிருந்தது. அவரது போராட்ட ஆளுமையை உலகமே வியந்து பார்த்தது. அவரது பல புதுமைகள் உலக மெங்கும் பேசப்பட்டன. ஆனால் சில யூதர்களினாலேயே அவர் வெறுக்கப்பட்டார்.

இறந்தவன் உயிர்த்ததும், பார்வையற்றவன் பார்வை பெற்றதும், முடவன் எழுந்து நடந்ததும், தொழுநோய்க்காரன் நோய் நீங்கப் பெற்றதும், இறந்து மூன்று நாட்களுக்குப் பின்னர் கல்லறை திறந்து லாசரஸ் எழுந்து வந்ததும் என பலநாடுகள் அவரது செயலை வியப்புடன் பார்த்தன.

உள்ளூரில் அவருக்கான ஆதரவு வளர்ந்து கொண்டிருந்தது. தொடர்ந்து புதுமைகள் செய்து மக்களை மயக்கும் இயேசு உயிருடன் இருந்தால் மக்கள் தம்மை மறந்து விடுவார்கள் என்ற பயமும் "நானே உலகின் ஒளி நானே உயிர் தரும் உணவு என்னை உண்பவன் இறப்பினும் வாழ்வான்" எனவும், தம்மால் மட்டுமே மக்களுக்கு விடுதலையைப் பெற்று தரமுடியும் என்ற கூற்றும் ஆன்மீக விடுதலையே முழு மொத்த உரிமைக்குமான வழி எனக்கூறும் இயேசுவின் "விண்ணக வாழ்வு" என்ற புதியதொரு தேசத்திற்கான கருத்தாடல்களில் மோகம் கொண்டு மக்கள் தம்மை மறந்து விடுவார்கள் என்ற பயம் ஆட்சியாளர்களையும் அவர்களது அடிவருடிகளையும் விழிப்புறச் செய்தது.

அவர்களது கஜானாக்களில் செல்வம் குறையக் குறைய அவர்களது ஆத்திரம் முழுவதும் இயேசுவின் பக்கம் திரும்பியது. ஒரு விடுதலை வீரனாக, சமதர்மவாதியாக இயேசுவை மக்கள் கொண்டாடுவதைத் தொடர்ந்து அவரது போதனைகள் பலரைக் "கிலி" கொள்ளச்செய்தது. எப்படியாவது அவரை மடக்கிப்பிடித்துக் கொலை செய்து விடவேண்டும் என்று அவர்கள் தீட்டிய பல திட்டங்கள் கடைசி நேரத்தில் கைநழுவி போனதும் உண்டு.

இயேசுவைக் காட்டிக் கொடுப்பதற்காக அவரது போதனைகளைக் கேட்டு அதன்படி நடக்க முனைந்த பலரை பல நேரங்களில் விலை பேசி அவருக்கெதிராக கலகங்கள் செய்து அவரை ஒழித்துக்கட்ட முயன்ற போதெல்லாம் அவர் மாயமாகிப் போனது அவர்களுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்தது.

நீண்டகால மந்திராலோசனையின்பின் ஒரு புதிய போர் வியூகத்தைத் தயாரித்துக் காத்திருந்த வேளை பாஸ்கா திருவிழா வந்தது மிகவும் வாய்ப்பாகியது. அதனை விட அவர்களுக்கு ஒரு இனிப்பான செய்தியாக

அமைந்து இயேசுவின் சீடர்களில் ஒருவனே முன்வந்து அவரைக்காட்டிக் கொடுப்பதற்கு விலை பேசமுயன்றது. பழம் நழுவிப் பாலில் விழுந்த கதையாக மதத் தலைவர்களும், மறைநூல் வல்லுனர்களும் அந்தச் சந்தர்ப்பத்தை மிகக் கெட்டியாகப்பிடித்துக் கொண்டனர்.

பன்னிருவருள் ஒருவனாகிய யூதாஸ் காரியோத் இயேசுவைக் காட்டிக் கொடுக்கும் நோக்கத்தோடு தலைமைக் குருக்களிடம் சென்றான். அவர்கள் அவனை வரவேற்று இயேசுவைக் காட்டிக் கொடுத்தால் வெளிநாடுகளில் சுகபோக வாழ்க்கை அனுபவிப்பதிற்கும், அவன் விரும்பும் பட்சத்தில் தமது ஆட்சியதிகாரத்திற்கு உட்பட்ட பகுதிகளுக்கு அவனையும் ஒரு ஆட்சிமைப் பிரதிநிதியாக்குவதாகவும், அதற்கு அச்சாரமாக முப்பது வெள்ளிக்காசுகளை முற்பணமாகவும் வழங்க ஒத்துக்கொண்டனர்.

அவனும் அவரை எப்படி? எங்கே? எப்போது காட்டிக் கொடுக்கலாம் என வாய்ப்புத் தேடிக்கொண்டிருந்தான். புளிப்பற்ற அப்பவிழாவின் முதல் நாள் பாஸ்கா ஆட்டுக்குட்டியைப் பலியிட்டு பாஸ்கா விருந்து ஏற்பாடாகியிருந்தது.

மாலை மங்கிய கருக்கிருட்டு நேரம். மங்கிய மெழுகின் ஒளியில் இயேசு பன்னிரு சீடர்களோடுவந்து பந்தியில் அமர்ந்தார். தமக்கான இடங்களைத் தேடிப் பந்தியில் அமரமுற்பட்ட சீடர்களைப்பார்த்து இயேசு

“என்னோடு உண்ணும் உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகின்றேன்” என்றார். அவர் சொன்னதைக் கேட்ட சீடர்கள் மிகவும் மனம்வருந்தி ஒருவர் பின்னொருவராக “நானோ? நானோ?” என்று அவரிடம் கேட்கத்தொடங்கினர். அதற்கு இயேசு “உங்களில் ஒருவனே என்னைக் காட்டிக் கொடுக்கப்போகிறான் அவன் என்னுடன் பாத்திரத்தில் தொட்டு உண்பவனே! நான் அவனை நம்பினேன் ஆனால் அவனோ? ஐயோ! என்னைக் காட்டிக்கொடுப்பவனுக்குக் கேடு. அம் மனிதன் பிறவாதிருந்தால் அவனுக்கு நலமாயிருந்திருக்கும். மானிடமகன் தம்மைப்பற்றி மறைநூலில் எழுதி உள்ளவாறே போகப்போகிறார்” என்ற பின்பு அவர் அப்பத்தை எடுத்து அதனைப்பிட்டு அவர்களுக்குக் கொடுத்து “இதனை வாங்கி உண்ணுங்கள் இது எனது உடல் கபால வெளியில் கபாலம் திறக்கப்பட்டு உலகமெங்கும் காட்சிப் பொருளாய் காட்டப்படப் போகும் எனது உடல்” எனக் கூறிய பின் திராட்சை இரச கிண்ணத்தை எடுத்து கடவுளுக்கு நன்றிகூறிய பின் அவர்களை நோக்கி “இது எனது உடன்படிக்கையின் இரத்தம். பலருக்காகச் சிந்தப்படும் இரத்தம். நான் விரும்பாத வேளையிலும் உங்களுக்காக பல உடன்படிக்கைக்கு உடன்பட்டேன். இறையாட்சி வரும். நான் கண்ட கனவுகள் பலிக்கும்.

புதிய ஆட்சியில் நீங்கள் எல்லோரும் மகிழ்வுடன் இருப்பீரகள். அப்போதுதான் நான் திராட்சைப் பழரசத்தைக் குடிப்பேன். அதுவரை ஒரு போதும் குடிக்க மாட்டேன என உறுதியாகச் சொல்லுகிறேன்" என்றார்.

சீடர் அனைவரும் புகழ்பாடல் பாடிவிட்டு ஒலிவ் மலைக்குச் செல்லத் தயாரானார்கள். அப்போது இயேசு அவர்களைப் பார்த்து "நீங்கள் அனைவரும் ஓடிப்போவீர்கள் ஏனெனில் ஆயரை வெட்டுவேன், அப்போது ஆடுகள் சிதறடிக்கப் படும் என்று மறைநூலில் எழுதியிருந்தது. ஆனால் நான் உயிருடன் எழுப்பப்பட்ட பின்பு உங்களுக்கு முன்னமே கலிலேயாவுக்கு போவேன் என்றார்"

அதனைக் கேட்ட பேதுரு இயேசுவிடம் "எல்லோரும் ஓடிப்போய் விட்டாலும் நான் அவ்வாறு செய்யமாட்டேன்" எனக் கூறியதைக் கேட்டு இயேசு சிரித்தபடியே "இன்றிரவு சேவல் இரு முறை கூவும் முன் மும்முறை நீ என்னை மறுதலிப்பாய் என உனக்குச் சொல்லுகிறேன்" என்றார். அதற்குப் பேதுரு "நான் உம்மோடு சேர்ந்து இறக்க வேண்டியிருந்தாலும் உம்மை ஒருபோதும் மறுதலிக்க மாட்டேன்" என மிக அழுத்தமாகச் சொன்னார். அதனைக்கேட்ட இயேசு ஒரு புன்னகையை உதிர்த்தவாறே "என்னைக் காட்டிக் கொடுப்பவன் ஒருவனே" ஆனால் மீதமுள்ள பதினொரு பேரும் என்னை மறுதலிப்பீர்கள். அவன் எனது உடலைக் காட்டிக் கொடுப்பான். ஆனால் நீங்களோ என்னையும் எனது கொள்கைகளையும் சேர்த்தே மறுதலிப்பீர்கள். எனது மறைவுக்குப் பின்னே உங்களைக் காப்பாற்றிக் கொள்ள நீங்கள் செய்யப்போகும் இந்த மறுதலிப்பானது காட்டிக் கொடுப்பதை விடக் கேவலமானது. காட்டிக்கொடுப்பதற்கும் ஒரு துணிவு வேண்டும். சர்வ வல்லமையுடன் இருக்கும் போது காட்டிக் கொடுப்பது நேரடியாக மோதுவதைப் போன்றதே. ஆனால் நான் இறந்த பின் என்னை மறுதலிப்பதானது மிகவும் மோசமானது. இத்தனை வருடங்கள் நீங்கள் என்னோடு உண்டு குடித்து எனது புதுமைகளையும், அற்புதங்களையும் கண்டு வியந்து துதிப்பாடல் பாடி எனது போதனைகளைக் கேட்டிருந்தீர்கள். நாளை எனக்கெதிராகவும், எனது போதனைகளுக்கெதிராகவும் நீங்களே பேசுவீர்கள் - எழுதுவீர்கள்" எனக்கூறிய பின் இயேசு சீடர்களையும் அழைத்துக் கொண்டு "கெத்சமனி "என்னும் பெயர் கொண்ட ஓர் இடத்திற்கு வந்தார்.

அங்கு அவர் சீடர்களிடம் "நான் இறைவனுடன் பேச வேண்டும் நான் வரும் வரை நீங்கள் இங்கேயே அமர்ந்திருந்து ஜெபியுங்கள்." எனக் கூறியபடியே பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகியோரை தம்முடன் கூட்டிச் சென்றார். அப்போது அவர் திகிலும் மனக்கலக்கமும் அடையத் தொடங்கினார்.

சாதாரண மனிதனுக்கு வரும் மரணபயம் அவரை ஆட் கொண்டது. "எனது உள்ளம் சாவு வருமளவுக்கு ஆழ்துயரம் கொண்டுள்ளது. நீங்கள் இங்கேயே தங்கிவிழித்திருங்கள்" எனக் கூறியபடியே சற்று அப்பால் தனிமையில் சென்று தரையில் விழுந்து வணங்கிய இயேசு வானத்தைப் பார்த்து, "அப்பா தந்தையே எல்லாம் உம்மால் இயலும். இத்துன்பக் கிண்ணத்தை என்னிட மிருந்து அகற்றும் ஆனாலும் என் விருப்பப்படி அல்ல உம் விருப்பப்படியே எல்லாம் நிகழட்டும்" என வியாகுலப் பட்டு அழுதபடியே வேண்டிக் கொண்டார்.

தனது வேண்டுதலை முடித்துவிட்டு எழுந்து வந்து கற்பாறை களுக்கு மேலே அவர்கள் உறங்குவதைக் கண்டு, "சீமோனே உறங்கிக் கொண்டா இருக்கிறாய்? என்னுடன் ஒரு மணிநேரம் விழித்திருக்க உனக்கு தெம்பில்லையா? என் கொள்கைகளை போதிப்பதற்காக, தேசமெங்கும் சென்றுவர உன்னையல்லவா நியமித்திருந்தேன். என் போதனைகளின் சர்வதேச பொறுப்பாளன் நீயல்லவா? நீயே தூங்கினால் போதனைகள் என்னாவது. எனவே விழித்திரு – செபித்திரு" எனக் கூறிவிட்டு மீண்டும் தனதிடம் சென்று செபிக்கத் தொடங்கினார். அவர் மீண்டும் வந்து பார்த்த வேளை அவர்கள் அனைவரும் உறங்கியிருப்பதைக் கண்டார்.

மூன்றாம் முறை வந்த போது அவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பதைக் கண்டு "இன்னுமா உறங்கிக் கொண்டிருக்கிறீர்கள்? நேரம் வந்து விட்டது மானிடமகன் பாவிகளின் கையில் ஒப்புவிக்கப்படப்போகிறார். எழுந்திருங்கள் போவோம். இதோ என்னைக் காட்டிக் கொடுப்பவன் நெருங்கி வந்து விட்டான்" என இயேசு பேசிக்கொண்டிருக்கும் போதே பன்னிரு சீடர்களில் ஒருவனான யூதாஸ் காரியோத் வந்தான். தலைமைக் குருக்களும், மறைநூல் அறிஞர்களும், மூப்பர்களும், படைவீரர்களும் வாள்களோடும், தடிகளோடும் வந்திருந்தனர். போர்க்களத்தின் சகல ஆயுதங்களும் அவர்கள் கரங்களில் இருந்தன.

யூதாஸ் அவர்களிடம் நான் ஒருவரைக் கட்டிப்பிடித்து முத்தமிடுவேன் அவர்தான் இயேசு. அவரைப் பிடித்துக் கொண்டு போங்கள் என்று முன்னறி வித்ததைப் போன்றே இயேசுவை அணுகி "ராபீ" என அழைத்தபடியே அவரை முத்தமிட்டான்.

"யூதாஸ் முத்தமிட்டோ மனுமகனைக் காட்டிக் கொடுக்கிறாய்" என யேசு கேட்கவும் அவர்கள் பாய்ந்து வந்து இயேசுவைக் கைதுசெய்தனர். அதனைக் கண்ட சீடர்கள் அவரை விட்டுத் தப்பி ஓடத்தொடங்கினர்.

படைவீரர்கள் இயேசுவைத் தலைமைக் குருவிடம் கூட்டிச்சென்றனர். தலைமைக்குருக்களும், மூப்பர்களும், மறைநூல் அறிஞர்களும் ஒன்று

கூடினர். இயேசுவின் மிக நெருக்கமான சீடரான பேதுரு மறைவாக அவரைப் பின் தொடர்ந்தார். தலைமைக்குருவின் வீட்டு முற்றம் வரை வந்து நெருப்பு மூட்டி குளிர் காய்ந்து கொண்டிருக்கும் காவலரோடு இணைந்தபடி பேதுரு அமர்ந்திருந்தார். தலைமைக்குருக்களும், மறைநூல் அறிஞர்களும் இயேசுவுக்கு மரணதண்டனை கொடுக்க அவருக்கு எதிராகக் குற்றங்களைச் சுமத்தச் சான்றாதாரங்களைத் தேடிக்கொண்டிருந்தனர். அண்டைநாட்டு தலைமைக் குரு தமது நாட்டின் அரசகுமாரனின் கொலைக்கு இயேசுவின் போதனைகள் காரணமாக அமைந்தது என்றார். உள்நாட்டில் பல கொலைகளுக்கும், படைவீரர்களுக்கு எதிராகவும் இராஜதுரோகம் இழைத்து விட்ட செயலுக்காகவும் அவருக்கு மரண தண்டனை வழங்கலாம் என அவர்கள் கூடி முடிவெடுத்தனர்.

அந்நேரம் குருவின் பணிப்பெண் ஒருவர் வந்து பேதுரு குளிர் காய்வதைக் கண்டு அவரை நோக்கி “நீயும் அந்த நாசரேத்து இயேசுவோடு இருந்தவன் தானே” என்றார். அதற்கு பேதுரு “நீர் சொல்வது என்னவென்று எனக்குத் தெரியவில்லை, புரியவுமில்லை” என மறுதலித்து விட்டு மெல்ல வெளிமுற்றத்திற்குச் சென்றார். அந்நேரம் தலைமைக்குருவின் மாளிகை முன்றலில் இயேசுவைப் பரிகசித்து அவரைச் சித்திரவதைப்படுத்திக் கொண்டிருந்தனர். அந்நேரம் சேவல் கூவிற்று. வெளிமுற்றத்திற்கு வந்த பணிப்பெண் அங்கு பேதுரு நிற்பதைக் கண்டு அவரைக் காட்டி சூழஇருந்தவர்களிடம் “இவனும் அவர்களைச் சேர்ந்தவன்தான்” என்று மீண்டும் கூறத் தொடங்கினாள். அதற்கு பேதுரு மீண்டும் மறுப்புத் தெரிவித்தார். சற்று நேரத்திற்குப் பின் சூழவிருந்தவர் பேதுருவை உற்றுப்பார்த்து விட்டு “உண்மையிலே நீ அவர்களைச் சேர்ந்தவன்தான் ஏனெனில் நீ கலிலேயன்” என மீண்டும் பேதுறுவைப்பார்த்துக் கூறினர். அவரோ “நீங்கள் குறிப்பிடுகின்ற மனிதரை எனக்குத் தெரியவே தெரியாது எனக்கூறிய படி இயேசுவைத் தூற்றியும், ஏசியும், வசைபாடியும் தனக்குத் தெரியாதென சத்தியம் செய்யத்தொடங்கினார்”.

அப்போது இரண்டாம் முறை சேவல் கூவிற்று. மூப்பர்களில் ஒருவன் தன் கன்னத்தில் அறைந்த வலியையும் பொருட்படுத்தாது இயேசு பேதுருவைத் திரும்பிப் பார்த்தார். அதனைக் கண்ட பேதுரு “சேவல் இரு முறை கூவுமுன் நீ என்னை மும்முறை மறுதலிப்பாய்” என்று இயேசு தமக்குக் கூறிய சொற்களை நினைவு கூர்ந்து மனம் உடைந்து பச்சாதாபப்பட்டு அழுதார்.

அன்றைய பொழுது மிகத் தாமதமாகவே விடிந்தது. அதன் முகமெங்கும் ஒருவித சோகமும் விரக்தியும் குடி கொண்டிருந்தது. அந்த

வேதனையினைப் பிரதிபலிப்பதைப் போல் வானம் மப்பும் மந்தாரமுமாகக் காட்சியளித்தது. இரவிரவாக இயேசுவை அழைத்துத் துன்புறுத்திய மூப்பர்களும், மறைநூல் அறிஞர்களும், படை வீரர்களும் இயேசுவை தமது ஆளுநரான பிலாத்துவிடம் அழைத்துச் சென்று இயேசுவுக்கு மரண தண்டனை வழங்கும் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டு அவர் மேல் பாரமான மரச்சிலுவையை சுமத்தி அதனைச் சுமந்து வரச்செய்து அவரை மிக இழிவாக நடாத்தி "கொல்கொத்தா" எனும் பெயர் கொண்ட கபால மலை நோக்கி அழைத்துச் சென்றனர். வழி நெடுகப் படைவீரர் இயேசுவைச் சவுக்கால் அடித்துச் சென்றனர். வழியெங்கும் யூதப்பெண்களும் ஆண்களும் கூடிநின்று அவரது சிலுவைப்பயணத்தை வேடிக்கை பார்த்தனர். சிலர் அவருக்காக அழவும் சிலர் அவரைப் பரிகாசம் செய்து கேலி பேசவும் முயன்றனர். தன்னைப் பரிகாசம் செய்து கேலிபேசும் சிலரை இயேசு மன்னித்தார். அந்த வேதனையிலும் அவர் புன்னகை சிந்தினார். தான் இரண்டு மீன்களையும் ஐந்து அப்பங்களையும் பல்கிப் பெருகச் செய்து பன்னிரண்டாயிரம் பேருக்கு பகிர்ந்தளித்த வேளை தன்னுடன் உணவு உண்டவர்களும், கானாவூர்த் திருமணத்தின் போது தண்ணீரைத் திராட்சை ரசமாக மாற்றிய வேளை வயிறு முட்டக் குடித்துக்களி கொண்டு தன்னைப் பாராட்டிய பலரும் அதில் இருப்பது அவருக்குத் தெரிந்தது.

ஒரு மனிதன் பலத்தோடு நிற்கும் போது அவனோடு நின்று அவனைப் புகழ்வதும் அவன் பலம் குன்றும் போது அவனைக் கேலி செய்து அவனை விட்டு ஒதுங்கிக் கொள்வதும் மனித இயல்பு என்பது தெய்வமகள் அவருக்கு புரிந்தே இருந்ததால் அவர் அதனையிட்டு கவலைப் படவில்லை.

கபாலமலையின் உச்சியில் இயேசுவை ஆணி கொண்டு சிலுவையில் அறைந்து நிர்வாணக் கோலத்தில் அவரை தூக்கி நிறுத்தினர். சிலுவையில் தொங்கியபடியே இயேசு சிலவார்த்தைகளை உதித்தார். வானத்தை அன்னார்ந்து பார்த்து

"எலோயி, எலோயி, லெமா சபக்தானி?" என உரக்கக் கத்தினார். அதற்கு "என் இறைவா என் இறைவா ஏன் என்னை கைவிட்டீர்" என்பதன் அர்த்தப்பாடாக இருந்தது. இறுதியாக அவரது விலா எலும்புகள் புடைத்து மார்புகள் மேலெழுந்தது. சர்வாங்கமும் அதிர "எல்லாம் நிறைவேறிற்று" என்று உரக்கக் கத்தியபடி தன் தலையைச் சாய்த்தார்.

ஆதாரம்: (மாற்கு நற்செய்தி - 14: 1- 15 : 47
யோவான் நற்செய்தி 18:1- 19:42)

**- 2012**

# பார்வைகள் - பதிவுகள்

## t uk (2002)

ஈழத்தின் இளந்தலைமுறையைச் சேர்ந்த படைப்பாளி வி. மைக்கல்கொலினின் பரிசு பெற்ற சிறுகதையிது. புதுமைப்பித்தன் போன்றோர் இதிகாசக்கருக்களை சிறுகதைகளாக்கும் முயற்சியில் ஈடுபட்டது போல அதனுடைய நீட்சியாக அகலிகைக் கரு சிறுகதையாக்கப் பட்டிருக்கிறது. கதையின் மையத்தன்மை சமூக ஊடாட்டமாக இழையோடு கிது. கதை நன்றாக நகர்த்தப்பட்டு சிறப்பான முடிவுடன் சிறப்பாக நிறைவுறுகிறது. கதை சொல்லும் முறையும் சிறப்பானது. வரம் வித்தியாசமான கதை கூறும் பன்பைக் கொண்ட நவீன சிறுகதை எனலாம்.

**திரு. ச.மணிசேகரன்,**

தேனகச் சிறுகதைகள் பார்வையும் பதிவும் கட்டுரையில் – தேனகம் இதழ் 12 – 2004

**வாசித்ததில் என்னை ஆகர்ஷித்தது**

வழமையான வாசிப்புக்கென மட்டக்களப்பு பொது நூலகம் சென்ற வேளை தினசரிகள் கிடைக்காத நேரம் கையில் கிடைத்தது 2018.03.09ம் திகதிய ‘தமிழர் தளம்’ பத்திரிகை. கையில் எடுத்து வாசித்துக் கொண்டிருந்த போது “ராவணாபுரி” என்ற தலையங்கமும் எழுதியவர் “மைக்கல் கொலின்” என்ற பெயரும் கண்ணில்பட இனம் புரியாத உணர்வும் எனக்கு ஏற்பட அவசர கதியில் வாசித்து முடித்து அன்றாட பத்திரிகைகளையும் வாசித்துவிட்டு வீடுவந்தேன் ஆனால் ‘ராவணாபுரி’ என் மனதில் ஏதோ ஒரு விசையை ஏற்படுத்தியது. அன்று மாலை நூலகம் சென்று மீண்டும் ஒருதரம் ஆழமாக வாசித்தேன். அன்று நள்ளிரவு 12 மணிக்கும் மேலாக என்னை “ராவணாபுரி” தூங்க விடவில்லை. அடுத்தநாள் காலை மீண்டும் நூலகம் சென்று வாசித்தேன்.

எனக்குள் பல அதிர்வுகளை உணர்வுகளை ஏற்படுத்தியது மட்டுமல்ல இது தொடர்பாக ஒரு பதிவினை பதிய வேண்டும் என்ற எண்ணத்தை என்னுள் ஏற்படுத்தியது. சிலவேளை ‘ராவண தேசம்’ எனது பிறந்த மண் என்பதாலா அல்லது ராவணண் பற்றிய இது

வரையிலான நான் எண்ணிக் கொண்டிருந்த விம்பம் உடைந்ததாலா என்பதை என்னால் அறிய முடியவில்லை உணரமுடியவில்லை.

இராமாயணம் என்ற பெரும் சமுத்திரத்தில் மூழ்கி முத்தெடுத்து அவரவர் பார்வையில் அர்த்தம் தந்தவர்கள் வால்மீகி தொடக்கம் இன்றுவரை பலர் உள்ளனர். இதேபோல் அதன் கிளைகளுக்குள் புகுந்து அர்த்தம் கண்டவர்கள் கூட அனேகம் பேர்.

அந்தவகையில் இராமாயணப் பெருங்கடலில் ராம - ராவணயுத்த இறுதிக் கணங்களை கருவாக்கி அர்த்தம் பொதிந்த புனைவாக படைத்துள்ள திரு.வி.மைக்கல் கொலினை எனக்கு பாராட்ட வார்த்தைகள் இல்லை. நான் தமிழ் இலக்கியத் துறையில் பாண்டித்யம் பெற்ற விமர்சகன் அல்ல.

படைப்பை விமர்ச்சிக்கும் பக்குவமும் எனக்கில்லை. எனது ஆசை 'ராவணாபுரியை' வாசித்தவுடன் எனக்குள் எழுந்த உணர்வுகள் வெளிப்படுத்துவது ஒன்றே!

அது விமர்சன இலக்கியத்துள் அடங்குமா? அடங்காதோ என்பது எனது அக்கறை அல்ல எனக்குத் தேவையும் இல்லை!

ராமாயணம் வால்மீகி மூலமாக பலரது வண்ணத்தில் கம்பர் உட்பட அவரவர் பார்வையில் அவரரவர் ஆசையில் வடிவமைக்கப்பட்டது. அதுபோல் இறுதியுத்த நாட்களை திரு.வி.மைக்கல் கொலின் அவரது பார்வையில் அழகுற தெளிவாக அர்த்தம் தொனிக்க புனைந்துள்ளார். இதிகாசத்தில் இருந்து கதைக்கரு தெரிந்து அதை அழகுற புனைவது படைப்பாளிகள் அனைவராலும் முடியாது. அதற்கு தனிப்பட்ட திறமை தேவை. ஒருவகையில் கூறின் 'கரணம் தப்பினால் மரணம்' என்ற கலைக் கூத்தாடியின் பக்குவத்துக்கு ஒப்பானது. கரணம் சரியானால் கரகோசம் எழும்பும். கரணம் தப்பினால் அவர் மரணம் அடைவார். இந்த பரிசோதனையில் திரு.வி.மைக்கல் கொலின் எனது பார்வையில் கரகோசத்தை பெற்றவராகவே தெரிகின்றார்.

ராவண மன்னர் பற்றி நம்மில் பலரது பார்வை எதிர்மறை கொண்டதாகவே இருந்துள்ளது. ராவண மன்னன் மட்டுமல்ல. அவரது மனைவி மண்டோதரி, தம்பி கும்பகர்ணன், மகன் இந்திரஜித் தவிர அவனது சுற்றம் கூட நமக்கு 'தீட்டு' கொண்டவர்களாகவே கற்பிக்கப்பட்டது.

அத்தகைய தீட்டு நிலையை நீக்கி ராவண மன்னன் ஊடாக தமிழ் நிலப் பெருமை, தமிழ் நிலத்தின் வளம், தமிழர் தம் வெல்ல முடியா வீரம், மற்றாறை மதிக்கும் மாண்பு, யுத்தம் கூட யுத்த தர்மத்தின் ஊடாகவே புரிய வேண்டும் என்ற யுத்த விழுமியம் - யுத்தக் கைதியைக்

கூட மனித உரிமை - மனிதாபிமானமுடன் மதிக்கும் பண்பு. இந்த நிலைமையால் தன் படைக்கோ தனக்கோ ஏற்படும். எந்த ஒரு இழப்பையும் தமிழ் மானமுடன் தமிழ் வீரமுடன் மார்பில் ஏற்கும் மனப்பக்குவம் கொண்டவனாக எடுத்துக் காட்டிய ஒரு படைப்பாக, புனைவாக நான் உணருகிறேன். குறிப்பாக இதுவரை அசிங்கத்தின் அதர்மத்தின், குறியீடாக ராமாயணத்தில் நாம் உணர்ந்து கொண்ட சூர்ப்பனகை என்ற ராவண மன்னனின் தங்கையினை சொர்ணநகையாக்கி தமிழ் தங்கையாக்கியதை எண்ணி பெருமிதமடைகின்றேன்.

அரக்கர் குலமாக அறியப்பட்ட ராவண மன்னர் தமிழ் மன்னனாக பெருமிதப்படுத்தப்படுகின்றமை கூட சிறப்பான புனைவே அதுவே உண்மையும் கூட.

மைக்கல்கொலினைப் போன்றதுக்கொப்பான மறுவாசிப்பு இதுவரை தமிழகத்தில் பல ராமாயணம் தொடர்பாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றாலும் மைக்கல்கொலின் இக்கதைக் கருவை எடுத்தமை. அவர் புனைந்தமை அவரது பார்வை, பதிவுகள் எனக்கு தமிழ் தேசிய விடுதலையுத்தத்தின் இறுதிக்கட்ட சமர்க்களத்தை என்மனதில் காட்சிப்படுத்தியது.

ராவணச்சமர் - ராமன் என்ற மேலாதிக்கவாதியின் சூழ்ச்சிகள், சதிகள், பலசாலிகள் பலரது துணையுடனும் காட்டிக் கொடுப்புடனும் நடைபெற்ற யுத்த தர்மத்தை கடைப்பிடிக்காமல் வஞ்சகத்தனத்தால் வீழ்ந்த ராவணனை கூறுவதன் மூலம் ஆசிரியர் முள்ளிவாய்க்கால் நிகழ்வை முன்னிறுத்திக் கூறாது. கண்முன்னே காட்டி நிற்கின்றார் என்பது போலவே எனக்கு தோன்றுகின்றது. நாற்படையும் கொண்ட அண்ட சராசரங்களையும் ஆட்டிப் படைக்கும் வீரமும் ஞானமும் வித்தையும் கொண்ட ராவணன் நிலமிசை வீழ்ந்தது பற்றி கூறும் போது கூட மனதில் ஓர் காட்சி தோன்றியது என்பதை அதை வாசிப்பவர்களால் மட்டுமே உணர முடியும். இராவணேசனின் புதல்வன் மேகநாதன் என்ற இந்திரஜித்தை உருவகித்த விதம் அபாரம். தன்னை ஆயுதம் அற்ற நிலையில் தாக்கி அழித்த ராம - லக்ஷ்மணர்களை நோக்கி "என் குல வீரன் ஒருவன் உங்கள் தேசத்தின் வாசலுக்கு வந்தே கருவறுப்பான்" என புறமுதுகிடா வீரத்தமிழ் மகன் ஒருவனாக தந்தைக்கும் உதவி தந்தைக்கு முன் தன் இன்னுயிரை நீத்த எம் வீரமறவன் சிறுவேங்கையை கண்முன் காண்பிக்கும் படைப்பு உத்தி கூட பக்குவமானதே.

அதுபோல 'ராவணாபுரி'யை வாசிக்கும் ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு அர்த்தத்தை - குறிப்பாக தமிழ் தேசியம் தொடர்பான பல

அர்த்தங்களை அது கற்பிக்கிறது தமிழர் வீரம், துயரம், சதி - எல்லாவற் றையும் அப்பட்டமாக புட்டு வைத்துள்ளது என்பதுவே எனது கருத்து. தமிழ் தேசியம் நேசிப்போர் (பெயரளவில், உணர்வுடன்) உட்பட வாசிப்பை நேசிக்கும் அனைவரும் ஒரு தடவையாவது வாசிக்க வேண்டிய அண்மையில் வெளிவந்த அற்புத பொக்கிசம் என்பது எனது கருத்து!

**- திரு. கந்தையா தவராஜா**

தமிழர் தளம் 04 – 05 – 2018

**"ஓர்மம்" ஓர் பார்வை**

அண்மையில் ஓர்மம் என்ற சிறுகதையை தமிழர்தளம் பத்திரிகையில் வாசிக்க முடிந்தது. வரலாற்றுக் காவியங்களில் ஒன்றாக விளங்கும் ராமாயணக் கதையின் மீள் வாசிப்பாக அமையைப் பெற்றதே "ஓர்மம்" எனும் சிறுகதையாகும்.

கால ஓட்டத்தில் பல மாற்றங்கள் ஏற்படுவதும், மாறிக் கொண்டிருப்பதும் தவிர்க்க முடியாத சங்கதிகள் ஆகிவிடுகின்றன. அந்த வகையில் ராமாயணத்தில் வருகின்ற ராமன், லக்குமணன், பரதன், சீதை இவர்களே பிரதான பாத்திரங்களாக வார்க்கப்பட்டிருந்தனர். இந்தப் பாத்திரங்களின் குணாம்சங்கள் இவைதான் என எம்மால் மட்டிட்டுக் கூற முடியாது. காவியங்களின் கதாசிரியர்கள் இப்பாத்திரங்களின் குணவியல்புகள் இப்படித்தான் இருந்திருக்கலாம் என அவர்கள் எழுதிய காலகட்டங்களின் தாக்கங்களையும், பாதிப்புக்களையும் வைத்துக் கொண்டே எழுதியிருக்கலாம் எனத் தோன்றுகின்றது.

அந்தவகையில் தற்போதைய காலகட்டத்தில் ஏற்பட்டு மாறிவருகின்ற பெண்கள் தொடர்பான சிந்தனைகளை உள்வாங்கி 'ஓர்மம்' எனும் கதையில் ஊர்மிளையின் பாத்திரம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

பெண் என்பவள் உணர்வுகளையும், உணர்ச்சிகளையும் வெளிப் படுத்த மாட்டாதவள். அடக்கம், பண்பு, அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பவற்றால் கட்டியாளப்படுகின்றவள். இதுவே காலம் காலமாக பெண்கள் பற்றிய எண்ணக்கருவாக நிலைகொண்டு வருகின்றது. இன்று பல வழிகளிலும் முன்னேற்றம் கண்டுள்ள பெண்களிடமும் அடங்கி நடப்பது என்பதுவும் உணர்வுகளைக் கட்டுப்படுத்தும் பாங்கும் இருப்பது தவிர்க்க முடியாததாகி விடுகின்றது.

இந்த நிலையில் ஒரு ஆண் பெண்ணைப் பற்றிச் சிந்திக்கின்றான் என்பதை கதாசிரியர் வி.மைக்கல்கொலின் அவர்கள் முதன்முதலாக தனது கதையில் பரதனின் கூற்று ஒன்றின் மூலம் எடுத்துக் காட்டுகின்றார்.

"அண்ணனும் அண்ணியும் வனவாசம் சென்றார்கள் அவர்களுடன் லக்குமணனும் சென்றது காலக்கொடுமையல்லவா?" என்பதுடன் "அரண்மனை விஷேடங்களில் முனிபுங்கர்களின் வருகையின்போது தற்செயல் நிகழ்வாக ஊர்மிளையைக் காணும்போது அவள் மீது ஏற்படும் பச்சாதாபமும், வியாகுலமும் அவனுக்குத்தானே தெரியும்" என்கிறார். இங்கு முதன்முதலாக ஒரு பெண்ணைப் பற்றி ஆண் சிந்தித்திருப்பதைக் காண முடிகின்றது.

ராமன், சீதை, லக்குமணன் மூவரும் பதின்னான்கு வருடங்கள் வனவாசம் முடிவுற்று நாட்டுக்குத் திரும்பும் செய்தியை மற்றவர்கள் கொண்டாடுகின்றபோது ஊர்மிளை உணர்ச்சியற்றே இருக்கின்றாள்.

இன்று எமது பெண்களில் பெரும்பாலானவர்கள் தமது வாழ்க்கையில் உணர்ச்சியற்று, நடைப்பிணமாக வாழ்ந்து வருகின்றார்கள். ஆனால் அவற்றை அவர்கள் வெளிக்காட்டிக் கொள்வதே கிடையாது.

ராமன் சீதையுடன் லக்குமணன் வனவாசம் சென்றமையை அவளால் பொறுக்க முடியவில்லை "அண்ணனுக்குப் பாதுகாப்பாகக் கூடவே செல்கிறேன்" என அவள் அந்தப்புரம் வந்து அவள் காதுக்குள் ஓதி விட்டு அவளது பதிலைக்கூட எதிர்பாராமல் சென்றதுதான் அவளது மனதில் தினமும் பேரலையாய் ஒலித்துக் கொண்டிருந்தது எனக் காட்டப்படுமிடத்தில் லக்குமணன் ஒரு சராசரி ஆண்மகனாகவே காணப்படுகின்றான். தனது கணவன் தனது கருத்தை எதிர்பார்த்து நிற்கவில்லை, தனது விருப்பம் என்னவென்று அறியவில்லை என்பது ஊர்மிளையின் மனதில் பாரச்சுமையாகி விடுகின்றது. இதன் தொடர்ச்சியாக அவள் சும்மா இருக்கவில்லை. சிந்திக்கத் தொடங்குகின்றாள். அவளது தன்னிலை உணர்வு அவளுடன் போராடுகின்றது. ராமன் குடும்பத்துடன் இருக்க நான் தனித்து விடப்பட்டிருக்கிறேன் என்ற வேதனை அவளை வாட்டுகின்றது.

லக்குமணனுடன் அவள் குடும்பம் நடத்திய காலங்கள், காதல், காமம் இரண்டாலும் அவனுடன் பின்னிப் பிணைந்திருந்த நாட்களையும், சந்தோஷ உணர்வுகளையும் அவள் தனக்குள்ளே மட்டும் எண்ணிப் பார்க்கின்றாள். இவற்றிலிருந்து விடுபடுவதா? இல்லையா? என்ற போராட்டமே அவள் உள்ளத்தை ஆட்கொள்கின்றது.

கௌதம புத்தர் போல் ஊர்மிளையும் இல்லறத்தை விடுத்து

ஞானநிலையைப் பெற்று தவநிலையை அடைந்து விடுகின்றாள். இது ஆண்மகன் ஒருவனுக்கு அவள் கொடுக்கும் தண்டனையாகவே அமைந்து விடுகின்றது. பெண்ணின் உணர்வுகளையும், பெண்மையை மதிக்கத் தவறியவனாகவே லக்குமணன் காணப்படுகின்றான். அவனைத் தண்டனைக்கு உட்படுத்துவதாக ஊர்மிளை எண்ணவில்லை. தானாகவே லக்குமணன் தண்டனைக்குரியவனாக்கப்படுகின்றான்.

வரலாற்றுக் கதையின் வடிவங்களை மறுவாசிப்புக்கு உட்படுத்தும் போது காலச் சூழலுக்கு உள்ளே வருவது தவிர்க்க முடியாததாகி விடுகின்றது. பலபேர் வாசித்துப் பயன்பெற வேண்டிய ஒரு கதையாகவும், பெண்களின் உணர்வுகளையும், உணர்ச்சிகளையும் புடம் போட்டுப் பார்க்கின்ற ஒரு வார்ப்பாகவும் அமையும் படி வடிவமைத்த கவிஞர் வி.மைக்கல் கொலினின் இவ்வாறான பணிகள் தொடர வேண்டும் என வாழ்த்துவதோடு இவ்வாறான சிறுகதைகளை பிரசுரிக்கும் தமிழர் தளத்தையும் வாழ்த்துகிறேன்.

**- வாசுகி குணரத்தினம்**

*தமிழர்தளம் - 18.05.2018*

***

“இந்த வருடத்தில்
உங்கள் சிறுகதைகளும், கவிதைகளும்
நூலாக வெளிவரவேண்டும்”
என்று அன்புக் கட்டளையிட்டு
“பரசுராம பூமி”யின் வெளியீட்டிற்கு
நிதியுதவி அளித்து
இந்நூல்வெளிவரக் காரணமான
நண்பரும் - எழுத்தாளருமான
**மு. நற்குணதயாளன்** (லண்டன்)
அவர்களுக்கு
இதயபூர்வமான நன்றிகள்



அடக்கப்படும் ஓரினத்தின் அவலம் அவரது எழுத்துகளுக்கு ஊக்கசக்தியாக இருந்துள்ளது. “குருசேத்திரபுரம்”, “பரசுராம பூமி”. என்ற கதைகளில் அவர் நேரடியாகவே புராண பாத்திரங்களை வன்னி மண்ணுக்குக் கொண்டு வந்துவிடுகிறார். கண்ணன் மீது மக்கள் கல் எறிவதும், பரசுராமர் வெட்கப்பட்டு வெண் புரவியில் ஏறி வன்னிக்காட்டுக்குள் ஓடுவதும், அவரது தமிழ்த் தேசிய கருத்து நிலையின் பாற்பட்டதாகும், அக்கருத்து நிலை இக்கதைகளில் ஒரு கொதி நிலையோடு வெளி வருகிறது,

- பேரா. சி. மௌனகுரு

சிறுகதைக்கான ஊற்றுக்களும் உத்திகளும் சமகாலத் திலிருந்து மட்டுமன்றி, முற்பட்ட கால வரலாற்றுச் சம்பவங்களிலிருந்தும் தொன்மங்களிலிருந்தும் பிறப்பெடுப்பதுண்டு. ஈழத்து வரலாற்றுச் சம்பவங்கள் சிறுகதைகளாக வெளிவந்தளவிற்கு தொன்மங்களை சார்ந்த தனித் தொகுப்புகள் ஈழத்தில் வெளிவர வில்லை. அவ்விதத்திலே இத்தொகுப்பே ஈழத்தில் வெளி வருகின்ற முதற்தொகுப்பு என்று துணிந்து குறிப்பிடலாம்

- பேரா. செ. யோகராசா

ஒரு படைப்பாளி மாற்றத்தை நோக்கியே இயங்கிக் கொண்டிருக்கிறான். அவன் வாழும் காலத்தினதும் மக்களினதும் குரலாகவும் அதேநேரம் வரலாற்றை மீள்கண்டுபிடிப்புச் செய்பவனாகவும், தமது வரலாற்றை நேர்மையாகப் பதிவுசெய்பவனாகவும் ஒருபடைப்பாளி பல்வேறு வகிபங்குகளுடன் இயங்குகிறான். இந்தநோக்கில் ஒரு படைப்பாளியாக மைக்கல்கொலினின் பணி தன் புனைவுகளில் செறிவாக்கம் பெறுகிறது. அவரது இத்தொகுப்பிலுள்ள கதைகள் ஈழப்போராட்டத்தில் சிக்கி சிதிலமடைந்த மக்களின் வாழ்க்கையை காவிய மொழியில் முன்வைக்க முனைகிறது.

நவீன கதைகூறல், சம்பவங்களால் கதைவாசித்துப் பழகிப்போன தமிழ் வாசக மனதுக்கு மைக்கல்கொலின் ஒரு பின்-நவீனக் கதைசொல்லி போல் புதிய அனுபவத்தை ஏற்படுத்துகிறார். உரையாடும் கதாபாத்திரங்களின்றி, நமக்குள் வாழ்வு பற்றிய பிரக்ஞையை கிளரும் கதாபாத்திரங்களின்றி தன் குரலிலேயே போரையும் அதில் சிக்குண்டு சிதறிய மனிதர்களின் வாழ்வையும் பற்றிக் கதைசொல்கிறார் மைக்கல்கொலின்.

- ஜிஃப்ரி ஹாஸன்

9 789554 041080

மகுடம்